




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:277 | 22-04-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

22.04.2026 சித்திரை 9
புதன்கிழமை

சூரிய உதயம் 6.00

திதி:
வளர்பிறை சஷ்டி விரதம்

நட்சத்திரம்:
இன்று காலை 6.15 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

யோகம் :
இன்று மாலை 4.33 வரை சோபனம் பின்பு அதிகண்டம்.

கரணம்
இன்று காலை 8.47 வரை பத்திரை பின்பு இரவு 7.35 வரை பவம் பின்பு பாலவம்

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.15 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
அனுஷம்

நல்ல நேரம்
காலை: 09:30 – 10:30
மாலை: 04:30 – 05:30

இராகு காலம்
பிற்பகல் 12:00 – 01:30

எமகண்டம்
காலை 07:30 – 09:00

குளிகை
பிற்பகல் 10:30 – 12:00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது!

## '48 மணி நேர அமைதி கால' கட்டுப்பாடுகள் அமல்!

**சென்னை, ஏப்.22**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேற்று மாலையுடன் தங்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தை நிறைவு செய்தனர். இதையடுத்து, வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி மாலை 6 மணி வரையிலான 48 மணி நேர அமைதி கால கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்றுடன் ஓய்ந்த நிலையில், இன்று காலை முதல் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னையில் உள்ள சோழிங்கநல்லூர், வேளச்சேரி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

சென்னையில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின், ஆட்டோ ஓட்டியும், இளைஞர்களிடம் செல்ஃபி எடுத்தும் உற்சாகமாக பிரச்சாரம் செய்தார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று தான் போட்டியிடும் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று தான் போட்டியிடும் காரைக்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் வாகனப்பேரணி சென்று வாக்கு சேகரித்தார். இன்று மாலையில் காரைக்குடி பாண்டியன் திரையரங்கம் திடலில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.

தவெக தலைவர் விஜய் இன்று சென்னையில் இறுதிகட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். நந்தனத்தில் நடந்த பிரச்சாரத்தில் விஜய் கலந்துகொண்டு பேசினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியிட்டது. அன்றைய தினமே நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர், நிலைக் கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என நான்கு முனைப் போட்டி நிலவுகிறது.

234 தொகுதிகளிலும் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 75,064 வாக்குச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளன. தேர்தல் பணியில் 83,875 போலீஸார், 40,427 அரசுஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பணியில் 300 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம், கட்சியின் சின்னம் ஆகியவை பொருத்தப்பட்டு, தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவை பலத்த பாதுகாப்புடன் இன்று (ஏப்.22) வாக்குச்சாவடி வாரியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.



### அரசியல் கட்சிகள் கடைபிடிக்கவேண்டிய வழிகாட்டுதல்கள்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. 21ம் தேதி மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு நாளான 23-ம் தேதி மாலை 6 மணி வரையிலான 48 மணி நேர அமைதி காலத்தில் அரசியல் கட்சிகள் கடைபிடிக்கவேண்டிய வழிகாட்டுதல்களை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

ஏப்.21-ம் தேதி மாலை 6 மணி முதல் 23-ம் தேதி மாலை 6 மணி வரை தேர்தல் தொடர்பான எந்தவொரு பொதுக் கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ, அதில் பங்கேற்கவோ கூடாது. தேர்தல் தொடர்பான விவகாரங்களை திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, குறுஞ்செய்தி, இணையம், வாட்ஸ் அப், ஃபேஸ்புக் போன்ற வலைதளங்கள் என எந்த வடிவிலான தகவல் தொடர்பு மூலமாகவும் மக்களின் பார்வைக்கு கொண்டுசெல்லக் கூடாது. மீறினால் 2 ஆண்டு சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

தொகுதிக்கு வெளியே இருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் என தொகுதி வாக்காளர்கள் அல்லாத அனைவரும் 21ம் தேதி மாலை 6 மணிக்கு தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

நேற்று (ஏப்.21) முதல் ஏப்ரல் 23 வரை டாஸ்மாக் கடைகள், பார்களை மூடுமாறும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது..

# திருச்சூர் பூரம் நிகழ்வில் வெடி விபத்து: 15 பேர் உயிரிழப்பு; 40 பேர் காயம்

**திருச்சூர், ஏப்.22:**

கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள முண்டத்திக்கோடு பகுதியில் அமைந்துள்ள பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த விபத்தில் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளதாக தகவல். இது கேரள மாநிலத்தில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

வரும் 26-ம் தேதி உலக புகழ்பெற்ற திருச்சூர் பூரம் விழா நடைபெற உள்ளது. இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. அந்த வகையில் முண்டத்திக்கோடு பகுதியில் இந்த விழாவுக்கான பட்டாசு தயாரிப்பு பணிகள் சுமார் 5 ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாய நிலத்தில் நடைபெற்றது. இந்த இடத்தில் தயாரிக்கப்பட்ட பட்டாசுகள் அங்கு அமைக்கப்பட்ட கிடங்கில் வைக்கப்பட்டன.



இந்நிலையில், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் பட்டாசு தயாரிப்பு பணிகள் நடைபெற்று வந்த இடத்தில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அங்கு வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் வெடித்த காரணத்தால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டதாகவும் தகவல். இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர் என கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த விபத்தில் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் திருச்சூர் அரசு மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தனது இரங்கலை பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்த விபத்து மிகுந்த வேதனை அளிப்பதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு ரூ.2 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000-ம் அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பதை உறுதி செய்ய கேரள தலைமை செயலருக்கு அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், மருத்துவ வல்லுநர்களை வெளி மாநிலங்களில் இருந்தும் அழைத்து வர அரசு தயார் என அவர் கூறியுள்ளார். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தனது இரங்கலை அவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய விமானங்கள் வான்வழி தடை நீட்டிப்பு!

**கொல்கத்தா, ஏப்.22:**

இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வழியைப் பயன்படுத்தத் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்திய விமானங்கள் தனது வான்வழியை பயன்படுத்துவதற்கு ஏப்ரல் 24 வரை பாகிஸ்தான் தடை விதித்திருந்த நிலையில் தற்போது அந்தத் தடையை மே 24 வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.






# யோகி ஆதித்யநாத் பேரணி!

**புதுடெல்லி, ஏப்.22:**

மகளிர் இடஒதுக்கீடு தொடர்பான அரசியலமைப்புத் திருத்த மசோதா தோல்வியடைந்ததைக் கண்டித்து நடைபெற்ற பேரணியில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கலந்துகொண்டார்.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதற்கும், மக்களவை இடங்களின் எண்ணிக்கையை 816-ஆக உயர்த்துவதற்கும் மத்திய அரசு கொண்டுவந்த அரசியலமைப்பு (131-வது திருத்த) மசோதா, கடந்த வெள்ளிக்கிழமை மக்களவையில் தோல்வியடைந்தது.

ஜன் ஆக்ரோஷ் மகிளா பாதயாத்திரை எனும் இந்தப் பேரணி, காளிதாஸ் மார்க்கில் அமைந்துள்ள ஆதித்யநாத்தின் அதிகாரப்பூர்வ இல்லத்திலிருந்து தொடங்கி, உத்தரப் பிரதேச சட்டப்பேரவை வளாகத்தில் நிறைவடைந்தது.பேரணி தொடங்குவதற்கு முன்னதாக, தனது இல்லத்திற்கு வெளியே திரண்டிருந்த கட்சித் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய ஆதித்யநாத்,

காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, திரிணமூல் காங்கிரஸ் மற்றும் திமுக ஆகிய கட்சிகளின் பெண்களுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு எதிராக, நாடு முழுவதும் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் நிலவும் அதிருப்தியின் அடையாளமாக இந்தப் பேரணி அமைகிறது என்று அவர் கூறினார்.

# வாக்காளர்களை தொந்தரவு செய்தால் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்க நேரிடும்

**கொல்கத்தா, ஏப்.22:**

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட வாக்குப் பதிவு வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் நேற்று மாலை 6 மணியுடன் பிரசாரம் நிறைவுபெறுகிறது.

இந்த நிலையில், டார்ஜிலிங் மாவட்டம் குர்சியோங் பகுதியில் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்ட அமித் ஷா பேசியதாவது:

"திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குண்டர்களும், சமூக விரோதிகளும் உங்கள் காதுகளைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். வாக்காளர்களுக்கு தொந்தரவு விளைவித்தால், மே 5-க்கு பிறகு உங்களை தலைகீழாக தொங்கவிடுவோம். இல்லையெனில் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருக்க நேரிடும்." என்றார்.

மேலும், அவர் பேசுகையில், "காங்கிரஸும், திரிணமூல் காங்கிரஸும் நீண்ட நாள்களாகவே கோர்க்கா சகோதரர்களை வஞ்சித்து வருகிறார்கள். கடந்த ஒன்பது ஆண்டுகளாக நான் மலைப்பகுதிக்கு வருகை தந்து வருகிறேன். நீண்ட காலமாக நீடித்து வரும் பிரச்னைகளுக்கு நாங்கள் தீர்வு காண்போம்.



மமதா பானர்ஜி அரசின் பழங்குடியினர் மேம்பாடு, மலைப்பகுதிகள் மற்றும் வடக்கு வங்கத்துக்கான பட்ஜெட் ரூ. 2,000 கோடியாகும். ஆனால், மதரஸாக்கள் மற்றும் முஸ்லிம்களுக்காக ரூ. 5,700 கோடியை மமதா அரசு ஒதுக்கியுள்ளது." என்றார்.

இதனைத் தொடர்ந்து மேற்கு வர்தமான் தொகுதியில் பேசிய அமித் ஷா, "தேர்தல் முடிந்தவுடன் தனது மருமகனை மமதா முதல்வராக்கப் போகிறார். ஆனால் உங்கள் கனவு ஒருபோதும் நனவாகாது. உங்கள் மருமகன் ஒருபோதும் முதலமைச்சராக ஆக மாட்டார்.பாஜக வெற்றி பெற்றால் வெளியாட்கள் முதல்வராவார் என்று தவறான பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறார். மேற்கு வங்கத்தின் முதல்வராக இம்மாநிலத்தில் பிறந்த, வங்க மொழியிலேயே கல்வி பயின்ற ஒருவரைதான் முதல்வராக்குவோம் என்பதை தெளிவுபடுத்துகிறேன்" எனத் தெரிவித்தார்.




# திருக்குறள் குறள்-597

சிதைவிடத் தொல்கார் உரவோர்
புதையம்பிற் பட்டுப்பா டூன்றுங் களிறு



உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானைத் தன் பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார்.

## சிந்திக்க ஒரு நொடி



சந்தோஷம் என்பது
நீ வாழும் இடத்தில்
இல்லை...

நீ வாழும் விதத்தில்
தான் உள்ளது
என்பதை உணர்ந்து
கொள்.....

**உஷா முத்துராமன்**

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்



**கரூர், ஏப். 22:**

வாசவி கன்யகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் வாசவி ஜெயந்தி விழாவை முன்னிட்டு 6-ஆம் நாள் மூலவர் வெள்ளி கவசத்துடன் வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன், தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## அன்ன வாகனத்தில் அன்னை மீனாட்சி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்




வாடிப்பட்டி அருகே குலசேகரன் கோட்டை மீனாட்சி அம்மன் கோயிலில் சித்திரை திருவிழாவில் இரண்டாம் நாள் அன்ன வாகனத்தில் அன்னை மீனாட்சி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான படிவங்கள் அனுப்புவதற்கான முன்னேற்பாடு பணிகள்



**திருவண்ணாமலை, ஏப்.22:**

திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற வுள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான படிவங்கள் மற்றும் பொருட்கள் அனுப்புவதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க.தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை

# தேர்தலுக்கு மறுநாள் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்க மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு ஜாக்டா ஜியோ கோரிக்கை!

**வேலூர், ஏப். 22:**



தேர்தல் பணியில் மாவட்டம் ஆகும் முழுவதும் ஆசிரியர்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டனர். எனவே தேர்தல் நடைபெறும் நாளுக்கு அடுத்த நாள் 24.04.2026 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கும் விடுமுறை நாளாக அறிவிக்க கோரி வேலூர் மாவட்ட ஜாக்டா ஜியோ அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று வேலூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சியர் அவர்களை நேரில் சந்தித்து மனு அளிக்க ஜாக்டா ஜியோ நிர்வாகிகள் வருகை தந்தனர். மாவட்ட ஆட்சியர் முகாம் சென்றிருப்பதால் தேர்தல் பிரிவு வட்டாட்சியர் வி.ரமேஷை யமுனை சந்தித்து கோரிக்கை மனுவை ஜாக்டா ஜியோ நிர்வாகிகள் அளித்தனர். மேலும் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் மனு அளித்துள்ளனர்.

ஜாக்டா ஜியோ பேரமைப்பின் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர் முனைவர்.செ.நா. ஜனார்த்தனன் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் டி.டி.ஜோஷி, ஜி.சீனிவாசன், ஆ.ஜோசப்அன்னையா மற்றும் மாவட்ட உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் ஆர்.ஜெயக்குமார், ஜி.டி.பாபு, எம்.எஸ்.செல்வகுமார், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எம். எஸ்.தீனதயாளன், மகளிர் துணைக்குழு தலைவர் ச.ஜோதி, முன்னாள் மாவட்ட செயலாளர் அ.சேகர், வேலூர் வடக்கு வட்ட கிளை தலைவர் எஸ். சபரிகிரிவாசன், தமிழ்நாடு முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர் கழக வேலூர் கல்வி மாவட்ட தலைவர் வி.திருக்குமரன், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க சுரேஷ்குமார் உள்ளிட்டோர் கோரிக்கை மனுவை அளித்தனர்.

கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது.

1.தேர்தல் பணியில் மாவட்ட முழுவதும் ஆசிரியர்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டனர். எனவே தேர்தல் நடைபெறும் நாளுக்கு அடுத்த நாள் 24.04.2026 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கு விடுமுறை நாளாக அறிவிக்க அறிவிக்க கோருகின்றோம்.

2.16.04.2026 முதல் பள்ளி மாணவர்களுக்கு கடைசி வேலை நாளாக அறிவிக்கப்பட்டு பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்துள்ள நிலையில் ஆசிரியர்கள் மட்டும் பள்ளி பணிகளுக்காக 25.04.2026 வரை வருகை தர பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

3.16வது சட்டமன்ற தேர்தல் 06.04.2024 செவ்வாய்கிழமை நடைபெற்ற போது அதற்கு அடுத்த நாள் 07.04.2024 புதன்கிழமை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை நாளாக அன்றைய வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமிகு.அ.சண்முகசுந்தரம் அவர்கள் ஆசிரியர்களின் கோரிக்கயினை ஏற்று அறிவித்துள்ளார்கள்.

4.தேர்தல் பணியில் மாவட்ட முழுவதும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டனர்.

தேர்தல் நடைமுறைகள் மற்றம் விதிகளுக்கு உட்பட்டு உடல் நலகுறைபாடு காரணமாக பணிசெய்ய இயலாத நிலையில் விண்ணப்பித்துள்ள ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விலக்கு வழங்கிட கோருகின்றோம்.

5.சட்டமன்ற தொகுதி மாறி பணி செய்ய பணிக்கப்பட்டுள்ள பலருக்கு தபால் வாக்குகள் இன்னமும் வழங்கப்படாத நிலை உள்ளது. தாங்களும் உரிய நடவடிக்கை உடன் மேற்கொண்டு தபால் வாக்குகள் வழங்கிட ஜாக்டா ஜியோ பேராமைப்பின் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

# வாடிப்பட்டியில் திருச்சி சிவா தேர்தல் பிரச்சாரம்

**வாடிப்பட்டி, ஏப்.22:**




மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி தி.மு.க வேட்பாளர் வெங்கடேசனுக்கு வாக்குகள் சேகரித்து திருச்சி சிவா எம் பி வாடிப்பட்டி தாதம்பட்டி மந்தை திடலில்தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

இந்த பிரச்சார பொதுக் கூட்டத்திற்கு பேரூர் செயலாளர் மு பால்பாண்டியன் தலைமை தாங்கினார் ஒன்றிய செயலாளர் பால ராஜேந்திரன், சோழவந்தான் பேரூராட்சி தலைவர் ஜெயராமன், துணைத் தலைவர்கள் வழக்கறிஞர் கார்த்திக்,சத்திய பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் கோகுல்நாத் வரவேற்றார்.

இந்த கூட்டத்தில் திருச்சி சிவா எம் பி சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசனுக்கு ஆதரவாக வாக்குகள் சேகரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். இதில் ஏராளமான திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் முன்னாள் பேரூர் செயலாளர் மு.பா பிரகாஷ் நன்றி கூறினார்.

## சி.வெ.கணேசன் வாக்கு சேகரிப்பு



திட்டக்குடி சட்டமன்ற தொகுதியில் இளமங்கலம் முதல் கோழியூர் வரை உள்ள 24 வார்டுகளிலும் திமுக சார்பில் சி.வெ.கணேசன் சூரியன் சின்னத்திற்கு தீவிர சூராவளி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.அவருக்கு அனைத்து வார்டுகளையும் பெண்கள் மாலை அணிவித்தும் மலர் தூவியும் வரவேற்பு அளித்தனர். அதுசமயம் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மல்லிகார்ஜுன கார்கேவை மதாரம்மா கனி பாரூக் சந்திப்பு



அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களை மரியாதை நிமித்தமாக வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் சந்தித்தார்.


## சுவாமி, அம்பாள் பூதம், அன்னவாகனத்தில் திருவீதியுலா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா 2026- 20.04.2026 மாலை சுவாமி, அம்பாள் பூதம், அன்னவாகனத்தில் திருவீதியுலா

## ஆரணி சிறுமூர் அருள்மிகு வீர ஆஞ்சநேயர் ஐந்தாம் நாள் கருட வாகன உற்சவம்

**ஆரணி, ஏப்.22:**



ஆரணி அருகில் சிறுமூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள சுயம்பு அருள்மிகு வீர ஆஞ்சநேயர் ஆலயத்தில் பத்து நாள் பிரம்மோற்சவ பெருவிழா நடந்து வருகிறது. நேற்று ஞாயிறு அன்று ஐந்தாம் நாள் கருணீகர் குலத்தினர் கருடவாகன உற்சவம் வெகு சிறப்பாக நடத்தினர்.

முன்னதாக காலையில் சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். திரு. தனசேகரன் அவர்களின் தலைமையில் கருணீகர் குல அன்பர்களால் ஸ்ரீ வீரஆஞ்சநேயருக்கு மேளவாத்தியத்துடன் வரிசை கொண்டுவரப்பட்டு மாலை உற்சவமூர்த்திக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வண்ண விளக்கொளியில் இரத வீதியில் உலா வந்து அருள் பாலித்தார்.திருக்கோயில் பட்டாச்சாரியார் நரசிம்ம சுவாமிகள் தலைமையில் பக்தகோடிகள் இல்லங்களுக்கு முன் வீர ஆஞ்சநேயர் சுவாமிக்கு ஆராதனைகள் நடைபெற்றன. மேலும் இவ்வாண்டு கருணீக குலத்தினரால் கருட வாகனம் புதுப்பிக்கப்பட்டது என்பது சிறப்புச் செய்தி. ஏழாம் நாள் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாள் தீர்த்தவாரியும் நடைபெற உள்ளது.

# வேலூர் சிஎம்சி வளாகத்தில் 2 நாட்கள் நடந்த வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வு சுகாதார பிரசாரம்!

**வேலூர், ஏப். 22:**




வெப்பம் தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வு பொது சுகாதார பிரச்சாரம் ஒன்று, 2026 ஏப்ரல் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில், கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியின் வேலூர் வளாகத்தில் நடைபெற்றது. இதை வேலூர் மாநகராட்சியின் நகர சுகாதார அலுவலர் டாக்டர் பி. பிரதாப் குமார் 20-ம் தேதி தொடங்கி வைத்தார்.

வெப்பம் தொடர்பான நோய்களைக் குறைப்பதற்கான முதன்மை முயற்சியாக, நோய்த்தடுப்பின் முக்கியத் துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

வெப்பம் தொடர்பான நோய்களைத் தடுப்பதற்கும், அதற்கான செயல்முறை திட்டங்களை செயல்படுத்துவதற்கும் ஒரு பணிக்குழுவை அமைக்கும் முயற்சியையும் அவர் பாராட்டினார். மேலும், ஆரம்ப சுகாதார மையங்கள் உட்பட அரசு மருத்துவமனைகளிலும் இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

கடந்த ஆண்டு போக்குவரத்து சிக்னல்களுக்கு அருகில் பசுமை வலைக் கூரைகளை அமைப்பதில் மாநகராட்சியுடன் இணைந்து செயல்பட்ட சிஎம்சி நிறுவனத்திற்கு அவர் நன்றி தெரிவித்தார். துணை இயக்குநர் டாக்டர் பென்னி பால் வில்சன், மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் ஐ. ராஜேஷ், செவிலியர் கண்காணிப்பாளர் ஆலிஸ் சோனி மற்றும் பொதுக்கண்காணிப்பாளர் ரேனி சார்லஸ் உள்ளிட்ட அதிகாரிகள் இந்தத் தொடக்க விழாவில் தங்கள்வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, குறிப்பாக மருத்துவமனை வளாகத்தில் வெப்பத்தைத் தணிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குத் தங்கள் ஆதரவையும் வழங்கினர்.

துணைப் பொதுக் கண்காணிப்பாளர் சோனியா வலஸ் ஏற்பாடு செய்திருந்த சுவரொட்டி, ஸ்லோகன் மற்றும் காணொளிப் போட்டிகளில் பல ஊழியர்கள் பங்கேற்றுப் பரிசுகளைப் பெற்றனர். இந்த விழிப்புணர்வுத் திட்டமானது, நோயாளிகள், பராமரிப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் பன்மொழித் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டி கள், பொம்மலாட்டங்கள் மற்றும் விளையாட்டுகள் உள்ளிட்ட பல்வேறு முறைகள் மூலம், உண்ணவும், பருகவும் உகந்தவை (பழங்கள், பழச்சாறுகள், நிறைய தண்ணீர் மற்றும் ORS), அணிய வேண்டிய உடை (இளம் நிறப் பருத்தி ஆடைகள்), குடை அல்லது தொப்பி பயன்படுத்துதல், உடலை நீரேற்றத்துடன் வைத்திருத்தல் மற்றும் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெயிலைத் தவிர்த்தல் போன்றவை குறித்த அறிவை வழங்குவதையும், தடுப்பு நடவடிக்கைகளை மீண்டும் வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில், மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் ராஜேஷ் அவர்களால் HRI பணிக்குழு உருவாக்கப்பட்டது.

இதற்கு மருத்துவ மற்றும் நோய்த்தணிப்பு மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் ஜெனிஃபர் ஜெபா.எஸ், இணைப் பொது கண்காணிப்பாளர் ஆனந்த் சாமுவேல் மற்றும் மூத்த HICC அதிகாரி டாக்டர் ஹேமா பால் ஆகியோர் தலைமை தாங்கினர். நோயாளிகள், பார்வையாளர் கள், பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணி யாளர்களிடையே HRI-ஐத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்வதில் இந்தப் பணிக்குழு உறுதியாக உள்ளது.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...


### தேர்தல் போட்டியில் இருந்து விலகிய நடிகர் மன்சூர் அலிகான்

திருச்சி லால்குடி தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் நடிகர் மன்சூர் அலிகான் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: தேர்தலின் போக்கு தற்போது மாறியுள்ளது. தேர்தலில் செலவழிக்கும் அளவுக்கு என்னிடம் பொருளாதார வசதி இல்லை. மேலும், எனக்கு உடல் நிலை சரியில்லாததால், சிகிச்சையில் இருக்கிறேன். மத்திய அரசால் தமிழகத்துக்கு இக்கட்டான நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தை காப்பாற்ற திமுக தலைவர் ஸ்டாலினால்தான் முடியும் என திடமாக நம்புகிறேன். அதனால் தமிழகம் முழுவதும் திமுகவுக்கு ஆதரவு தெரிவித்து நான் லால்குடி தொகுதியில் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். நான் யாரிடமும் காசு வாங்கிக் கொண்டுவிலகவில்லை என்றார்.

### அன்புமணியின் வேட்பாளர்களை நிராகரிக்க ராமதாஸ் வேண்டுகோள்




அன்புமணி நிறுத்தியுள்ள வேட்பாளர்களை நிராகரிக்க வேண்டும் என்று வாக்காளர் களுக்கு ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட வீடியோவில் பேசியிருப்பதாவது: அன்புமணி தலைமையிலான அணி, மக்கள் சேவைக்காக இல்லாமல், அதிகாரம் கிடைத்தால் அதன் மூலம் பணம் சம்பாதிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளது. நான் வளர்த்தெடுத்த பிள்ளைகள் இன்று பணத்துக்காக அணி மாறி, கொள்கையற்ற கூட்டத்தில் இணைந்திருப்பது வருத்தமளிக்கிறது. பிறந்தநாள், திருமண நாள் போன்ற முக்கிய தருணங்களில் கூட ஒரு மகனாக தன் கடமையை செய்யாதவர் அன்புமணி.

குறிப்பாக, அண்மையில் நான் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சேலம் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிய நிலையில், ஒரு வார்த்தை கூட நலம் விசாரிக்க வராதவர் அன்புமணி. அன்புமணியின் தலைமையிலான அணி போட்டியிடும் 18 தொகுதிகளிலும் வாக்காளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். வாக்காளர் பெருமக்கள், இவர்களை நிராகரித்து, உண்மையாக உங்களுக்கு சேவை செய்யும் நல்லவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில் 5938 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை: மத்திய சிறப்புப் பார்வையாளர்



தமிழகத்தில் 5,938 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாகக் கண்டறியப்பட்டு, அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மத்திய சிறப்பு தேர்தல் பார்வையாளர் பிரதாப் சிங் தெரிவித்தார்.

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் பிரசாரம் உள்ளிட்ட நடைமுறைகளில் உள்ள சிக்கல் குறித்தும், அவற்றுக்குத் தீர்வு காண்பது குறித்தும் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் வருமான வரித் துறை அலுவலக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் திமுக, அதிமுக, பாஜக உள்ளிட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். அதையடுத்து, செய்தியாளர்களிடம் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மத்திய சிறப்புப் பார்வையாளர் பிரதாப் சிங் கூறியதாவது: இதுவரை ரூ.1,200 கோடி அளவுக்கு ரொக்கம், தங்கம், வெள்ளிப் பொருள்கள், போதைப் பொருள்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ரூ.500 கோடி மதிப்பிலானவை தொடர்பாக வழக்குகள் பதியப்பட்டுள்ளன. போதைப் பொருள்களைப் பொருத்தவரை திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகமாகவும், அடுத்ததாக சென்னையிலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை மாவட்ட எல்லைப் பகுதியில் கண்காணிப்பு, பாதுகாப்பை பலப்படுத்த மாவட்டத் தேர்தல் அலுவலர் கோரியுள்ளார். அதனால் கூடுதலாக துணை ராணுவப் படையினர் சென்னை மாவட்ட எல்லையில் நிறுத்தப்படுவர்.

கைப்பேசி செயலிகள் மூலம் பணப் பட்டுவாடா செய்யப்படுவதைத் தடுக்க வருமான வரித் துறையினருடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது. சென்னை, சேலம், ஒசூரில் அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு டோக்கன் அளித்தது தொடர்பாக வழக்குப் பதிந்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அளவில் 5,938 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாகக் கண்டறியப்பட்டு, அங்கு கூடுதலாக பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

## தேர்தல் முடியும் வரை ஓய்வின்றி விழிப்புடன் பணியாற்ற வேண்டும்: ஸ்டாலின் அறிவுறுத்தல்



திமுக வாக்குச்சாவடி முகவர்கள் இன்னும் 2 நாட்கள் ஓய்வின்றி உழைக்க வேண்டும். தேர்தல் நாளில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 23-ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், தேர்தல் பணிகள் தொடர்பாக திமுக வாக்குச்சாவடி முகவர்கள் சுமார் 75 ஆயிரம் பேருடன் கட்சித் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் நேற்று 'கால் பிரிட்ஜிங்' தொழில்நுட்பம் மூலமாக செல்போனில் கலந்துரையாடினார்.

அப்போது, அவர் பேசியதாவது: திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய இன்னும் 2 நாட்கள் முழு மூச்சுடன் ஓய்வின்றி உழைக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியம். மத்திய பாஜக அரசு நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை சட்டத்தை கொண்டு வர முயன்றது. அந்த சதியை போராடி வென்றோம்.

சட்டப்பேரவையில் நாம் வலுவாக இருக்கும் வரை டெல்லியால் தமிழகத்தின் உரிமைகளைத் தொட முடியாது. எனவே, ஒவ்வொரு வாக்குச்சாவடி முகவரும் 2 நாட்கள் அவரவர் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வீடுகளுக்கு மீண்டும் ஒருமுறை சென்று ஆதரவு கேட்க வேண்டும்.

திமுக கூட்டணிக்கு ஆதரவான வாக்குகள் ஒன்றுகூட விடுபடக்கூடாது. தன்னார்வலர்களை தயார் நிலையில் வைக்க வேண்டும். வாகன வசதிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். முதியோர், மாற்றுத் திறனாளிகள் எளிதில் வந்து வாக்களிக்க, அவர்களை நேரில் சென்று அழைத்துவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சியினர் முறைகேடுகளில் ஈடுபட முயற்சிக்கலாம். எனவே, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் விழிப்புடன் இருக்க வேண்டும். விதிமீறலோ, முறைகேடோ நடந்தால் உடனேவார் ரூம் எண்ணுக்கு (08069446900) அழைத்து புகார் அளிக்க வேண்டும்.

தேர்தல் நாளில் வாக்குப்பதிவு தொடங்கி, கடைசி வாக்குபதிவாகும் வரை அங்கு இருக்க வேண்டும். வாக்குப்பதிவு முடிந்த பிறகு, பதிவான வாக்குகளை உறுதிப்படுத்தி, வார் ரூமுக்கு தகவல் தெரிவித்து, படிவம் 17-ஐ சேகரித்த பிறகுதான் ஓய்வெடுக்க வேண்டும்.

தேர்தல் முடிவுகள் வரும் போது, ஒவ்வொரு தொகுதியிலும் அதிக வாக்குகளைப் பெற்றுத் தந்த வாக்குச்சாவடி முகவரை நேரில் சந்தித்துப் பாராட்டுவேன். தமிழக மக்களின் பேராதரவோடு அடுத்தமாதம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்பது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

## வாக்குசாவடி அருகே தயார் நிலையில் மருத்துவக் குழுக்கள், ஆம்புலன்ஸ் வசதி!

தமிழகத்தில் அனைத்து வாக்குச்சாவடிகள் அருகேயும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக நடமாடும் மருத்துவக் குழுக்களையும், ஆம்புலன்ஸ் வாகனங்களையும் தயார் நிலையில் வைத்திருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மாநிலம் முழுவதும் வரும் 23-ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறும் வாக்குப்பதிவுக்காக 75,000-க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கண்காணிப்பு கேமராக்கள், குடிநீர் வசதிகள், சாய்தளங்கள், நாற்காலிகள், கழிப்பறை வசதிகள் என பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புகளுடன் அவை அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களாக தமிழகம் முழுவதும் வெயில் சுட்டெரித்து வருகிறது. நாள்தோறும் பல மாவட்டங்களில் 100 டிகிரியைக் கடந்து வெயில் பதிவாகிறது. இத்தகைய சூழலில் வெப்பவாதம், சிறுநீர்ப் பாதைத் தொற்று, மயக்கம், நீர்ச்சத்து இழப்பு பாதிப்புகள் அதிகமாக பதிவாகக் கூடிய நிலை எழுந்துள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்குச்சாவடிகளுக்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழுக்கள் வீதம் 500-க்கும் மேற்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதொடாபாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

வாக்குச்சாவடிகளில் ஆங்காங்கே உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதாரத்துறை சாா்பில் மருத்துவ முகாம் அமைக்கப்படும். இதைத் தவிர நடமாடும் குழுக்களும் செயல்படும். ரத்த அழுத்தம், சாக்கரை நோய், நீர்ச்சத்து இழப்பு, இதய நோய்கள், வெப்பவாத பாதிப்புகளுக்கு உடனடியாக சிகிச்சையளிக்கத் தேவையான மருந்துகள் அங்கு தயாராக வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்கெனவே வெப்பவாதத்துக்கான சிறப்பு வாா்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. உயா் சிகிச்சைத் தேவைப்படுவோா் அங்கு அழைத்துச் செல்லப்படுவா.

அதற்கேற்ப மாநிலம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஆங்காங்கே தயாா் நிலையில் நிறுத்தி வைக்கப்பட உள்ளன. அந்த வாகனங்களிலும் உயிா் காக்கும் அவசர சிகிச்சைக்கான அனைத்து கட்டமைப்புகளும், மருந்துகளும் இருக்கும்.

வாக்குப்பதிவு நாளில் மருத்துவ சேவைகளுக்கான பணிகளில் 4,000-க்கும் மேற்பட்டோா் ஈடுபடுத்தப்பட உள்ளனா் என்று அவா்கள் தெரிவித்தனா்.

## "நான் உதயசூரியனாகவே மாறிவிட்டேன்" - பிரேமலதா நெகிழ்ச்சி



திருக்கோவிலூர் தொகுதி திமுக வேட்பாளர் கவுதமசிகாமணியை ஆதரித்து, திருவெண்ணெய் நல்லூரில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது: திருக்கோவிலூர் தொகுதி மற்றும் விழுப்புரம் மாவட்டத்துக்கு திமுக முன்னாள் அமைச்சர் பொன்முடி ஏராளமான திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

திருவெண்ணெய்நல்லூர் மற்றும் திருக்கோவிலூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொண்டு வந்தவர் முதல்வர் ஸ்டாலின் மற்றும் அப்போதைய உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடி என்பதை யாரும் மறுக்க முடியாது.

மாணவர்களின் உயர்கல்விக்கு பெரியளவில் உதவி செய்துள்ளனர். ஒரே சட்டப்பேரவை தொகுதிக்கு இரு அரசு கல்லூரியை கொண்டு வந்த பெருமை பொன்முடியைச் சாரும். இந்த வரலாறு தொடர கவுதமசிகாமணிக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். இவரது வெற்றி, தேமுதிகவின் வெற்றி, விஜயகாந்துக்கு தரப்போகும் வெற்றி என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

இது விவசாயம் சார்ந்த பூமி. ஒரு குவிண்டால் நெல் ரூ.4,500-ம், ஒரு டன் கரும்புக்கு ரூ.4 ஆயிரம் வழங்கப்படும். 23 கட்சிகளுடன் இணைந்து மெகா கூட்டணியை முதல்வர் ஸ்டாலின் அமைத்துள்ளார். மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி உறுதி. தமிழகத்தில் 2-வது முறை முதல்வராக ஸ்டாலின், 7-வது முறையாக திமுக ஆட்சி அமைக்கும். அப்போது ரூ.8 ஆயிரம் மதிப்பில் கூப்பன், மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரம் மற்றும் 8-ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் உட்பட அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும். ஆயிரம் கைகளை கொண்டு மறைத்தாலும் ஆதவனை மறைக்க முடியாது. நான், இன்று (நேற்று) தேமுதிகவுக்கு பிரச்சாரம் செய்யவில்லை. 7 தொகுதிகளில் உதயசூரியனுக்காக பிரச்சாரம் செய்கிறேன். திருக்கோவிலூர் திமுக வேட்பாளர் கவுதமசிகாமணிக்கு தொடங்கி, பண்ருட்டி, நெய்வேலி, திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி என எல்லாமே உதயசூரியன்தான். அதனால் நான், உதயசூரியனாகவே மாறிவிட்டேன். கூட்டணித் தர்மத்தை மதிப்பது குறித்து நமக்கு சொல்லிக் கொடுத்தவர் விஜயகாந்த்; வழி நடத்துபவர்கள் தேமுதிக வீரர்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## தேர்தல் நாளன்று மாற்றுத்திறனாளிகள், முதியோர் பேருந்தில் இலவசமாக பயணிக்கலாம்!



சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் நாளான வியாழக்கிழமை (ஏப். 23), மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், பாா்வை குறைபாடு உடையவா்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய சாதாரண கட்டண மாநகா் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கலாம்.

இது குறித்து சென்னை மாநகா் போக்குவரத்துக் கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய சென்னை மாநகா் போக்குவரத்துக் கழக சாதாரண கட்டண பேருந்துகளில் பயணம் செய்யும்போது, ஏதேனும் வயது சான்று, வாக்காளா் அடையாள அட்டையைக் காண்பித்து, மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பயண டோக்கன்களைக் கொடுக்காமல், கட்டணமில்லா பயணச்சீட்டை நடத்துநரிடம் இருந்து பெற்று பயணிக்கலாம்.

மேலும், மாற்றுத்திறனாளிகள், பாா்வைக் குறைபாடு உள்ளவா்கள் வாக்குகளைப் பதிவு செய்ய பேருந்தில் பயணம் செய்யும்போது, தங்கள் அடையாள அட்டை, வாக்காளா் அடையாள அட்டையைக் காண்பித்து கட்டணமில்லா பயணச்சீட்டை பெற்று பயணிக்கலாம்.

இந்த சலுகையில் தோ்தல் நடைபெறும் நாளான வியாழக்கிழமை மட்டுமே பயணிக்க முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 6-ஆவது வெற்றியை எதிர்நோக்கும் இபிஎஸ்!



சேலம் மாவட்ட மேற்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதி. அதிமுக பொதுச் செயலரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமி போட்டியிட்டு வெற்றி பெற்ற இந்தத் தொகுதி தேர்தல் களத்தில் முக்கியமாக கவனிக்கப்படும் தொகுதியாகும்.

தொகுதி மறுசீரமைப்பின்போது எடப்பாடி வட்டம், மேட்டூர் வட்டத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இந்தத் தொகுதியில் எடப்பாடி நகராட்சி, பூலாம்பட்டி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி பேரூராட்சிகள், எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்கள் அடங்கியுள்ளன.

சமூக நிலவரம்: வன்னியர் சமூக மக்கள் அதிக அளவில் வசித்துவரும் எடப்பாடி தொகுதியில், அதற்கு அடுத்த நிலையில் கொங்கு வேளாளக் கவுண்டர், மீனவ சமுதாய மக்கள், பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர்.

தொழில்வாய்ப்பு: விசைத்தறி, ஜவுளி உற்பத்தி, நெசவுத் தொழில் பிரதானமாக உள்ளன. இவற்றுக்கு இணையாக விவசாயமும் நடைபெற்று வருகிறது. இந்தத் தொகுதியின் தெற்கு எல்லையில் உள்ள சூரியன் மலைப் பகுதியில் "டீப் ஒயிட் " என்னும் அரியவகை கிரானைட் கற்கள் கிடைப்பதால், இங்கு பல கிரானைட் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன.

இருந்தபோதும் இங்குள்ள மக்கள்தொகைக்கு ஏற்ப வேறு தொழில் வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலையில், இப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அருகில் உள்ள பெருந்துறை, பள்ளிபாளையம், வெப்படை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்சாலைகளுக்கு நாள்தோறும் வேலைக்குச் சென்றுவரும் சூழல் உள்ளது.

தொகுதியின் மேற்கு எல்லையை ஒட்டிய காவிரி பாசனப் பகுதிகளில், அதிக அளவு நெல், கரும்பு, வாழை, பாக்கு உள்ளிட்டவை பயிர் செய்யப்பட்டு வருகின்றன. தொகுதியின் உட்புறங்களில் மரவள்ளிக்கிழங்கு, நிலக்கடலை, புகையிலை ஆகியவை விளைவிக்கப்படுகின்றன.

நிறைவேற்றப்பட்ட பணிகள்: எடப்பாடி தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில், புதிய அரசு கலைக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, புதிய கூட்டுக் குடிநீர் திட்டம், குடிசை மாற்று வாரியத்தின் கீழ் 400}க்கும் அதிகமான அடுக்குமாடி வீடுகள், நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் பல்வேறு இடங்களில் புறவழிச் சாலைகள், தரம் உயர்த்தப்பட்ட புதிய மருத்துவமனை கட்டடங்கள், சரபங்கா நதியின் குறுக்கே பல்வேறு இடங்களில் பாலங்கள், விவசாயிகள் பயன்பெறும் வகையிலான காவிரி உபரிநீர் பாசனத் திட்டம் உள்ளிட்டவை தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்.

கோரிக்கைகள்: இப்பகுதியில் மக்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையிலான தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டும், இங்குள்ள விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில் ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும், போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கும் வகையில் மகுடஞ்சாவடி வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையையும், பவானியிலிருந்து மேட்டூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில், பூலாம்பட்டி பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும், மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் பயன் பெறும் வகையில், அரசு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என்பன மக்களின் நீண்டகால கோரிக்கைகளாக உள்ளன. கடந்த தேர்தல் நிலவரம்: எடப்பாடி தொகுதியில் இதுவரை நடைபெற்றுள்ள தேர்தல்களில் 7 முறை அதிமுகவும், 2 முறை திமுகவும், ஒருமுறை காங்கிரசும், 3 முறை பாமகவும் வெற்றி பெற்றுள்ளன.

## திருமலையில் ரூ.3.45 கோடி உண்டியல் காணிக்கை வசூல்

திருப்பதி, ஏப்.22:

திருமலை ஏழுமலையானை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 76,406 பக்தர்கள் தரிசித்தனர். 28,436 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

கோடை விடுமுறையால் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், திங்கள்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 6 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர், இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

இதற்கிடையே, ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 76,406 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 28, 436 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.45 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## மதுரை சித்திரை திருவிழா... தங்கச் சப்பரத்தில் மீனாட்சி அம்மன் வீதி உலா



மதுரை, ஏப்.22:

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழா நாட்களில் மீனாட்சி அம்மனும், சுந்தரேஸ்வரரும் தினமும் காலை மற்றும் இரவில் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாசி வீதிகளில வலம் வருவார்கள்.

சித்திரை திருவிழாவின் 2-ம் நாளான இன்று காலையில் தங்க சப்பரத்தில் சுந்தரேஸ்வரர் பிரியாவிடையுடன், மீனாட்சி அம்மன் எழுந்தருளி மாசி வீதிகளில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 26-ந் தேதி மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், 28-ம் தேதி மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண வைபவம், 29-ந் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது.

# கண்ணகி கோயிலில் மே 1-ம் தேதி சித்திரை முழு நிலவு விழா ஏற்பாடுகள்



கூடலூர், ஏப்.22:

மங்கலதேவி கண்ணகி கோயில் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இரு மாநில அதிகாரிகள் தலைமையில் தேக்கடியில் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தின் தமிழக எல்லையான கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் விண்ணேற்றிப்பாறை எனும் இடத்தில் மங்கலதேவி கண்ணகி கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் சித்திரை முழு நிலவு விழா மே 1-ம் தேதி நடைபெற உள்ளது.

விழா நடத்துவது தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தேக்கடியில் நடைபெற்றது. தேனி, இடுக்கி மாவட்டங்களின் ஆட்சியர்கள் ரஞ்ஜீத்சிங், தினேஷன் சேருவாட் ஆகியோர் தலைமை வகித்தனர். இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாபூமத்யூ, சார் ஆட்சியர் அனுப்கார்க் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பக்தர்கள் வசதிக்காக குமுளியில் இருந்து கோயிலுக்கு செல்ல ஜீப்களை இயக்குவது, குடிநீர், தற்காலிக பந்தல், கழிப்பிட வசதி, பாதைகளை செப்பனிடுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும் பளியன்குடி வழியாக வரும் பக்தர்களுக்கும் உரிய வசதிகளை செய்து தர முடிவு செய்யப்பட்டது. பக்தர்கள் குமுளியில் இருந்து காலை 6 மணி முதல் பகல் 1.45 மணி வரையும், கோயிலில் இருந்து மாலை 5.30 மணிக்குள் வெளியேறவும் நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

# வைத்தீஸ்வரன் கோயிலில் நகரத்தார் குலதெய்வ வழிபாடு: திரளானோர் பங்கேற்பு!

கும்பகோணம், ஏப்.22:

வைத்தீஸ்வரன்கோயில் நகரத்தார் குலதெய்வ வழிபாடு இன்று விமரிசையாக நடைபெற்றது. இதில், லட்சக்கணக்கான மக்கள் பாதயாத்திரையாக வந்து நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவிலில் தர்மபுர ஆதீனத்திற்கு சொந்தமான அருள்மிகு தையல்நாயகி அம்மன் உடனாகிய வைத்தியநாதசுவாமி கோயில் அமைந்துள்ளது. நவக்கிரகங்களில் முதன்மையான செவ்வாய் ஸ்தலமாகவும், முத்துகுமார சுவாமி, தன்வந்திரியும் தனிச் சன்னிதியில் அருள்பாலித்து வருகிறார். இக்கோவிலின் சித்திரை மாத திருவிழாவின் முக்கிய நிகழ்வான நகரத்தார் குலதெய்வ வழிபாடு நடைபெற்று வருகிறது.

காரைக்குடி, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர்,ஒரத்தநாடு, கந்தர்வகோட்டை, பேராவூரணி, கீழசீவல்பட்டி, பரமகுடி,திருச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான நகரத்தார் மக்கள் பாதயாத்திரையாக வந்து நேர்த்திக்கடன் செலுத்தி தங்கள் குல தெய்வ வழிபாட்டை நிறைவேற்றி வருகின்றனர். ஆண்டு தோறும் சித்திரை மாதம் இரண்டாவது செவ்வாய்க்கிழமை பாதயாத்திரையாக வந்து தங்கள் குலதெய்வமான தையல்நாயகியை வழிபடுவது வழக்கம். சித்திரை மாதம் முதல் செவ்வாய் அன்று தங்கள் வேண்டுதல் நிறைவேற வீட்டில் மஞ்சள் தடவிய குச்சியை வைத்துப் பூஜித்து பாதயாத்திரை துவங்கும் மக்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேறியதற்கு காணிக்கையாக அந்த குச்சியை கோயில் கொடிமரத்தில் செலுத்துகின்றனர். பின்னர் அம்பாள் மற்றும் சுவாமியை தரிசித்து வழிபடும் நகரத்தார் மக்கள் தங்களுடைய புதிய வேண்டுதலுக்காகக் கொடிமரத்திலிருந்து மாற்றுக் குச்சியை எடுத்துச் செல்வதும் இம்மக்களின் வழக்கமாக உள்ளது. மேலும் பக்தர்கள் வசதிக்காக வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து பட்டுக்கோட்டை,தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்குச் சிறப்புப் பேருந்துகள் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயக்கப்பட்டு வருகிறது.

## அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் தேர்த் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்



அவிநாசி, ஏப்.22:

கொங்கு ஏழு சிவஸ்தலங்களில் முதன்மைப் பெற்றதும், முதலையுண்ட பாலகனை சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் பாடி மீண்டும் உயிர்ப்பித்து எழச்செய்த திருத்தலமாக கருணாம்பிகையம்மன் உடனமர் அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் விளங்குகிறது. இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைத் தேர்த் திருவிழா கோலாகலமாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டு தேர்த் திருவிழா வேத பாராயணம், பஞ்ச வாத்தியம் முழங்க கொடியேற்றத்துடன் செவ்வாய்க்கிழமை கோலாகலமாக தொடங்கியது.

கொடியேற்றத்தை ஒட்டி விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், கருணாம்பிகையம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகளுக்கு அபிஷேகம், அலங்காரம், மகா தீபாராதனைகள் நடைபெற்றது.

இதையடுத்து, பெங்களூரு ஸ்ரீ ஸ்ரீ குருகுலவேதாகம் பாடசாலை முதல்வர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சிவம் தலைமையில் வேத பாடசாலை மாணவர்களுடான குழுவினர் வேதபாராயணம் நிகழ்த்தினர். இதில், அவிநாசி வாகீசர் மாடாலாயம் காமாட்சிதாச சுவாமி, அறங்காவலர்கள் உள்பட எராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து 22-ஆம் தேதி மாலை சூரிய, சந்தர மண்டல காட்சி, 23-ஆம் தேதி அதிகார நந்தி, கிளி, பூதம் அன்னபச்சி வாகனக் காட்சிகள், 24-ஆம் தேதி புஷ்ப பல்லக்கு நடைபெற உள்ளது. 25-ஆம் தேதி இரவு பஞ்சமூர்த்திகள் புறப்பாடு, 63 நாயன்மார்களுக்கு காட்சியளித்தல், கரிவரதராஜப் பெருமாள் கோயில் கொடியேற்றம் ஆகியவை நடைபெற உள்ளன.

26-ஆம் தேதி இரவு கற்பகவிருட்சம், சுவாமி திருக்கல்யாணம் ஆகியவை நடைபெற உள்ளன. 27-ஆம் தேதி காலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகள் திருத்தேரில் எழுந்தருளல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.


முக்கிய நிகழ்வான தேரோட்டம் ஏப். 28-ஆம் தேதி காலை அவிநாசியப்பர் திருத்தேர் வடம் பிடித்தல் தேரோட்டம், வடக்கு ரத வீதியில் தேர் நிறுத்தப்படும். 29-ஆம் தேதி காலை 8 மணிக்கு அவிநாசியப்பர் திருத்தேர் வடம் பிடித்தல், தேர் நிலை சேறுதல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. 30-ஆம் தேதி காலை 8 மணிக்கு கருணாம்பிகையம்மன், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், கரிவரதராஜப் பெருமாள் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.




## நலம் தரும் மருத்துவம்



### சிறிய விதை... பெரிய மருத்துவ பயன்!



பப்பாளியின் காய் மற்றும் பழத்தைப் போலவே அதன் விதைகளும் ஏராளமான மருத்துவ குணங்கள் கொண்டவை. இதில் பாலிபீனால், பிளேவனாய்டுகள், ஆன்டிஆக்சிடன்டுகள்போன்ற மைக்ரோ நியூட்ரியன்கள் அதிகம் உள்ளன. பப்பாளி விதைப் பொடியை தினமும் காலையில் எழுந்ததும், உணவு உண்பதற்கு முன்பு தண்ணீரில் கலந்து குடிக்கலாம் அல்லது ஒரு தேக்கரண்டி பப்பாளி விதைகளை அப்படியே மென்று சாப்பிடலாம். இதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றி இங்கே பார்ப்போம்.

கொழுப்பைக் குறைக்கும்: பப்பாளி விதையில் இருக்கும் ஒலியிக் அமிலம் மற்றும் மோனோ சாச்சுரேட்டட் கொழுப்பு அமிலங்கள் உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்கும். இதில் உள்ள நார்ச்சத்து செரிமானத்தை சீராக்கி நச்சுக்களை வெளியேற்றும். இதனால் உடல் எடை குறையும். ரத்த அழுத்தம் சீராகி, இதயம் பலம் பெறும்.

மாதவிலக்கை சீராக்கும்: பப்பாளி விதைகளில் உள்ள கரோட்டின், ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் உற்பத்தியை சீராக்க உதவும். இதனால் மாதவிடாய் கோளாறுகள் நீங்கும். மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் வலி குறையும்.

சரும பராமரிப்பு: பப்பாளி விதையில் உள்ள சத்துக்கள் சருமத்தின் ஈரப்பதம் மற்றும் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்து, வயது முதிர்ச்சியால் ஏற்படும் கோடுகள் மற்றும் சுருக்கங்கள் உருவாகாமல் தடுக்கும்.

பொடுகைப் போக்கும்: உலர்ந்த பப்பாளி விதைகளை பொடி செய்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து தலையில் தடவவும். அரை மணி நேரம் கழித்து தலைக்குக் குளிக்கவும். வாரத்தில் இரண்டு முறை இவ்வாறு செய்தால் முடி அடர்த்தியாக வளரும். பப்பாளி விதைகளில் உள்ள ஒலியிக் அமிலம் தலையில் பொடுகு வராமல் தடுக்கும்.

நோய்த் தொற்றைத் தடுக்கும்: பப்பாளி விதையில் உள்ள மூலக்கூறுகள் பூஞ்சை, பராசைட்டுகள் மற்றும் ஈஸ்ட் போன்ற நுண்ணுயிர்களுக்கு எதிராக செயல்பட்டு, நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கும்.

எச்சரிக்கை: கர்ப்பிணிப் பெண்கள் பப்பாளி விதைகள் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். சர்க்கரை நோயாளிகள், மூட்டு வலி உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனை பெற்று சாப்பிடுவது சிறந்தது.

# மெல்ல மெல்ல சுருங்கி வரும் நிலவு... நிலநடுக்கங்கள் ஏற்பட வாய்ப்பு!

பூமியின் துணைக்கோளான நிலவு மெல்ல மெல்லச் சுருங்கி வருவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். நிலவின் உட்புறம் குளிர்வடைவதால் ஏற்படும் இந்த மாற்றங்கள் எதிர்கால விண்வெளி ஆய்வுகளைப் பாதிக்குமா? நிலவு ஒருவேளை மறைந்தால் பூமி சந்திக்கப்போகும் விபரீதங்கள் என்ன?

பூமியின் மிக நெருக்கமான விண்வெளித் துணையான நிலவு, காலப்போக்கில் மெல்ல மெல்லச் சுருங்கி வருவதாக விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். நிலவின் உட்பகுதி குளிர்வடைந்து வருவதால் இந்த மாற்றம் நிகழ்ந்து வருகிறது. பல பில்லியன் ஆண்டுகளாக செயல்முறை நடந்துவந்தாலும், இப்போது நாம் கணித்ததை விடவும் அதிவேகமாக நிலவு சுருங்கி வருவதாகப் புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

தேசிய விண்வெளி அருங்காட்சியகத்தின் புவி மற்றும் கிரக ஆய்வுகளுக்கான மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதுகுறித்து விளக்குகிறார்கள். நிலவு தனது வெப்பத்தை இழக்கும்போது, அதன்உட்பகுதிசுருக்கமடைகிறது. இதன் காரணமாக நிலவின் மேற்பகுதி சுருக்கமடைந்து, தோலில் சுருக்கம் விழுவதுபோல மேடுபள்ளங்களாக மாறுகிறது. 2010-ம் ஆண்டிலேயே மூத்த விஞ்ஞானி தாமஸ் ஆர் வாட்டர்ஸ், நிலவு சுருங்கி வருவதற்கான ஆதாரங்களை முன்வைத்தார். தற்போது அந்த ஆய்வு அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது.



நிலவு இப்போதைக்கு எங்கும் மறைந்துவிடாது என்று விஞ்ஞானிகள் உறுதியளிக்கின்றனர். இருப்பினும், ஒருவேளை நிலவு மறைந்துபோனால் பூமியில் ஏற்படும் பாதிப்புகள் பயங்கரமானவை; பூமியின் சாய்வு நிலையை (AXIAL TILT) நிலவுதான் நிலைப்படுத்துகிறது. அது இல்லையெனில், பருவநிலைகள் தாறுமாறாக மாறும். கடலில் ஏற்படும் அலைகளின் வேகம் மற்றும் அளவு பெருமளவு குறையும். இவை அனைத்தும் பூமியில் உள்ள உயிரினங்களின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியமைக்கும்.

கி.பி. 1110-ம் ஆண்டில் நிலவு திடீரென வானிலிருந்து மறைந்த ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது. அப்போதைய வரலாற்று பதிவுகளின் படி, மே மாதம் ஒரு நாள் இரவு நிலவு பிரகாசமாகத் தெரிந்து, பின் மெல்லமெல்ல மறைந்துபோனது. நிலவின் ஒளி மட்டுமன்றி அதன் உருவமே தெரியாத அளவுக்கு இருள் சூழ்ந்திருந்தது. இதற்கு காரணம் நிலவு மறைந்தது அல்ல; அந்த சமயத்தில் ஏற்பட்ட பெரிய எரிமலை வெடிப்பினால் வளிமண்டலத்தில் பரவிய கந்தகத் துகள்கள் (SULFUR PARTICLES) திரைபோல நிலவை மறைத்ததுதான் என்று பிற்கால ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

நிலவு சுருங்கும்போது அதன் மேற்பகுதியில் 'லோபேட் ஸ்கார்ப்ஸ்' (LOBATE SCARPS) எனப்படும் சிறிய குன்று போன்ற முகடுகள் உருவாகின்றன. இவை நிலவின் உட்பகுதி மேல்நோக்கித் தள்ளப்படுவதால் ஏற்படுகின்றன. நிலவில் பூமியைப் போல 'டெக்டோனிக் பிளேட்கள்' (PLATE TECTONICS) இல்லை என்றாலும், நிலவு இன்னும் புவியியல்ரீதியாகச் செயல்பாட்டில் இருப்பதை இது காட்டுகிறது.

அப்பல்லோ காலத்திலிருந்தே நிலவின் உயரமான பகுதிகளில் இத்தகைய சுருக்கங்களை நாம் அறிவோம். ஆனால் இப்போது நிலவின் சமவெளிப்பகுதிகளிலும் இவை பரவலாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்கிறார் இந்த ஆய்வின் முதன்மை ஆசிரியர். நிலவின் இந்த சுருக்கங்கள் நிலநடுக்கங்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, எதிர்காலத்தில் நிலவிற்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் எங்கே தரை இறங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க இந்த ஆய்வு மிகவும் முக்கியமானது.

# "யாரைத்தான் நம்புவதோ?"




அவன் வயது இளைஞர்கள் ஃபேஸ் புக், வாட்ஸ்-அப், ஷாப்பிங் மால், என்று திரிந்து கொண்டிருக்கும் நாகரீக நாளில், அரவிந்த் தன்னை ஒரு சமூக ஆர்வலனாக மாற்றிக் கொண்டு வாழ்ந்தான். ஊரின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க, தெரு விளக்குப் போட, சாலைகளைச் சீரமைக்க போராடினான்.

அதன் காரணமாய், மக்கள் மத்தியில் நல்ல பெயர் பெற்றவன். இன்னும் அதிக சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தோடு நகராட்சி தேர்தலில் போட்டியிட முடிவு செய்தான்.

அவனை எதிர்த்து நின்றவன் பழைய அரசியல் நரி... ரகுநாதன்!. பண பலமும், ஆள் பலமும் கொண்டவன். "அவனை ஜெயிக்க முடியாது," என்று பலர் சொன்னார்கள்.

அரவிந்த் பயப்படவில்லை. நம்பிக்கையோடு இருந்தான். அதற்கு முக்கிய காரணம் அவனுடன் இருக்கும் கார்த்திக். பள்ளி நாட்களிலிருந்து நண்பன். பிரச்சாரத்துக்கு ஓடினான். கூட்டங்கள் ஏற்பாடு செய்தான். பேனர்கள் ஒட்டினான். தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்தது.

ரகுநாதன் கூட்டங்களில் அரவிந்தை தாக்கிப் பேசினார். "அனுபவமில்லாத இளைஞன்," என்று விமர்சித்தார்.

வாக்குப்பதிவுக்கு மூன்று நாட்கள் முன், ஒரு வீடியோ வைரலானது. அரவிந்த் கட்டுக் கட்டாய் பணம் வாங்குவது போல், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது போல் போலியான காட்சி.

ஊர் முழுக்க பரபரப்பு. "பொய் வீடியோ!" என்று அரவிந்த் கத்தினான். யாரும் நம்பவில்லை. கூட இருந்தவர்களே சந்தேகத்துடன் பார்த்தார்கள்.

அந்த இரவு, அரவிந்த் மொபைலுக்கு புது நம்பரிலிருந்து மெசேஜ். "உன் வீடியோ எப்படி வந்தது என்று தெரிஞ்சுக்கணுமா?... உன்னோட டேட்டாவெல்லாம் யாரிடம் இருந்திச்சு நினைச்சுப் பாரு..."

அவன் மண்டைக்குள் மின்னல். அவனுடைய பிரச்சார அலுவலக லேப்டாப்பை தினமும் கையாள்பவன், வீடியோ எடிட்டிங் தெரிந்தவன், அவனோட எல்லா மீட்டிங்க்களுக்கும் உடன் இருந்தவன், யார்?... யார்? கார்த்திக்.

அடுத்த நாள், கார்த்திக் காணாமல் போனான். ரகுநாதனின் காரில் செல்வதாய் யாரோ சொன்னார்கள்.

தேர்தலில் அரவிந்த் தோற்றான்.

சில நாட்கள் கழித்து, கார்த்திக் நேரில் வந்தான். " அரவிந்த்... என்னை மன்னிச்சுடுடா... அவசரமாய்ப் பணம் தேவைப்பட்டது.... அவன் பெரிய ஆஃபர் குடுத்தான்....நான் சின்ன உதவிதான் செஞ்சேன்..." என்று தலைகுனிந்தான்.

அரவிந்த் சிரித்தான். கண்ணில் கோபம் இல்லை. "கார்த்திக்... என் எதிரே நின்றவன் என்னை வீழ்த்தலை..... என் அருகே நின்னவன்தான் வீழ்த்தியிருக்கான்," என்றான். கார்த்திக்கால் பேச முடியவில்லை. நா தழுதழுத்தது.

"கார்த்தி... உன்னால ஒரு நல்ல பாடம் கத்துக்கிட்டேன்... உனக்கெதிரே நிற்பவனை விட... உன்னருகில் நிற்பவன் மீது கவனமாயிரு" என்கிற பாடத்தைக் கற்றுக் கொண்டேன்... ரொம்ப நன்றிப்பா"

உடனே அந்த இடத்தை விட்டு அகன்றான் அரவிந்த்.



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# உழைப்பை திருடினால்




" பெயர் பெற்ற ஒரு பயிலகத்தில் பெரிய பதவியில் இருப்பவர் ராமலிங்கம் . அதே பயிலகத்தில் விரிவுரையாளராக இருப்பவர் ராகவன் .

இருவரின் உழைப்பும் நோக்கமும் பயிலகம் தலை சிறந்து விளங்க வேண்டும் . எந்த ஒன்றும் முடியாது என்பது இல்லை . எந்த இலக்காக இருந்தாலும் எட்ட வேண்டும் . புதுப்புது முயற்சி செய்து சாதிக்க வேண்டும் என்பது அவர்கள் இயல்பு .

சில காலங்கள் இப்படி கடந்து நல்ல விதமாகத் தான் சென்றது . பெரிய பதவியில் இருக்கும் ராமலிங்கம் கடுமையான உழைப்பாளி அடுத்தவரை வேலை வாங்குவதில் பலே கெட்டிக்காரர் . லாவகமாக வேலை வாங்க நயமாக பேசுவது அவர் இயல்பு .

ஆனால் அவர் மனசு மட்டும் சுயநலம் கொண்டது . எது நடந்தாலும் தன்னால் தான் நடந்தது . தனக்கு தான் பரிசு , பொன்னாடை அனைவரின் பாராட்டும் என்று ஒரு சுயநலம் நிறைய உண்டு. அடுத்தவர் யாராவது சிறப்பாக செய்து அவர் இடத்தை தாண்டும் படி வளர்ந்து விட்டால் அதை வேறு விதமாக தலையிட்டு அவர்கள் அதன் பிறகு சாதிக்க முடியாத படி வேறு பணியில் ஈடுபடுத்துவது . அவர் பணியை டம்மி ஆக்கி அழகு பார்ப்பது என்பது ராமலிங்கத்தின் வாடிக்கை .

மாறாக ராகவன் கடுமையான உழைப்பாளி . அன்போடும் பண்போடும் அனைவரின் திறமையை பாராட்டுவதும் புகழ்வதும் ஊக்கப் படுத்துவதும் அது மட்டும் அல்லாமல் மாணவர்களை ஊக்கப்படுத்துவதும் ராகவன் இயல்பு .

ராகவன் பேச்சுத் திறமையில் பலே கெட்டிக்காரர் . சபையை தன் வசப்படுத்துவதில் வல்லவர் . நன்றாக வளர்ந்து வந்தார் ராகவன் . அவரின் உழைப்பு திறமை முன்னேற்றம் ராமலிங்கத்தின் கண்களை மறைத்தது. ராகவனின் உழைப்பை முழுமையாக திருடி தன் வசப்படுத்திக் கொண்டார் .

நாட்கள் நகர நகர ராமலிங்கம் நடவடிக்கையில் பெரிய மாற்றம் தெரிந்தது . சுயநலப் பேய் ஆட்க் கொண்டது . என்ன செய்கிறோம் என்று தெரியாமல் ராகவனை கண் மூடித்தனமாக எதிர்க்க துணிந்தார்.

ராகவனை அசிங்கப்படுத்துவது டம்மி ஆக்குவது புதுப் புது தலைவலியை கொடுப்பது என்று ஆரம்பித்து காலத்தை நகர்த்தினார் ராமலிங்கம் .

ராமலிங்கம் ஓய்வு பெறும் காலம் நெருங்கியது . ஓய்வு பெறும் நாளும் வந்தது .

அன்று கோலா களமாக விழா ஏற்பாடு ஆனது . அன்று முழுக்க ராகவன் சிறப்பாக மேடையில் பேசி ராமலிங்கத்தின் உழைப்பை திறமையை சாதனையை கவிதை மழை போல் பாராட்டி பொன்னாடை போட்டு ஷீல்டும் கொடுத்து சிறப்பித்தார்.

அந்த பயிலகத்தில் பணி புரியும் பலர் அந்த பணி நிறைவு விழாவிற்கு வரவில்லை காரணம் ராமலிங்கத்தின் அடக்கு முறை. சுயநலம் கலந்த வழி காட்டுதல் .


பணி நிறைவு விழா இனிதே முடிந்து வீட்டிற்கு ராமலிங்கத்தை கொண்டு விட வழி அனுப்ப சிலரே வந்தாலும் ராகவன் முழுவதுமாக இருந்து ராமலிங்கம் வீடு வரை சென்று மரியாதை செய்து விட்டு மன நிறைவோடு வீடு திரும்பினார்.

ஒரு திறமைசாலி உழைப்பாளிக்கு கொடுக்க வேண்டிய மரியாதை கடமையை சரியாக செய்து விட்ட மன நிறைவு ராகவனுக்கு இருந்தது.

ராமலிங்கம் அவமானத்தாலும் ராகவன் செய்த செயலாலும் மனம் புழுங்கினார் .

சுயநல எண்ணம் விலகி உண்மை புரிந்தது ராமலிங்கம் கண்ணில் கண்ணீர் பெருகி ஓடியது ஆறாக . காலம் பதில் சொன்னது . மனசாட்சி என்பது உண்டு என்பது நிதர்சனமான உண்மை.

**- சீர்காழி.**
**ஆர்.சீதாராமன்.**



# ஊர்மிளையின் ஊமைமனம் 9



**.கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## சூர்ப்பநகையின் வாதம்..

பெண் பிறந்தேன் பட்ட பிழை எனப் பதறும் தொல்குடிப் பிறந்தவள் தன் அரக்கி வடிவம் கொண்டாள்.

"மலை எடுத்த தனி மலையே! இவைகாண வாராயோ! புலி தானே புறத்து ஆக குட்டி துன்பப்படாது என்று உலகு உரைக்கும் உரை பொய்யோ! வலியானே! யான் பட்ட வலி காண வாராயோ? யான்பட்ட பழி வந்து பாராயோ?

தான் பெற்ற துயரத்தை உடனே தன் உறவுகளாகிய அண்ணன்மார்களையும் கூவி அழைத்தாள்.

.நிறைந்த மதத் திசையானை மருப்பு ஒடிய பொருப்பு இடிய தோள் நிமிர்த்த வலியோனே! பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் ஆற்றல் உடைய கரனேயோ! யான்பெற்ற கையுறவு காணாயோ? (இங்கு கையுறவு என்பது துன்பம் என்று பொருள் கொண்டாலும் கணவனை இழந்த நிலையும் சேர்த்துச் சொல்கிறாள்) சந்திரன் மேல் தலைக்குடை கொண்டு நீ இருக்கும் சபை நடுவே வந்து அடியேன் நாணாது முகம் காட்ட வல்வேனோ? மார்பு சிதைத்து விழ என்னை உதைத்து உருட்டி மூக்கு அறுத்த நரன் தன் தோள்வலிமை பார்க்க நான் கிடந்து புலம்புவதோ? கரன் இருந்த வனம் அன்றோ? இவ் வனத்திலேயே இக்கேடு அடையத் தகுவேனோ? அரன் இருந்த மலை எடுத்த அண்ணாவோ! அண்ணாவோ!

சந்திரகாசம் என்னும் வாளின் வலிமையையும் மறந்தனையோ? நீ இன்று இருவர் மானுடருக்கு ஆற்றுவது உன் வலிமை மாற்றினையோ? உன் செருப்பு அடியின் பொடி ஒவ்வா மானிடரைக் கண்டு கோவிப்பாயோ? எம் குலத்தோருக்கு உணவு இரையாக உள்ள மானிடரிடத்துச் சென்று அடங்கியது வியப்பாக இருக்கிறது.

நசையாலே(ஆசையாலே) மூக்கு இழந்து நாணம் இலா நான் பட்ட வசையாலே (பழியாலே) நினது புகழ் மாசுண்டது ஆகாதோ? திசையானை விசை கலங்கச் செருச் செய்து மருப்பு ஒசித்த இசையாலே நிறைந்த புயத்து ராவணவோ! இவ் வனத்திலே இருவர் காதோடு மூக்கினை அரிய பாவியேன் அவமானத்தால் மடியக் கடவேனோ? மானிடவர் வலி காண வாராயோ? இந்திரனை இரண்டு கைகளிலும் விலங்கிட்டு பிணைத்து வானவரைப் பணி கொண்ட மருகாவோ! இந்திரஜித்தே மானிடர் வலி காண வாராயோ? குவலயத்தில் எல்லீரும் உறங்கீரோ? நான் அழைத்தல் கேளீரோ!"

"ஆவி போயினும் ஆசையின் ஒய்வு இல்லாதவளாய் ராமனை அடைந்தே தீருவேன்!" என எழுந்தாள்; அமர்ந்தாள்; அங்கும் இங்கும் ஓடினாள். "என்னைக் குறைபடுத்திய உம்மைப் பற்றி என் தமையன் ராவணனிடம் சொல்வேன். அவனே உமக்குக் கூற்றுவன் ஆவான்!" என்றாள்.

"பெண்ணென்று நினைத்தாயோ?" என விசுவாமித்திரர் முனி கேட்டாரே அன்று. "இவளை வதம் செய்தால் பாவம் ஒன்றும் ஆகிவிடாது!" என்று நினைத்தான் இலக்குவன்.

"ஆனால் அழகான உருவில் இருந்ததால் அவள் அழகைக் குறைத்தாலே அவமானம் தாங்காமல் உயிர் விட்டு விடுவாள் என எண்ணித் தான் அங்கங்களைக் குறைத்தது தவறு தவறுதான்!" என்றும் நினைத்தான். வலி தாங்க முடியாமல் பெண்ணல்ல நான் அரக்கி தான் என்று தன் சுய உருவத்தைக் காட்டினாள் சூர்ப்பநகை.

அப்போது ராமன் அங்கு வர, சுய உருவம் அடைந்த சூர்ப்பநகை ஒரு மலைக்குன்று போல் காணப்பட்டாள். நேற்று வந்த அந்த அழகிய மான்விழி மங்கை தான் இவள் என்று அறியாத ராமன் அவளிடத்தில் "நீ யார்?" என்று வினவினார்.

அதற்குள் அவனை நோக்கி



நெருங்கி வந்த சூர்ப்பநகை "அந்தோ! உன்திருமேனி கண்டு அன்பு கொண்டதற்குக் கிடைத்த வன்பிழை! பாரு! பாரு! எனக்குக் கிடைத்த அன்பு பரிசை!" என எதிர்விழுந்தாள்.

"இன்னும் அறியாயோ! நீ என்னை? வெம் இலை போல் வேல் வடித்த வேலை உடைய ராவணனாம் விண்ணுலகம் முதலாக எவ்வுலகமும் உடையானுக்கு உடன் பிறந்தவள் யான்!"

மேலும் நேற்று உன்னோடு "யாது ஊர்? யாது பெயர்? உறவு யாவர்?" என்று என்னை கேட்டாயே! காமவல்லி யான்!" என்றாள்.

"கொங்கைகளும் குழைக்காதும் மூக்கும் குறைந்து அழிந்தால் அழகிய கண்களை உடைய அரசே! ஒருவருக்கு அழியாதோ அழகு!" என்றாள்.

இவள் கொடியசெயல் எதுவும் செய்திருப்பாள். அதனால் கோபமுற்ற இளையோன் இதை நெடுஞ்செவியோடு மூக்கும் அரிந்தான் என உணர்ந்து, அவளைப் பார்த்து "ஆமாம்! நேற்று வந்தவள் நீயா?" என ராமன் வினவ பின் இளையவனிடம் "வீர விரைந்தனை! இவள்தன் விடுகாதும் கொடிமூக்கும் ஈர நினைந்து இவள் இழைத்த பிழை என்?" என்று கேட்க நெடுந்தகை இடத்து விளக்கிச் சொன்னான்..

தன் கோரைப் பற்களால் தின்பதற்கான தேட்டமோ இல்லை தீவினையோர் கூட்டம் தான் இவ்வளவு பொறுத்து உள்ளதோ குறித்த பொருள் உணர்ந்திலேன் நான். கண்களில் நெருப்பை உமிழ்ந்து நல்லாள் மேல் பொல்லாதவள் சீறிப்பாய நான் அவளைப் பிடித்தேன் என்றான்.

"இது உண்மையா?" என்றான் ராமன் சூர்ப்பநகை இடத்தில் .

"வளநாடா! மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ (எரியாதோ) மனம்!" என்றாள் சூர்ப்பநகை.

"ராவணனின் தங்கை என்பதால் என்னை இகழ வேண்டாம். நீர்அரக்கர் குலத்தை அழிக்க வந்தீரானால் நான் உமக்காக உயிர் காப்பேன். நீர் என்னை ஏற்றுக் கொண்டால்.. ஏனெனில் பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல் அரக்கர்கள் அழிய நான் துணை நிற்பேன்; வான் சுமந்து செல்வேன்; போரில் வெல்வேன்; என்னைப் போல் குலத்திலும், நலத்திலும், வலத்தாலும் மதியாலும் வடிவாலும், மடத்தாரும் நிலத்தாரும் விசும்பாரும் நேரிழையார் இங்கு உரியாரைச் சொல்வீரோ வல்லீரோ!" என்றாள்.

"போக்கினீர் என் நாசி அதனால்என்? ஆக்குவேன் ஒரு நொடியில் அழகு அமைவென். அதனால் பெண்மைக்குப் பழுதுண்டோ?

நெடுமூக்கு மடந்தையற்கு மிகை அன்றோ!" என்றாள்.

"குலமகள் தன்னைப் புகழ்ந்து பேச மாட்டார்கள். தன்னழகு அங்கங்களைத் தன்னை உடையான் விரும்புவதற்காகத் தான் அழகு செய்வார்களேயொழிய பிறர்க்காக அன்று!" என்று ராமன் உரைக்க"ஓ ! நாசி அரிந்ததன் பொருள் இதுதானோ! அப்படி எனில் எனக்கு உரியவராகிப் போனார் இளையோன் அவரிடம் கூறி என்னை ஏற்றுக் கொள்ளும்படி செய். அரிந்ததனால் அன்பு குறையாமல் இரட்டிப்பானதே!" என மகிழ்ந்தாள்.

"இளையவன்தான் அரிந்த நாசி இலா இவளோடு வாழ்வது எங்ஙனம் என்றானேயானால் "இறைவ! மருங்கு (இடை) ஒன்றும் இல்லாதவளோடு நீ நெடுங்காலம் வாழ்ந்ததைச் சொல்!" என்றாள்.

"இவ் வனத்தை விட்டு அகன்று ஓடிப்போ இல்லையெனில் உன் அன்னை தன்னை நல்கும் தாடகையை உயிர் கவர்ந்த சரம் இருக்கிறது!" என்றும் "ஈண்டு இவர் இருவர் மானிடர் என்னாது நீ விறல், அரக்கர், இயக்கர் என யாவரையும் கொணருதியேல் நின் எதிரே கோறும்!" என்றான் இராமன்.

இதனைக் கேட்ட இலக்குவன் "இவளைக் கொன்று களையேம் என்றான்.

"ஒன்றும் இவர் எனக்கு இரங்கார்; உயிர் இழப்பென் நிற்கின்!" என அரக்கி அகன்றாள்.

அகன்ற பொழுது "உங்கள் கூற்றுவனை இங்கே இப்போதே கொணர்கின்றேன்!" என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு அகன்றாள்.

"ஐயோ! இவள் தான் எத்தனை பெரிய ஆபத்துக்கு உரியவளாக இருந்திருக்கிறாள். நீங்கள் உடனே இவளைப் பற்றி அறிந்து ஜாக்கிரதையாக இருந்திருக்கலாமே!" என்று கூறினாள் ஊர்மிளா.

"ஆமாம்! ஆனால் தாடகை வதத்தையே முடித்தவர் ராமண்ணா இல்லையா! அதனால் எத்தகைய துன்பம் உண்டாகப் போகிறது என்று நினைவு ஒழிந்தோம்."

"ஆனால் பல்லாயிரக்கணக்கான வீரர்களை அனுப்பி விட்டாள். அவளது மாமன் மகனாகிய கரன் தலைமை ஏற்றான். கரனோடு போர் செய்ய ராமண்ணா சினத்துடன் எழுந்து வில்லை ஏற்ற நாண் முறிந்தது ஊர்மிளா!" என்றான் லக்குவனன்.

"ஐயோ! இது என்ன சோதனை! நீங்கள் என்ன செய்தீர்கள்? ராமண்ணாவுடன் சேர்ந்து நீங்கள் அவர்களை எதிர்த்துப் போரிடவில்லையா?" ஆயிரம் கேள்விகள் இதயத்தைத் துளைக்க லக்குவனனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவரது உறக்கத்தை வாங்கிக் கொண்டோம் என்று நினைத்தோம். நம்மளவில் உறங்குதல் என்பது அசைவற்ற நிலை என்றாலும் ஆம் கண்ணெதிரே தெரியும் செயல்களுக்கு அசைவின்றி நோக்குதல் என்பது நடவாத காரியம்.

யாரையும் எளிதில் குறை சொல்பவர்கள், அவர்கள் போல் வாழ்ந்து இருந்தால் மட்டுமே சொல்லத் தகுதி உடையவர்கள் என்ற எண்ணம் வந்தது ஊர்மிளைக்கு

- தொடரும்

"சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற மாபெரும் உலகியல் பழமொழியின் பின்னால் மறைந்துள்ள கபால மெய்ஞ்ஞானத்தின் அக-நரம்பியல் ரகசியத்தை, முத்தேக சித்தித் தத்துவங்களின் அடிப்படையில், இங்கே முழுமையாகத் தொகுத்து வழங்குகிறேன்.




சாது (சாட்சி உணர்வின் மாபெரும் அமைதி) அகங்காரம் முழுமையாக அழிந்து, எந்தவிதச் சலனமுமின்றி நிலைத்திருக்கும் தூய சாட்சி உணர்வே 'சாது'. இது புறத்தோற்றத்தின் அமைதி அல்ல; மாறாக, எண்ணங்கள் முற்றிலும் அடங்கிய மாபெரும் உள் மௌனத்தின் உச்சக்கட்ட நிலையாகும்.

காடு (நரம்புக் காட்டில் பதிந்த கர்மப் பதிவுகள்) முற்பிறவிப் பதிவுகளின் மாபெரும் களஞ்சியமே இங்கு 'காடு' எனப்படுகிறது. நமது மண்டையகத்தின் ஆழ் பகுதிகளில் பல பிறவிகளாகப் பின்னிப் பிணைந்து கிடக்கும் கர்ம நரம்புப் பாதைகளையே சித்தர்கள் மாபெரும் நரம்புக் காடாக உருவகப்படுத்தினர். இதுவே முப்பத்தாறு தத்துவங்களின் இருப்பிடமாகும்.

மிரண்டால் (உள் ஒளி வெடிப்பும் தத்துவ சுத்தியும்) புருவ மையத்தில் நிலைத்த திருவடிப் பார்வை திடீரென மாபெரும் உள் நெருப்பாக உருவெடுக்கும் நிலையே 'மிரட்சி' ஆகும். இது அகங்காரத்தின் இறுதி அதிர்வைக் கடந்து, தூய விழிப்புணர்வு பெருநெருப்பாக வெடித்தெழும் மாபெரும் கபால நிகழ்வாகும்.

கொள்ளாது (பதிவுகள் எரிந்து உணர்வு எல்லையற்று விரிவடைதல்) அந்த மாபெரும் உள் ஒளியின் வெப்பத்தில், மூளைக்குள் இறுகிப்போயிருந்த பழைய நரம்புப் பாதைகளான முப்பத்தாறு தத்துவங்களும் முழுமையாகச் சுட்டெரிக்கப்பட்டுச் சாம்பலாகும். காடு முழுமையாக எரிந்த பின், விழிப்புணர்வு உச்சி வாசல் வழியாக எல்லையற்று விரிவடையும். இதுவே உச்சித் தாமரைத் திறப்பு எனப்படும் உச்சக்கட்ட நிலையாகும். சுருக்கமாகச் சொன்னால், சாட்சி உணர்வு எனப்படும் 'சாது' உள் ஒளியாக வெடித்துக் கிளர்ந்தெழும்போது (மிரண்டால்), பல பிறவிகளாக மூளையில் மண்டித்திருக்கும் கர்ம நரம்புப் பதிவுகள் எனப்படும் 'காடு' அந்தப் பேரொளியைத் தாங்க முடியாமல் முழுமையாக எரிந்து சாம்பலாகிவிடும் (கொள்ளாது).

**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

**தினம் ஒரு தலைவர்கள்**

# நாவலர் சோமசுந்தர பாரதியார் வரலாறு

நாவலர் சோமசுந்தர பாரதியார் (ஜூலை 27, 1879 - டிசம்பர் 14, 1959) தமிழறிஞர், கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாளர் மற்றும் சொற்பொழிவாளர். தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டவர். இவரின் வஞ்சி நகரம் பற்றிய ஆராய்ச்சியும், பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு பற்றிய ஆராய்ச்சியும் தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தகுந்தவை.

## பிறப்பு, கல்வி

நாவலர் சோமசுந்தர பாரதியார் ஜூலை 27, 1879 அன்று எட்டயபுரத்தில் சுப்பிரமணிய நாயகருக்கும் முத்தம்மாளுக்கும் ' பிறந்தார். இவருடைய இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரம். சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் அரண்மனையில் அரசியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். இளமையில் பாரதியாருடன் நட்பு கொண்டிருந்தார். தனது தொடக்கக் கல்வியை எட்டயபுரத்திலும் இடைநிலைக் கல்வியை நெல்லையிலும் முடித்ததார்.

எஃப்.ஏ. முடித்ததும் கிறிஸ்தவக் கல்லூரியில் (இன்றைய தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி) பி.ஏ. வரலாறு படித்தார். 1901-1903 வருடங்களில் இக்கல்லூரியில் மறைமலையடிகளும், பரிதிமாற்கலைஞரும் தமிழாசிரியர்களாக இருந்தனர். சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 1905-ம் ஆண்டில் சட்ட இளவர் பட்டமும் (BACHELOR OF LAW) பெற்றார். தேர்வு எழுதிய உடனேயே வருவாய்த்துறையில் வேலையும் கிடைத்தது. அங்கு ஓர் ஆண்டு வேலை பார்த்து, பின் தூத்துக்குடியில் குடியேறினார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றியபொழுது தானே பயின்று 1913-ம் ஆண்டில் முதுகலைப்பட்டம் பெற்றார்.

## தனிவாழ்க்கை

1894-ல் சோமசுந்தரத்திற்கு 15 வயதில் கடம்பூர் மீனாட்சியுடன் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இராசராம் பாரதி, இலக்குமிரதன் பாரதி என்னும் மகன்களும் இலக்குமி பாரதி என்னும் மகளும் பிறந்தனர். தனது 48-ம் வயதில் சோமசுந்தர பாரதியார் திருவெட்டாற்றில் டிசம்பர் 1, 1927-ல் வசுமதியை மணந்தார். இவர்களுக்கு மீனாட்சி மற்றும் லலிதா ஆகிய இரு மகள்கள் பிறந்தனர். 1906-1959 ஆண்டுகளில் சோமசுந்தர பாரதியார் முழுநேர வழக்குரைஞராக இருந்தார்.

## இலக்கியவாழ்க்கை

நாவலர் சோமசுந்தர பாரதியார் பத்து நூல்கள் எழுதியுள்ளார். பெரும்பாலும் இலக்கியக் கூட்டங்களிலும் காங்கிரஸ் மேடைகளிலும் பேசுவதிலேயே இவரது நேரம் கழிந்திருக்கிறது. இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். தனது ஆராய்ச்சிகளைச் சொற்பொழிவின் வழியாகவும் ஆய்வுநூல்கள் எழுதுவதின் வழியாகவும் வெளியிட்டார். 1932 -1933-ம் ஆண்டுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார். தமிழிசைத் துறைக்கும் தலைவராக இருந்தார். இக்காலத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். ஏ.சி. செட்டியார், வேங்கடசாமி நாட்டார் போன்றோர் இவரின் சக ஆசிரியர்களாய் இருந்தனர். நாவலரின் மாணவர்கL க. வெள்ளைவாரணர், அ.ச.ஞானசம்பந்தம், அ.மு. பரமசிவானந்தம் போன்றோர்.


## நூல்கள்

சோமசுந்தர பாரதியார் சங்ககால வஞ்சி நகரம் பற்றி எழுதிய நூலும், 'சேரர் தாய் முறை' என்ற நூலும் நாவலரின் ஆராய்ச்சி நெறிமுறைக்குச் சான்றாக இருப்பன. வஞ்சி நகரம் பற்றிய நூல் 'SOME STUDIES ABOUT THE CHERA OF YORE' என்னும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது சேரர் தாய்முறை என்ற நூல் பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு இருந்திருக்கிறது என்று நிறுவுகிறது. இந்த நூல் பதிற்றுப்பத்தின் வழி பண்டைய உறவுமுறைகளையும், வம்சாவழியையும் ஆராய்கிறது. இதுவும் 'SYSTEM OF SUCCESSION IN CHERA KINGDOM' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## கவிதைகள்

நாவலர் எழுதிய 'மாரிவாயில்', 'மங்கலக் குறிச்சியில் பொங்கல் விழா' இரண்டும் கவிதை நூல்கள். அர்ஜுனன் பாண்டியன் மகளுக்குத் தூது விடுப்பது போன்ற அமைப்புடைய 122 பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் 'மாரிவாயில்'. 'மங்கலக்குறிச்சியில் பொங்கல் விழா' நூல் பொதியமலையில் நிகழ்வதாகப் புனையப்பட்ட காதல் கதை.

## உரைகள்



சோமசுந்தர பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பு மாணவர்களுக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் 'தொல்காப்பியம், பொருட்படலம் - புதிய உரை'. இது 1942-ல் வெளியானது. தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணப்பகுதியில் உள்ள அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் முழுமையாக உரை எழுதினார். மீதமுள்ளவற்றுள் களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியவற்றில் இன்றியமையாச் சில நூற்பாக்களுக்கு மட்டும் புத்துரை எழுதினார்.

1997-ல் 'நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி - 2, தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை' என்னும் தலைப்பில் பொ.வெ. சோமசுந்தரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு எழுதிய உரைகள் அனைத்தையும் திரட்டி மதுரை ச. சாம்பசிவனாரை பதிப்பாசிரியராகக் கொண்டு நாவலரின் மகள் மருத்துவர் லலிதா காமேசுவரன் அந்நூலை வெளியிட்டார்.

சிலப்பதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளைக் 'கானல்வரி' என்னும் தலைப்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் நூலாக வெளியிட்டார். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் இருவருமே வடமொழி நூல்களை மேற்கோள் காட்டுபவர்கள். இவர்கள் தங்கள் காலக்கட்டத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்லர் என்று கருதினார்.

## கட்டுரைகள்

சோமசுந்தர பாரதியார் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் 'நற்றமிழ்', 'பழந்தமிழ் நாடு' என்னும் தலைப்புகளில் நூல்களாக வந்துள்ளன. தொகுக்கப்படாத கட்டுரைகளும் உள்ளன. இவரது ஆங்கில நூல் 'TAMIL CLASSICS AND TAMILAKAM'. சங்கப்பாடல்களில் குறிக்கப்படும் கரிகாலனும் திருமாவளவனும் வேறானவர்கள். மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை சீத்தலைச் சாத்தனாரினின்று வேறானவர், மெய்கண்டாரின் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பல்ல என்பன போன்ற கருத்துகள் இவரது கட்டுரைகளில் காரசாரமாய் விவாதிக்கப்படுகின்றன.

## சொற்பொழிவாளர்

சோமசுந்தர பாரதியார் ஆகஸ்ட் 16, 1916 அன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இதே தலைப்பில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச் சங்கமும் இளம் கிறித்துவ ஆடவர் சங்கமும் (YMCA) மதுரையில் ஜனவரி 26, 1926 அன்று நடத்திய ஆய்வரங்கிலும், மார்ச் 11, 1929-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் சோமசுந்தர பாரதியார் திருவள்ளுவர் பற்றி ஆற்றிய உரைகள் பின்னர் 'திருவள்ளுவர்' என்னும் நூலாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வழியாக உ.வே.சா உதவியுடன் வெளிவந்தது.

## திராவிடக் கழகம்

கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அண்ணாதுரையுடன் வாதிட்டார். அச்சொற்பொழிவு 'தீபரவட்டும்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கூட்டம் ஒன்றில் (1916) 'தசரதன் நிறையும் கைகேயியின் குறையும்' என்னும் தலைப்பில் இவர் பேசினார். இலக்கியக் கதாபாத்திரங்களை முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தும்போது பொதுவான சட்டங்களையும் காலப்பின்னணியையும் துணையாகக்கொள்ள வேண்டும் என்னும் முன்னுரையுடன் தசரதனை விமர்சிக்க ஆரம்பித்த இவரின் வாதம் அப்போதே சிறு பிரசுரமாக வந்தது. 1916 - 1919-ம் ஆண்டுகளில் இதே தலைப்பில் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி எனப் பல இடங்களில் பேசிய பேச்சு விரிவாக அப்போது நூலாக வந்தது. சோமசுந்தர பாரதியார் முன்வைத்த கருத்துகள் இவருக்கு எதிரான ஒரு கூட்டத்தையும் உருவாக்க காரணமாயிருந்திருக்கின்றன.



சினிமா பிரபலங்கள் தங்களது போட்டோஷூட் புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் வெளியிடுவது என்பது வழக்கமான ஒன்றுதான். அதுவும் ரசிகர்களின் மனம் கவர்ந்த நட்சத்திரங்கள் வெளியிடும் போட்டோஷூட் புகைப்படங்கள் என்றால், அது உடனடியாக இணையத்தில் வைரலாகும்.
அப்படி தற்போது ரசிகர்களிடையே படுவைரலாகி வருவதுதான் நடிகை வாமிகா கேபியின் லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட். இந்திய அளவில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர் வாமிகா கேபி.
இவர் தமிழில் தற்போது லோகேஷ் கனகராஜுடன் இணைந்து DC எனும் திரைப்படத்தில் நடித்து வருகிறார். மேலும், சமீபத்தில் இவர் அக்ஷய் குமாருடன் இணைந்து பூத் பங்களா என்கிற படத்தில் நடித்திருந்தார். இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.
இந்த நிலையில், இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கருப்பு நிற மாடர்ன் உடையில் லேட்டஸ்ட்டாக நடத்திய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# நயன்தாரா - கவின் இணையும் படத்தின் முதல் பாடல் வெளியீடு!

லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா மற்றும் நடிகர் கவின் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடிக்கும் படம் ஹாய்.
இவர்களுடன் நடிகர் பிரபு, பாக்யராஜ், ராதிகா, கருணாஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். லோகேஷ் கனகராஜிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த விஷ்ணு எடவன் இப்படத்தை இயக்குகிறார். படத்திற்கு ஜென் மார்டின் இசையமைக்கிறார்.

'7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ்' மற்றும் இயக்குநர் விக்னேஷ் சிவனின் 'ரௌடி பிக்சர்ஸ்' ஆகிய நிறுவனங்கள் இணைந்து படத்தை தயாரிக்கின்றன.
இந்நிலையில் இப்படத்தின் முதல் பாடலான 'கன்னக்குழியா' இன்று வெளியாகி உள்ளது. இப்பாடலை ஜி.வி. பிரகாஷ் பாடியுள்ளார்.




# அந்த மாதிரி படங்களில் நடிக்க ஆசை... ஆண்ட்ரியா




நடிப்பு தாண்டி பாடகியாகவும் கலக்கி வருபவர் ஆண்ட்ரியா. படங்கள் நடிப்பது போக, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பாடல் கச்சேரிகளும் நடத்தி வருகிறார்.
சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட ஆண்ட்ரியாவிடம், 'என்ன மாதிரியான கதாபாத்திரங்களில் நடிக்க ஆசை? என்று கேட்கப்பட்டது.
அதற்கு ஆண்ட்ரியா "காதல், ரொமான்ஸ், ஆக்ஷன் என எல்லாமே பண்ணிவிட்டேன். ஆனால் முழுமையான காமெடி படத்தில் நான் நடித்தது கிடையாது. நடித்த படங்களிலும் பெரியளவில் காமெடி செய்தது கிடையாது.
அந்தவகையில் ஒரு நல்ல நகைச்சுவை படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன். அது நடக்குமா? என்று பார்க்கலாம்", என்று பதிலளித்தார்.

# நானெல்லாம் போயஸ் கார்டனில் வீடு வாங்கக்கூடாதா? தனுஷ் கேள்வி



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுஷ், நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார். அப்போது அவரிடம், 'போயஸ் கார்டனில் நீங்கள் வீடு வாங்கியதும், அதுசம்பந்தமாக பேசப்பட்ட விமர்சனங்கள் குறித்தும் நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? என்று கேட்கப்பட் டது.
அதற்கு தனுஷ் பதிலளிக்கையில், "விமர்சனங்களை எப்படி எடுத்துக்கொள்வது? என்பது நம் கையில் தான் இருக்கிறது. போயஸ் கார்டனில் நானெல்லாம் வீடு வாங்கக்கூடாதா? என்று அப்போது நான் கேட்டது, பலரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
சமீபத்தில் என்னிடம் செல்பி எடுத்த ரசிகர் ஒருவர், 'உங்களது பேச்சு என் மகனுக்கு ஊக்கத்தை தந்ததால், முன்பைவிட பயங்கரமாக வேலை செய்கிறான்' என்று என்னிடம் பெருமையாக தெரிவித்தார்.
எனவே நம் பேச்சை ஒரு உந்துசக்தியாக எடுத்துக்கொள்ளட்டும். இல்லையென்றால் மீம்ஸ்களுக்காக பயன்படட்டும். அதுவும் ஒரு பொழுதுபோக்கு தானே. அதுவும் நம் வேலை தானே. அதனால் மீண்டும் கேட்கிறேன், ஏன் நானெல்லாம் போயஸ் கார்டனில் வீடு வாங்கக்கூடாதா?". என்று குறிப்பிட்டார்.

# மனதளவில் பாதிக்கப்பட்ட தருணம்

சூர்யா - திரிஷா நடிப்பில் ஆர்.ஜே.பாலாஜி எழுதி, இயக்கியுள்ள புதிய படம், 'கருப்பு' இந்தப் படம் மே மாதம் திரைக்கு வருகிறது.
இந்த படம் தொடங்கிய நாளில் இருந்தே பல விமர்சனங்கள் எழுந்தன. படத்தின் ரிலீஸ் தேதிகளும் தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது. ஒருவழியாக தற்போது ரிலீஸ் தேதி அறிவிக்கபட்டுள்ளது.
'காட் மோட்...' பாடலை தொடர்ந்து, இந்தப் படத்தின் 2-வது பாடலான 'நாங்க நாலு பேரு...' பாடல் வெளியானது. ஆனாலும் இந்தப் பாடலுக்கு எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை.
இதுபற்றி பேசியுள்ள ஆர்.ஜே.பாலாஜி, 'நாங்க நாலு பேரு...' பாடல் படத்தில் இடம்பெறாது. அதை 2-வது பாடலாக வெளியிடலாம் என படக்குழுவினர் சொன்னதை கேட்டு வெளியிட்டோம். ஆனால் அடி அடி என அடித்துவிட்டார்கள். சூர்யா ரசிகர்களும் அப்படி செய்ததால் நானும், இசையமைப்பாளர் சாய் அபயங்கரும் மனதளவில் பாதிக்கப்பட்டோம், என்றார்.



# அட்லியின் 'ராக்கா'வில் தீபிகா படுகோனுக்கு தீவிர ஆக்ஷன் காட்சி



'புஷ்பா 2' படத்தின் வெற்றிக்குப் பிறகு அட்லி இயக்கும் படத்தில் நடித்து வருகிறார், அல்லு அர்ஜுன். இப்படத்துக்கு 'ராக்கா' என்று தலைப்பு வைத்துள்ளனர்.
அல்லு அர்ஜுனின் பிறந்த நாளை முன்னிட்டு இதன் டைட்டிலும் அவரின் வித்தியாசமான தோற்றமும் வெளியாகி வரவேற்பைப் பெற்றது. சன் பிக்சர்ஸ் மெகா பட்ஜெட்டில் தயாரிக்கும் இப்படத்தில் தீபிகா படுகோன் நாயகியாக நடிக்கிறார். ராஷ்மிகா மந்தனா, மிருணாள் தாக்குர், ஜான்வி கபூர் ஆகியோர் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.
பல்வேறு மொழிகளில் வெளியாக இருக்கும் இந்த சயின்ஸ் பிக்ஷன் படத்தின் படப்பிடிப்பு மும்பையில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தீபிகா படுகோன், 2-வது முறையாகத் தாய்மை அடைந்துள்ளார். தாய்மை பரிசோதனையில் பாசிட்டிவ் முடிவு வந்திருப்பதை அவரின் மகள் துவா, கையில் வைத்திருக்கும் புகைப்படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டு இதை அறிவித்துள்ளனர்.
இது பற்றி அவர் தரப்பில் கூறும்போது, "தீபிகா படுகோன் இப்போது 'ராக்கா' படத்துக்கான தீவிரமான சண்டைக் காட்சிகளில் நடித்து வருகிறார். படப்பிடிப்பின்போது அவருக்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
அவர் ஷாருக்கானின் 'கிங்' படத்தின் படப்பிடிப்பையும் முடிக்க வேண்டியிருக்கிறது. அவர் தாய்மை அடைந்திருந்தாலும் தொடர்ந்து படப்பிடிப்பில் பங்கேற்பார்" என்று தெரிவித்துள்ளனர்.


# சத்யராஜுக்கு பதிலடி கொடுத்த சிபிராஜ்

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில், அனைத்து கட்சிகளுமே பிரசார களத்தில் தீவிரம் காட்டி வருகின்றன.
இதில் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் களமிறங்கி இருக்கிறார்.
இதற்கிடையில் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசார களமிறங்கிய நடிகர் சத்யராஜ், விஜய்யை கடுமையாக தாக்கி பேசினார். குறிப்பாக 'தலைவா' பட பிரச்சினையின்போது விஜய் எப்படி இருந்தார்? என்பதையும் நடித்துக் காட்டினார்.
இந்த சூழலில் சத்யராஜின் மகனும், நடிகருமான சிபிராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள ஒரு பதிவு கவனம் ஈர்த்தார்.
அதில்,"உசுப்பேத்துறவன்கிட்ட உம்முனும், கடுப்பேத்துறவன் கிட்ட கம்முனும் இருந்தா வாழ்க்கை ஜம்முனு இருக்கும்" என விஜய் சொன்ன வரிகளை குறிப்பிட்டிருந்தார்.
விஜய்யின் தீவிர ரசிகரான சிபிராஜின் இந்த பதிவு, சத்யராஜின் விமர்சனத்துக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே அமைந்திருக்கிறது.









1. கஷ்டங்களை சந்தித்த பின்பு தான் மகிழ்ச்சி அருமை தெரியும் அவமானங்களை சந்தித்து பின்பு தான் வைராக்கியத்தின் அருமை புரியும் கடும் பசியை சந்தித்த பின் தான் உணவின் அருமை புரியும்

2.காதல் என்பது பாடுபடுவது கல்யாணம் என்பது படாத பாடுபடுவது

3. நடந்ததை நினைத்து அழுது கொண்டு இருந்தால் அது வாழ்க்கை இல்லை நம்மை அழ வைத்தவர்கள் முன்னால் சிரித்த முகத்தோடு வாழ்ந்து காட்டுவது தான் வாழ்க்கை

4.ஆடம்பர வாழ்க்கை 50 வயதில் கூட வரும் ஆசைப்பட்ட வாழ்க்கை அந்தந்த வயதில் மட்டும்தான் வரும் அதனால் அப்போதே வாழ்ந்து விட வேண்டும்

5.ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமை இல்லை வீழ்ந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை

6.நீ எங்கே இருக்க வேண்டும் என்பதை விதி முடிவு செய்யட்டும் ஆனால் எப்படி இருக்க வேண்டும் என்பதை நீ முடிவு செய்

---

1. ஈரம் இருக்கும் வரை இலைகள் உதிர்வதில்லை நம்பிக்கை இருக்கும் வரை முயற்சிகள் வீண் போவதில்லை

2. சந்தோஷமாக வாழ்கிறோம் என்பதை விட சமாளித்து வாழ்கிறோம் என்பதே உண்மை

3.ஆசைப்பட்ட அனைத்தும் கிடைத்து விட்டால் அனுபவம் எங்கிருந்து பிறக்கும்

4. உடம்பு படுத்து விட்டால் உயிருக்கு மரியாதை இல்லை உயிர் அடங்கி விட்டால் உடலுக்கு மரியாதை இல்லை எல்லாமே நடமாடும் வரையில்தான்

5.இழந்த இடத்தை பிடித்துக் கொள்ளலாம் ஆனால் இழந்த காலத்தை ஒருபோதும் பிடிக்க முடியாது

6.சாவி போல உண்மையாக இருங்கள் அது எக்காரணம் கொண்டும் மற்றொரு பூட்டை திறக்காது



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## யார் ஆள வேண்டும்? சொல்லிவிடு சீசே ?

எல்லோரும் இந்நாட்டு
மன்னர்கள் சொல்வதிலே
பெருமையில்லை
உண்மையிலே உள்ளதுதான்.
தன்னால் எங்கும்
இருக்கமுடியாது
என்பதனாலே அன்னையை
படைத்தார் இக்கூற்று
மெய்யோ பொய்யோ
அன்னை என்பவள்
கடவுளுக்கு சமம்
அன்னைகள் அனைவரின்
செயல்களும் இக்கூற்றை
மெய்யாக்கும் செயல்களே
நாட்டை ஆள ஒருவன்
வேண்டும் எல்லோரும்
மன்னர்கள்தான்
என்றாலும் ஆள ஒருவர்
வேண்டுமே நாட்டை ஆள
மன்னர் வேண்டும்
மன்னர்கள் அல்ல
மன்னர்கள் ஒன்று சேர,
சேர்ந்து ஒருவரை காட்டி
மன்னர் எனலாம்
அம்மன்னரே நாட்டையும்
ஆளலாம் என்றாலும்
ஆள்வது என்பது எளிதல்ல
எல்லோராலும் முடியாததும்
கூட நலன்கள் காக்க
படவேண்டும் நாட்டின் நலம்
மக்கள் நலம் எதிர்கால
சந்ததியினர் உடன்
இயற்கை வளங்கள்
இப்படி எத்தனையோ
காக்கப்பட மன்னரின் ஆட்சி
இருக்க வேண்டும்
தம் நலன் எண்ணாமல்
பிறர் நலமும் காக்க
பொது நலம் காக்க
நல்லவர் ஆள வேண்டும்
நல்லவரே வல்லவரும்
என்றாகிவிட்டால் நாடு
முன்னேற்றம் கண்டிடுமே
நாடு முன்னேற நாமும்
முன்னேறலாம் ஜனநாயகம்
காப்போம் நம்மை யார்
ஆள்வது ? கேள்விக்கு
விடையும் உன்னிடம்தான்
நல்லவர்கள் ஆளட்டும்
வல்லவர்கள் ஆளட்டும்
அவர் யார் என்பதையும்
சொல்லிவிடு "நீயே"

**ஓம் குமார் P N**



## அப்பா.!

உருப்படவே மாட்டே!..
என்று திட்டியது அப்பாதான்!
உருப்பட மாட்டானா?..என்று
ஏங்கியதும் அப்பாதான்!
தேடித் தேடி.. சுவைத்தறியாத்
திண்பண்டம்.. தனக்கில்லாப்
பொருளென்று.. ஓடி
ஓடி கொண்டு வந்தார்
அப்பாதான்!

பழசாகிப் போன அப்பாவின்
பூதக் கண்ணாடியை..
போட்டுப் பார்த்தும் தெரிந்தது
அப்பாவின் தொலைந்து
போன வாழ்க்கை.!

கோமாளி போல் தெரிந்து..
மகனை ஹீரோவாய்
உயர்த்தியவர் அப்பா!
படித்தபோது புரியவில்லை..
புரியும் போது கிடைக்காதப்
புத்தகம்.. அப்பா.!

சப்பிட்டியாப்பா என்பது
அம்மாவின் பாசம்..
சாப்பிட்டானா கேளு.. என்பது
அப்பாவின் பாசம்.!

வலிக்காமல் அடித்து
தூங்க வைத்தது அம்மா..
வலிக்கும்படி அடித்துவிட்டு..
தூங்காமல் தவிப்பது அப்பா.!
தூங்குகிற போது பாசத்தில்
அழுவது அப்பாவின் பாசம்.. !

கவிதை என்றால் அம்மா.!
வரலாறு என்றால் அப்பா.!

படித்து விட்டு வேலை தேடி
சாலையில் அலையும் போது..
தகப்பனின் வியர்வையை
உணர்கிறான் ஆண் அப்பா.!

ஐந்து வயதில் அவர்
ஹீரோ.. இருபது வயதில்
அவர் வில்லன்! ஐம்பது
வயதில் தெய்வமாய் அப்பா.!
இருந்தவரை அறிய வில்லை
அப்பாவின்
பெருமை..
இல்லாத
போது தானே
தெரிகிறது
அப்பாவின்
அருமை.!



**வே.கல்யாண்குமார்.**



## ஏப்ரல் 23

ஐந்தாண்டின் விதியை எழுதும்
வீரிய வெளிச்ச விதை நாள்...
முட்டாள் மாதமென்று யாரும்
முணுமுணுக்க வேண்டாம்!

ஆண்டுதோறும் நடக்கும்
அய்யனார் திருநாள் அல்ல...
ஆண்டி முதல்
அனைவரையும் ஆராதித்து
வணங்கும் பெருநாள்!

அகில உலக வாசிப்பு நாளில்
ஆட்சியாளரைத் தேர்வு
செய்வது தற்செயல் நிகழ்வே
என்றாலும் தேர்தலுக்கே இது
பெருமை தானே!

வழக்கம் போல் வரும் தேர்தல்
வாங்குவதும் வழக்கமே என்று
வழி தவறுதலை
வழக்கமாக்கும் வழமைக்கு
முற்றுப்புள்ளி வைப்போம்.!


ஓட்டுக்கு விலை
தருவோரை ஒட்டு
மொத்தமாய்
ஒதுக்கிடுவோம் விலை
போகவே மாட்டோம்
என்று வீதி தோறும் எழுதி
வைப்போம்!

வானத்தை வில்லாய்
வளைத்து வளம்பல புரிவோம்
என்று வாக்குறுதிகளை
அள்ளி வீசி வளைத்துப்
போட துடிப்பார்


களம்பல பார்த்து விட்டோம்
கஷ்டம் பல கண்டு விட்டோம்
இனிவரும் காலம் இனிதாய்
இருந்திட கருத்தாய்
யோசிப்போம்

வாக்களிக்க வாகனம்
மறுப்போம் வேட்பாளர்
தராதரம் அலசுவோம்
ஒரு வாக்கு ஒரு மாற்றம்
என்பதை உள்ளம் நிறுத்தி
உன்னதம் காப்போம்

ஒரு நாள் கூத்து தானே
என்று ஓராயிரம்
குற்றமாக வேண்டாம்...
ஒரு நாள் 'ஓட்டு' கூட்டும்
ஒருமித்த வேள்வியாக
வேண்டும்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



## வாழ்க்கை

மனதின் முடிச்சுக்கள்
அவிழ்க்க முடியாதவை.
அவிழ்த்து விட்டோம் என்று
ஒவ்வொரு முறையும்
நினைத்து ஏமாந்து
போகிறோம். எப்படியோ
விழுந்துவிட்டவை அல்ல,
நாமாக போட்டு முடிச்சு
அவை,
முடிச்சு என்று
அறியாமல்!
எப்படி நாமே
அவிழ்க்க
முடியும்?
அவிழ்க்கத்
தெரிந்த
யாராவது வரட்டும்
என்று காத்திருக்க
வேண்டியதுதான்!



**கே. பி. ஜனார்த்தனன்**



## "நல்வரவேற்பு கிட்டும்."

எழுதிய காவியம்
வரைந்த ஓவியம்
இவை இயல்பாக இருந்தால்
இன்றில்லாவிட்டாலும்
என்றேனும் ஓர்
நாள் நச்சௌனும்
நல்விமரிசனம்
படைப்பாளனின்
முகவரிக்குப் போய்ச்
சேரும்.

ஆதலால்..
படைப்பாளன் தன் படைப்பைச்
சரியாக படைத்தால் போதும்..!
அதற்குக் கிடைக்க வேண்டிய
நல்வரவேற்பு ஒருநாள்
கண்டிப்பாகக் கிட்டும்..!

தோகை விரித்தாடிய மயில்;
சோலையில் மதுரகீதமிசைத்த
குயில்; அடைமழைக்
காலத்தில் கச்சேரி செய்த
தவளை; இம்மூன்றிற்கும்
இருக்கும் ரசிகர்கள் கூட்டம்
குறித்து அவைகளுக்கு
ஒன்றும் தெரியாது..!

ஆனால்..


இம்மூன்றும் நிகழ்த்தும்
கலையம்ச கேளிக்கைகளை
அவைகளின் தீவிர
ரசிகர்களெனநாம் பலமுறை
விரும்பிக்கேட்டாலும்
அதற்கு அவை ஒருபோதும்
உடன்படாது..!



**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**
திருச்சி

# நூல் விமர்சனம்

'ஆயிரம் ஹைக்கூ'
நூல் ஆசிரியர் :
கவிஞர் இரா. இரவி.
அணிந்துரை : முது முனைவர் வெ .இறையன்பு இ ஆ ..ப .
வானதி பதிப்பகம் ,23.தீனதயாளு தெரு ,தியாயராயர் நகர் . சென்னை .17 தொலைபேசி 044–24342810 , 044– 24310769. மின் அஞ்சல் vanathipathippakam@gmail.com
184 பக்கங்கள் விலை ரூபாய் 100.




இதயத்தில் சிந்தனை யோட்டத்தை ஏற்படுத்தும் கவிதைகள் !

எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பவர் இரா. இரவி. அவரிடம் எந்தப் பணியைக் கொடுத்தாலும் அதை உடனே செய்து முடிக்கும் தகைமை பெற்றவர். அவரை நாங்கள் 'புலிப்பால் இரவி' என்று அழைப்பதுண்டு. சமூக அக்கறையும் தாய்மொழிப்பற்றும் நிரம்பப் பெற்றவர். பகுத்தறிவு வாதி. ஹைக்கூ என்னும் வடிவத்தைக் கொண்டு பல விதங்களில் பங்களிப்பைச் செலுத்தி வருகிறார்.

அவருடைய 'ஆயிரம் ஹைக்கூ' என்கிற நூல் பலவிதமான காலங்களில் இருக்கும் நுட்பங்களை வகுத்துத் தந்திருக்கிறது. அந்நிய மொழியின் மோகம் அதிகம் நிரம்பப் பெற்றவனும் அடிபடுகிறபோது 'அம்மா' என்றே அலறுகிறான். காரணம் தாய்மொழி ஆழ்மனத்திலிருந்து வருகிறது. ஆங்கிலம் மேல் மனத்திலிருந்து முளைக்கிறது. அதை இரவி அழகாக சுட்டிக் காட்டுகிறார்.

தடுக்கி விழுந்ததும் தமிழ் பேசினான் 'அம்மா' !

அதைப் போலவே சிலேடையாக எதார்த்தங்களை அவருடைய கவிதை சுட்டிக் காட்டுகிறது.

காசு கரியானது தீபாவளி கரி காசானது நெய்வேலி !

சுற்றுலாவைப் பற்றி அத்துறையில் அமிழ்ந்து பணியாற்றும் இரவியின் ஹைக்கூ. இதில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சுற்றுலா என்பது வெறும் பொழுதுபோக்கல்ல. அது பலதரப்பட்ட மக்களைச் சந்திக்கும் அறிய வாய்ப்பு. நம்மிடம் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் உயரிய அனுபவம். அதிக நாடுகள் பயனப்பட்டவன் முதிர்ச்சி அடைகிறான். பட்டறிவால் பக்குவப்படுத்திக் கொள்கிறான். தொடர்ந்து கற்கிறான். உலக மனிதர்கள் அனைவரும் நம்மைப் போன்றவர்கள் என்கிற பரந்த மனப்பான்மையைப் பற்று வைக்கிறான்.

முட்டாளை அறிவாளியாக்கும் அறிவாளியை மேதையக்கும் சுற்றுலா !

குற்ற உணர்வுள்ளவர்கள் தங்கள் பாவத்திற்குப் பரிகாரம் தேட கோயில்களுக்குத் திருப்பணி செய்வதையும், உண்டியல்களில் திருட்டுத்தனமாகச் சேர்த்த பணத்தைப் போட்டு கடவுளையும் பங்குதாரராகச் சேர்ப்பதையும் இரவி நையாண்டி செய்கிறார்.

கறுப்புப் பணம் வெள்ளையானது உண்டியல் வசூல் !

வீடு மாறும்போதே எதையோ இழந்தது போன்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. பழகிய வீட்டை விட்டுப் பிரிகிற போது நமக்குள் உள்ள எதோ ஒன்று கொஞ்சம் இழந்து போவதைப் போன்ற எண்ணம் ஏற்படுகிறது. அந்த அனுபவத்தைப் புலம் பெயர்ந்தோருடைய வலியோடு ஒப்பிட்டு இரவி நமக்கு உணர்த்துகிறார். வீடு மாறிய போது உணர்ந்தேன் புலம் பெயர்ந்தோர் வலி ! தூக்குத் தண்டனைக்கு எதிராக இரவியின் பார்வை ஆழமாகப் பதிகிறது. அவை பற்றிய கருத்துக்கள் பல்வேறாக இருப்பினும் அவருடைய பார்வை சிந்திக்கத்தக்கதாக இருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஒரு சிந்தனையைத் தூண்டுவது தான் ஒரு நல்ல கவிதையின் வேலை.

கொலை செய்தவனை கொலை செய்தது அரசு தூக்குத்தண்டனை !

இயற்கை குறித்த இரவியின் பார்வைகளும் நேசிப்புக்குரியன. பனித்துளிக்காகவும் அவருடைய நெஞ்சம் பரிதாபப்படுகிறது.விடிய விடியத் தவம் விடிந்ததும் மரணம் மலரில் பனித்துளி !

அவருடைய கவிதைகள் தத்துவை பார்வையையும் உள்ளடக்கியதாக மலர்ந்திருக்கின்றன. இயற்கையின் எல்லா பிரிவுகளும் ஐக்கியத்தை அடையாளப்படுத்துவனவாக இருக்கின்றன. இலைகள் மரத்தின் பாதத்திலேயே விழுந்து அது செழிக்க உரமாகி உதவுகின்றன.

மரத்திற்கு உரமானது உதிர்ந்த இலை !

மென்மையான உணர்வுகளும் இரவியின் குரும்பாக்களில் தெறிக்கின்றன. காதலைப் பற்றியும் அவர் கணிசமான கவிதைகளை எழுதித் தள்ளுகிறார். புவிஈர்ப்புச் சக்தியை விஞ்சிடும் அவள் விழிஈர்ப்புச் சக்தி !

வாழை இலையில் உண்பது உணவின் சுவையை அதிகப்படுத்துகிறது. இயற்கை பாழ்படாத சுற்றுச்சூழலுக்கு உகந்த தட்டாய் இருப்பது வாழையிலை. தண்ணீரின் தேவையையும் குறைக்கிறது. மக்கி மண்ணுக்கு எருவாகவும் மாறுகிறது. வாழைஇலையைப் பற்றி இரவி எழுதியிருக்கிறார்.

கூடியது சுவைஇலையில் இட்ட உணவு ! இரவியின் பேனா மையை மட்டுமல்ல. கோபத்தையும் சில இடங்களில் கக்கியிருக்கிறது. கட்டைவிரல் கேட்ட நாக்கை வெட்டினான் நவீன ஏகலைவன் !

கவிதை நூல் முழுவதும் சமூக அக்கறையும் சகோதரத்துவமும், எளியவர்களுக்கான குரலும் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நூல் அனைவராலும் வாசிக்கப்படும். அவர்கள் இதயத்தில் மிகப் பெரிய சிந்தனையோட்டத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். கவிஞர் இரா. இரவிக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்.

## சங்கரர் பெற்ற ஞானம்


காசியில் ஒருநாள்..
கங்கையில் குளித்து
சீடர்களுடனே ஒரு
குறுகியப் பாதையில்
செல்கிறார் சங்கரர்.!
மேல் குளித்தார் அவர்
மேன்மை கங்கையில்
கால் நனைத்தார் அவர்
சிவனோ சிரித்தார்.!

ஒருவழிப் பாதையில்
சங்கரர் எதிரே.. சிவன்
புலையன் வடிவிலே..
நான்கு நாய்களுடன்
அழுக்கு உடம்புடனே..
வெறுக்கும் தோற்றத்தில்
ஆதிசிவன் அங்கே..
ஆதிசங்கரர் முன்னே
வருகிறார்.!

கண்டதும் முகம்
சுளித்தே..சண்டாளனே
எங்கு நீ வந்தாய்?
எதிரில் ஏன் வந்தாய்?
நாய்கள் சுழ.. ஆடைகள்
கிழிய.. அசுந்தம்
நிறைந்தவனே. அருகே
வராதே.! அப்பால் விலகிப்
போ..! அலறினார் சங்கரர்.!
பதறினர் சீடர்கள்.!

சிவனார் சிரித்தார்..
புலையனின் வடிவிலே
அந்தணன் முன்னே..
நான்கு வேதங்களே
நான்கு நாய் உருவில்!
அறியவில்லையே.. சங்கரா..
சங்கரா..

எதனை விலகச் சொல்கிறாய்?
சடமாய் தெரியும் உடலையோ?
ஆன்மாவாய் கலந்த உன்



உயிரையோ.?
காண்பதையா? காண
இயலாத ஜீவனையா? எதனை
விலகச் சொல்கிறாய்? என்று
கேட்டவுடன் வெவவெலத்துப்
போனார் சங்கரனார்!

தன்னை அறிந்தார்.. தன்முன்
நிற்பவரை அறிந்தார்..
மண்ணில் விழுந்து புலையரின்
காலை தொட்டுப் பணிந்தார்.!
என்னே கொடுமை.. இவரை
அறியேனே..!

சத்குரு நீயே.. சகலமும் நீயே..
யாதும் ஒன்றே..! யாவரும்
உறவே.! மேலென்று கீழென்று
எதுவுமே இல்லை.!எல்லா
உயிர்களும் இறைவனின்
வடிவம்! என் முன் நிற்பது..
இறைவன்.. இறைவன்!

சூரியன் ஒளியது கங்கையில்
விழுமே.. சேரியில்.. சாக்கடை
நீரிலும் விழுமே விழுமே..
பொன்னாலான கிண்ணத்தில்
விழுமே! மண்ணால் செய்த
பானையில் விழுமே.!
பார்க்கத் தவறினேன்!
பரசிவனே பரம குருவே!

எவ்வுயிர் தன்னிலும்
இருப்பது ஒன்று.! இன்று
உணர்த்திய இறைவா.. உன்
அருளே! ஏற்றம் தாழ்வு எதுவும்
இல்லை.. ஜாதி பேதங்கள்
அறியாமையின் எல்லை!
யாதும் பரம்பொருள்.. யாவரும்
கேட்பீர்! ஆதி சங்கரர்
அறிவித்தாரே! அத்வைதம்
என்பது அதன் பெயரே.!

**வே.கல்யாண்குமார்.**






சரி என்கிறேன்
கம கமக்கிறாய்
என் பதநி..

இன்னும் ஒரு ஸ்வரமே
முடிந்தபாடில்லை..
என் ஏழு ஸ்வரம் நீ.



ஆதி தாளத்தில்
அடங்கி
விடுகிறாய்..
வாசிக்கத்தான்
கை
துருதுருக்கிறது.

**ரிஷபன்**



ஆள்காட்டி விரல் நகத்தில்
மை அதி முக்கியமான
கடமை

மக்களாட்சியின் மகத்துவம்
வாக்களிப்பில் தான்
வெளிப்படும்

ஒவ்வொரு வாக்கும்
முக்கியம் முடிவை
நிர்ணயிக்கும் ஆச்சரியம்

ஆகச்சிறந்தவரை
தேர்ந்தெடுப்போம்
ஆக்கபூர்வமாய்
செயல்படுவோம்

நேர்மையான வேட்பாளரை
நீலப் பொத்தான் அழுத்தி
ஆதரிப்போம்



தேர்தல்
திருவிழாவில்
பங்கெடுப்போம்
தவறாமல்
நாமும்
வாக்களிப்போம்

**நாகை பாலா**



## மள வந்துச்சு அப்பூ

பாளம் பாளமாய்
வெடித்துக் கிடந்தது;
பரமக்குடியும், முது
குளத்தூரும்.

வானம் பார்த்த பூமி,!
மானம் காக்க விளையும்;
வத்தல் மிளகாயும்
உளுந்தும்,எள்ளும்.

கை வைத்து கண் உயர்த்தி
வான் நோக்கும் சமுசாரி;
ஏமாந்து போவதே நடக்கும்;
தினமும்.

பெருமூச்சு ஒன்றையே விட்டு
வயக்காட்டு வரப்பில்; அவன்
நடக்க; ஒரு துளி நீர்
சூடாக அவன் புறங்கையில்
விழ; சூடாக, இன்னொரு
சொட்டு! இன்னும் ஒன்று!

கோடையில் விழுந்த
மழைத் துளியே தான்!

மண் சூடு கிளம்ப
கணப்பு தாங்காமல்
சாரை ஒன்று வயல்
இறங்க;

மண் வாசனை நிலமெங்கும்!
காணாமல் போனது
கானல் நீர் படுகை!

சிலிர்த்தது முதுகு!
உலர்ந்து சருகாகிப்போன
உடல் சற்றே தளர்ந்தது!
முகம் தூக்கி, கண்
தொடுவானம் நோக்க;
சர சரவென ஆலங்கட்டி மழை

ஒன்று, இரண்டு, மூன்றென
கல் முதுகில் விழ
கல்லின் கனத்தை
குனிந்தே, தாங்கி நடந்தார்;
முகமெல்லாம் சிரிப்பு!

நடை வேகம் கூட்டாமல்
மழையில் நனைந்தே
கால சாமி சாவகாசமாய்
நடையிட்டு செல்ல;



வீட்டில் செல்லியின்
பல்காட்டி சிரிப்பின்
சிலிர்ப்பு!
"மள வந்துச்சா அப்பூ!"

**சசிகலா விஸ்வநாதன்**



## வாண்டு மாமா!
## (வி.கிருஷ்ணமூர்த்தி)

அறுசீர் மண்டிலம்.

குழந்தை இலக்கியப்
பிதாமகர் குழந்தைக்
கதைகளைப்படைத்தவர்
அழகு இதழ்களின்
ஆசிரியர் அன்பில்
குறைவிலா வாண்டுமாமா!
பழகுத் தமிழிலே பலகதை
பண்பாய் எழுதியே
தேர்ந்தவர் ஒழுக்கந்
தன்னிலே மேன்மையர்
ஓதும் கதையிலே
பான்மையர்!

பெரியோர் கதைகளை
எழுதினார் பெருமை
தம்மையே பாடினார்
ஒருங்கு தன்னிலே
உயர்ந்தவர் ஓடி யாடியே
உழைத்தவர்!
அரசின் பரிசுகள் பெற்றவர்
அறிவில் சிறந்திட நின்றவர்
அரிமழம் ஊரிலே பிறந்தவர்
அஞ்சா நெஞ்சரே
வாண்டுமாமா!



## புரட்சிக்கவி பாரதிதாசனார்!

நேரிசை வெண்பா!

புரட்சிக் கவிஞர்!
புதுமைக் கவிஞர்!
இருண்டஇல் லத்தை
ஒளியாய்ப்..புரிந்தார்!
பொதுவுடைமை பெண்கல்வி
பூத்திட நல்ல இதயமீர்த்த
கள்வன் இவர்!

தமிழையே மூச்சாய்த்
தமிழையே பேச்சாய்க்
கமழ்ந்திடக் கண்டார்
காணும்..அமைந்தநல்
ஊரெல்லாம் நந்தமிழ்
உன்னத மாகவே
சீராய் விழைந்தாரே சீர்!

------------------

குழந்தைப் பாடல்

## எங்கள் தமிழ்மொழி!

இனிமை மொழியே
தமிழ்மொழி எங்கள்
மொழியே தமிழ்மொழி
தனிமை மொழியே
தமிழ்மொழி
தக்க மொழியே தமிழ்மொழி!

உயர்ந்த மொழியே
தமிழ்மொழி ஓங்கும்
மொழியே தமிழ்மொழி
நயன்மை மொழியே
தமிழ்மொழி நாடே போற்றும்
தமிழ்மொழி!

பொங்கும் மொழியே
தமிழ்மொழி பொலிவு
மொழியே தமிழ்மொழி
எங்கும் எங்கள் தமிழ்மொழி
ஏற்ற மான தமிழ்மொழி!

------------------



## துளிப்பாக்கள்

விழிகளில் கண்ணீர்
உப்புக் கரிக்கவில்லை
ஓவியத்தில்!

முப்பது நாளுக்கு ஒருமுறை
நிலவுக்கு ஓய்வு
அமாவாசை !

வானத்திற்கும் பூமிக்கும்
ஏணி ஏற முடியவில்லை
மழைத் தூறல்!

விண்ணில் ஒரு நிலா
மண்ணில் ஒரு நிலா
கிணற்று நீரில் மிதக்கிறது!



கண் சிமிட்டும்
விண்மீன்கள்
மிதக்கும்
நிலாவை
பார்த்து இமை
மூடிகின்றன

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை




## ரகசியம்

மனதில் புதைந்து வைத்த
புதையல்// அடுத்தவருக்கு
தெரியாதிருப்பின்
அதிக நலம்// மனதில்
வைத்திருப்பது
பாரமாய் தோன்ற//
மிக நெருங்கியவரிடம்
மட்டுமே பகிர// காதருகில்
வார்த்தைகளை மெல்லமாய்
உச்சரித்து // கேட்பவர் விழி
விரிக்க சந்தோஷித்து//
வேறு யாரிடமும்
கூறாமலிருக்க உபதேசித்து//
தான் நிம்மதியுடன்
பெருமூச்சு விடும்போதே//
கேட்டவருக்கு
நெருக்கமானவரிடம்
அழகாய் பரவிடும்//
யாருக்கும் தெரிய வேண்டா
மென்றெண்ணிய
ரகசியம்//



**உமாதேவி சேகர்**
தஞ்சை
பியூட்டிஷியன்.



இசைக்குறிப்புகள்
எழுத வேண்டும்
என்னுள் தபேலா
வாசிக்கும்–உன்
இடுப்பு மடிப்பினில்!

இயல்பாய் தானடி
பேசினாய் இன்னிசை
ஒலிக்கிறது இதயத்துக்குள்!

சாந்தமாய் தானடி பார்த்தாய்
ரோந்து வரும் போலீஸ்
ஜீப்பாய் வீராப்பாய் திரிகிறது
மனசு!

எல்லாம் முடிந்த பிறகு
விலகும் போது கூட
வலிக்க தான் செய்கிறது
Bad Memories–ல்
நம் காதல் ஏன்
இடம் பெற வேண்டும்
போவதற்கு முன்
ஒரு Good Night யாவது
சொல்லி விட்டுப் போ!

இப்போதைக்கு
திருந்த மனமில்லை
இன்னும் கொஞ்சம்
காதலித்து கொள்கிறேன்!

அகராதி தேடுகிறேன்
ஆயிரம் அர்த்தம் சொல்லும்
உன் பொல்லாத விழிகளின்
பார்வைக்கு!

மண் பார்க்கும் வரை–உன்
கண் பார்ப்பதை
நிறுத்த போவதில்லை!

பறவைக்கு வானமே எல்லை
எனக்கு உன்னால் மட்டுமே
தொல்லை!

உறக்கம் எப்படிடீ வரும்
கனவுகளில் கூட
உந்தன் நெருக்கம் வந்தால்!

என்னை விட்டு விலகுவதற்கு
ஆயிரம் காரணங்களை
தேடுகிறாய் அறுபடும்
அன்பிலும் காதலோடு
உன்னையே காண்கிறேன்
நான்!

**லி.நௌஷாத் கான்**




குழந்தைப் பாடல்


## சிந்தனைசெய் பாப்பா!

சிந்தனை செய்வாய் பாப்பா
சீருடன் படிப்பாய் பாப்பா
வந்தனை செய்வாய் பாப்பா
வண்ணமாய்ப் படிப்பாய்
பாப்பா!

இலக்கியம் படிப்பாய் பாப்பா
இலக்கணம் படிப்பாய் பாப்பா
கலைகளே உண்டு பாப்பா
கனிவுடன் படிப்பாய் பாப்பா!

நீதிநூல் உண்டு பாப்பா
நிறைவுடன் படிப்பாய் பாப்பா
ஓதிடும் குறளும் பாப்பா
ஒண்மையாய்ப் படிப்பாய்
பாப்பா!

**முனைவர் இராம.வேதநாயகம்.**



## கிராமம்

அமைதியான ஊரு
பறவைகள் வாழும் பாரு..

செழிப்பான நிலம்
பூத்து குலுங்கு பாரு...

மேன்மையான மக்கள்
வாழும் ஊரு மெய் மட்டுமே
குடி கொண்டு இருக்கும்
பாரு...

ஆத்தங்கரை,
குளத்தங்கரை ஓரம்
எப்பவும் இருக்கும்
அங்கே ஈரம்...

நத்தை, நண்டுகலெல்லாம்
ஊர்ந்து செல்லும் ஓரம்
மழை வரும் என்ற அந்த
நேரம்...

பூத்து குழுங்கிய மலர்கள்
பூமியில் தூவி அலங்கரிக்கும்
மனிதனின் மனம் அதை
பார்த்து புல்லரிக்கும்...



கிராம வாழ்க்கை
நம்மை
கிறங்கடிக்கும்
கிராமம்தான் நம்மை
வாழ வைக்கும்...!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## விலைவாசி

சேற்றை சீர்படுத்தி
நாற்று நட்ட இடமெல்லாம்
புல்டோசரில் சமபடுத்தி
கருங்கற்களை
நட்டுவைத்து மலிவு விலையில்
மனைகள் என
விளம்பரம் கொடுப்பதால்தான்
அசுரவேகத்தில் உயர்கிறது
அத்தியாவசியப்பொருள்கள்,

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

# அனைவருக்கும் உதவும் 20 சமையல் குறிப்புகள் கட்டாயம் தெரிஞ்சுக்கோங்க!



**சமையலை எளிமையாக முடிக்க, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய சமையல் குறிப்புகள் இதோ.**

சப்பாத்திக்கு மாவு பிசையும் போது ஓமம் சேர்த்தால் சப்பாத்தியின் சுவை கூடும்.

பால் காய்ச்சிய பாத்திரத்தில் கோதுமை மாவு சேர்த்து சப்பாத்திக்கு மாவு பிசைந்தால் சப்பாத்தி சாஃப்டாக வரும். பாத்திரமும் எளிதில் சுத்தமாகும்.

பருப்பு வேக வைக்கும் போது குக்கரில் சிறிதளவு எண்ணெய் சேர்த்தால் தண்ணீர் வெளியே வராது. ட்ரை பண்ணி பாருங்க.

சப்பாத்தி செய்வதற்கு மாவு பிசையும் போது ஓமம் சேர்த்தால் சப்பாத்தியின் சுவை கூடும்.

இனிப்பு பலகாரங்கள் செய்யும் போது ஒரு சிட்டிகை உப்பு சேர்த்தால் பலகாரம் கூடுதல் சுவையாக இருக்கும்.

தேங்காய் பாலில், பொட்டுக்கடலை பொடி மற்றும் உப்பு கலந்து தாளித்து இறக்கிறனால் இன்ஸ்டண்ட் சட்னி ரெடி.

இஞ்சி பூண்டு அரைக்கும் போது, உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து காற்று புகாத டப்பாவில் வைத்தால் நீண்ட நாட்களுக்கு கெடாமல் இருக்கும்.

பால் பாயாசத்திற்கு, பாலின் அளவை குறைத்து ஊறவைத்த பாதமை அரைத்து வடிகட்டி சேர்த்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

பஜ்ஜி செய்ய மாவு கரைக்கும் போது கொஞ்சமாக ஓமம் சேர்த்தால் சுவையும் மனமும் கூடுதலாக இருக்கும்.

ஈரமான பாத்திரத்தில் முட்டையை அடித்து ஊற்றி கலக்கினால் பாத்திரத்தில் முட்டை ஒட்டி வீணாகாது.

தோசைக்கு மாவு அரைக்கும் போது, ஒரு கைப்பிடி ரவை மற்றும் ஜவ்வரிசி ஊறவைத்து சேர்த்து அரைத்தால் தோசை சாஃப்டாகவும் மொறுமொறுப்பாகவும் இருக்கும்.

வெங்காயத்தை சமையலுக்கு பயன்படுத்துவதற்கு முன் ஃப்ரிட்ஜில் வைத்தால், வெங்காயம் வெட்டும் போது கண்களில் நீர் வராது.

மிளகாய் பஜ்ஜி செய்வதற்கு முன், பஜ்ஜியை கொதிக்கும் நீரில் போட்டு செய்தால் சுவை நன்றாக இருக்கும்.

மட்டன் பஞ்சு போன்று இருக்க, சமைப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் கறியை தயிரில் ஊறவைக்கவும்.

அரைத்த தோசை மாவை குளிர்ச்சியான இடத்தில் வைக்காமல் சூடான பகுதியில் வைத்தால் நன்கு புளித்து வரும்.

சமையலில் காரம் அதிகமாகிவிட்டால், கொஞ்சமாக தேங்காய் பால் அல்லது தயிர் சேர்த்தால் காரம் குறையும்.

மாதத்திற்கு ஒரு முறை மிக்ஸி ஜாரில் உப்பு சேர்த்து அரைத்தால் மிக்ஸியின் ப்ளேடுகள் கூர்மையாக இருக்கும்.

வாழைக்காயை ஈரம் இல்லாத கவரில் போட்டு இறுக்கமாக கட்டி ஃப்ரிட்ஜில் வைத்தால் சீக்கிரம் பழுக்காது.

கீரையை கடைந்த பின், கெட்டியான தேங்காய் பால் ஊற்றி லேசாக கொதிக்க வைத்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

இட்லி அல்லது தோசை மாவு புளித்து விட்டால், காய்ச்சி ஆறவைத்த பாலை கொஞ்சமாக சேர்த்தால் புளிப்பு தன்மை குறையும்.

குக்கரில் பருப்பு வேக வைக்கும் போது உப்பு சேர்த்தால் சீக்கிரம் வேகாது.

# அடிக்கும் வெயிலில் காலையில் எழுந்தவுடன் என்ன சாப்பிடலாம்?

அடிக்கும் வெயிலில் காலையில் எழுந்தவுடன் என்ன சாப்பிடலாம்? உடல் ஜில்லுனு இருக்க?

கோடை வெயிலும், வெப்ப அலையும் அதிகரித்து வரும் இந்த காலக்கட்டத்தில் பலரும் பலவகை உடல் பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். பலர் உணவுக்கு பதிலாக ஜூஸ் வகைகளையே உணவாக எடுத்து வருகிறார்கள். குறிப்பாகவே கோடையில் எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவுகளை சாப்பிடுவது உடலுக்கு நல்லது.

கோடை வெயிலில் காலையில் எழுந்தவுடன் என்ன சாப்பிடலாம்?



## தர்பூசணி

தர்பூசணியை கோடைக்காலத்தில் காலை வேளையில் சாப்பிட்டு வந்தால், உடலை நீரேற்றமாக வைத்திருக்கலாம். இந்தப் பழத்தில் 90 சதவிகிதம் நீர்ச்சத்தும், எலக்ட்ரோலைட்டுகளும் உள்ளதால், உடலில் உள்ள நீர்ப் பற்றாக்குறையை நீக்கி, நாள் முழுவதும் ஆற்றலைத் தருகிறது. தர்பூசணியை உட்கொள்வதால் இதயம் ஆரோக்கியமாக இருப்பது மட்டுமின்றி கண் பிரச்சனைகளும் குறையும்.

## பேரிச்சம்பழம்

கோடையில் வெறும் வயிற்றில் டேட்ஸ் எனப்படும்



பேரிச்சம்பழம் சாப்பிடலாம். பேரிச்சம்பழத்தில் ஊட்டச்சத்துக்கள் அதிகம். சோடியம், பொட்டாசியம், நார்ச்சத்து, இரும்புச்சத்து போன்றவை இதில் உள்ளதால், உடலுக்கு வலிமை தருவதுடன், வயிற்றை நீண்ட நேரம் நிறைவாக வைத்திருக்கும்.



## வாழைப்பழம்

கோடையில் காலையில் சாப்பிட வாழைப்பழம் ஒரு சிறந்த தேர்வாகும். இது உடலுக்கு ஆற்றல் கொடுப்பதோடு வயிற்றுக்கும் நன்மை தரும். அதோடு வயிற்றை நீண்ட நேரம் நிறைவாக வைத்திருக்கும். வாழைப்பழத்தில் சோடியம், பொட்டாசியம், நார்ச்சத்து, புரதம், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் சி போன்ற பல வகையான ஊட்டச்சத்துக்கள் காணப்படுகின்றன, இது உடலுக்கு ஆற்றலைத் தருவது மட்டுமல்லாமல், மனநிலையையும் மேம்படுத்துகிறது.






















**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


















SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS
THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
RG Rajendra Prasath
Proprietor
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL MARKETING SOLUTIONS
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்




## மறக்க முடியுமா?

1980 களில்" மூன்றாம் பிறை" படத்தை பார்த்து விட்டு வந்த அம்மா, அதில் ஸ்ரீதேவி வளர்க்கும் "பிரவுன்" நிற நாய்க்குட்டி போல எங்கள் குடியிருப்பில் ரோஸி என்ற பெண் நாய், ஈன்ற கருநிற மொழு மொழு குட்டிக்கு " சுப்ரமணி" எனப் பெயரிட்டார்.

அதிகாலை கிணற்றில் நீர் இறைக்க அம்மா சென்றால், பின்னாலேயே துள்ளிக் கொண்டு ஓடி வரும்.

யார் கண் பட்டதோ? அந்த ஆகஸ்ட் 15 அன்று , எதிர் வரிசை குடியிருப்பில் இருந்த அதிகாரியை அழைத்துச் செல்ல வந்த ஜீப் டிரைவர் , வண்டியை ரிவர்ஸ் எடுக்கும் போது கவனிக்காமல் "சுப்ரமணி " மேல் ஏற்ற அது இறந்து போனது.

இன்றும் ஆகஸ்ட் 15 என்றால் "சுப்ரமணி" இறந்து போனதுதான் முதலில் நினைவிற்கு வரும்.

அதன் இறப்பை மறக்க முடியுமா? என அம்மா தான் இருந்த காலம் வரை, சொல்லிக் கொண்டேயிருந்தார்.



## ஹெல்தி கிரீன் சட்னி



இட்லி, தோசை, பொங்கல், உப்புமா, பிரட் எல்லா வற்றிக்கும் இந்த ஒரே" சைட் டிஷ்" போதும். அடுப்பு தேவை இல்லை, எண்ணெய் தேவை இல்லை. புளி தேவை இல்லை மொத்தத்தில் இது ஒரு "ஹெல்தி கிரீன் சட்னி" என்று சொல்லலாம். குழந்தைகள், வயதானவர்கள் விரும்பி சாப்பிடுவார்கள் செய்து பாருங்கள். செய்து பிரிட்ஜில் வைத்து கொண்டால் ஐந்து நாட்கள் வரை பயன்படுத்தலாம். பார்க்க கலர் ரொம்ப அழகாகவும் இருக்கும்

"ஹெல்தி கிரீன் குயிக் சட்னி"

தேவையான பொருட்கள்(எல்லாம் ப்ரஷ்ஷாக இருக்க வேண்டும்)

நாட்டு தக்காளி 5
புதினா இலைகள் 2 கைபிடி அளவு
கொத்தமல்லி இலை 2 கைபிடி அளவு
கறிவேப்பிலை 1 கைபிடி அளவு
பச்சை மிளகாய் 4
இஞ்சி 1துண்டு
எலுமிச்சை சாறு 2 டீஸ்பூன்
உப்பு சிறிதளவு

செய்முறை

எலுமிச்சை சாறு தவிர எல்லாவற்றையும் தண்ணீர் விடாமல் மிக்சியில் அரைத்து கொண்டு காற்று புகாத டப்பாவில் போட்டு கடைசியாகப் எலுமிச்சை சாறு சேர்த்து நன்கு கலந்து பிரிட்ஜில் உடனேயே வைத்து விடவும். தேவை படும் போது எடுத்து பயன்படுத்தி விட்டு உடனேயே உள்ளே வைத்து விட வேண்டும். பிரட்டில் இதை தடவி சீஸ் ஸ்லைஸ் சேர்த்து டோஸ்ட் செய்து கொடுத்தால் உங்கள் வீட்டு குட்டீஸ் உங்கள் கன்னத்தில் அன்பு பரிசை நிச்சயமாக தருவார்கள்.

## கணக்கு டீச்சரா கொக்கா...!!!???



கணிதப் பேராசிரியையான ஒரு பெண்மணி தன் கணவனுக்குக் கிடைத்த 10 லட்ச ரூபாயை எங்கே முதலீடு செய்வது என்று அருமையான அறிவுரையைக் கூறினார்.

நீங்களும் முயற்சிக்கலாமே!

1..2..3...4...5...6...7...8...9...

மேலே கண்ட எண்களில் ஒரு லக்கி எண்ணை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதை 3ஆல் பெருக்கவும்

வரும் விடையுடன் 3 ஐக் கூட்டவும்.....

விடையை 3 ஆல் மீண்டும் பெருக்கவும்....

இப்போது இரண்டு இலக்க எண் கிடைத்ததா?

அந்த இரண்டு இலக்கங்களைக் கூட்டவும்!

அந்த எண் தான் உங்கள் முதலீட்டு இலக்கு. அந்த எண்ணை வைத்து நீங்கள் எதில் முதலீடு செய்ய வேண்டும் என்று கீழே உள்ள பட்டியலைப் பார்த்து சரியான முதலீடு செய்யுங்கள்.

1. நிலம்
2. வீடு
3. பங்கு சந்தை
4. நிரந்தர வைப்புத் திட்டம்.
5. வியாபாரம்
6. மறு சுழற்சி வைப்பு திட்டம்.
7. கந்து வட்டி
8. தேசிய பாண்டு பத்திரங்கள்
9. மனைவியிடம் கொடுக்கவும்.

சத்தியமா எல்லாத்துக்கும் அந்த கணக்கு டீச்சர்தான் காரணம்.

## மீம்ஸ்







## விடுகதை




| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |

## ஜோக்ஸ்



காவலர் 1: நமது அரசியார் அரண்மனை வாசலில் வந்து நிற்கிறாங்களே! ஏன்?
காவலர் 2: போர்களத்திலிருந்து நமது அரசர் ஓடி வரும் அந்த கண்கொள்ளா காட்சியை கண்டு ரசிக்கத்தான்.
நாஞ்சில் சு. நாகராஜன்

ஒருவர் : டி. வி. யில் பேட்டி கொடுக்கும் அந்த டாக்டரை போலி என்கிறாயே! ஏன்?




அடுத்தவர்: கொசு கடிச்சாலும் தொப்பிளை சுற்றி மூணு ஊசி போடச் சொல்றாரே!

ஜோக்ஸ் பகுதிக்கு
இளைஞன் : டாக்டர், உங்க கிளினிக்கை அண்ணாந்து பார்த்தா எனக்கு தலை சுத்துகிறது.
டாக்டர் : எதற்கு அண்ணாந்து பார்க்கிறீங்க?
இளைஞன் : உங்க கிளினிக்கின் மூன்றாவது மாடியில்தான் என் லவ்வர் வீடு இருக்குது டாக்டர்.




# யார் முட்டாள்??



சோழபுரம் எனும் ஊரில் ராமு என்பவர் வாழ்ந்து வந்தார். அவரை அவ்வூர் மக்கள் அனைவரும் முட்டாள் என்றே கூறுவார்கள். அந்த ஊர் மக்கள் அனைவருக்கும் ராமு ஒரு விளையாட்டு பொருளாகவே இருந்தான்.
அவனிடம் உடைகளை கொடுத்து அணிந்து வரச் சொன்னால், காலில் அணிய வேண்டிய துணியை மேல் உடம்பிலும், மேற்சட்டையை காலிலும் அணிந்து வருவான்.

யார் அவனை அந்த நிலையில் பார்த்தாலும் சிரித்து விடுவார்கள். அந்த ஊருக்கு விருந்தினர் யார் வந்தாலும் முதலில் ராமுவை வரவழைத்து, இவனைப் போன்ற முட்டாள் உங்கள் ஊரில் உண்டா? என்று கேட்பார்கள்.
ஒருநாள் குமார் என்பவர் வீட்டிற்கு வெளியூரிலிருந்து அவரது நண்பர் சக்தி பண்டிகைக்கு வந்திருந்தார். பின்னர் குமார் இந்த ஊரில் முட்டாள் ஒருவன் இருக்கிறான். அவனை வரவழைத்தால், நமக்கு நேரம் கடப்பதே தெரியாது என்றார். உடனே அவனை வரவழைக்க ஆள் அனுப்பினான்.
சிறிது நேரத்திற்குள் அந்த முட்டாள் ராமு அங்கு வந்து சேர்ந்தான். குமார் அவனிடம் தன் இரண்டு கைகளையும் நீட்டி, நன்றாகப் பார். ஒரு கையில் ஐந்து ரூபாய் நாணயம் உள்ளது. மற்றொன்றில், ஒரு ரூபாய் நாணயம் உள்ளது. உனக்கு எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள் என்றான். ராமு இரண்டு கைகளையும் மாறி மாறிப் பார்த்தான். 'ஆ! ஒரு ரூபாய் பெரிய காசு!" என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக்கொண்டான்.
பின்னர் குமார் அவரது நண்பர் சக்தியிடம் இவனைப் போன்ற முட்டாளை நீ பார்த்ததுண்டா? ஒரு ரூபாயை விட ஐந்து ரூபாய் எவ்வளவு மதிப்புள்ளது? விலை குறைவான மதிப்புடைய நாணயத்தை எடுத்துக்கொண்டு இவ்வளவு சந்தோஷமடைகிறான் என்றார்.
குமாரின் நண்பர் சக்திக்கும், ராமுவுடன் விளையாட வேண்டும் என்று ஆசை வந்தது. தன் இரண்டு கைகளையும் அவன் முன் நீட்டி, வலது கையில் வைர மோதிரம் உள்ளது. இடது கையில் வெறும் ஐம்பது பைசா உள்ளது. ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள் என்றார், சக்தி.

ராமு இரண்டு கைகளையும் மாறி மாறிப் பார்த்து சற்று நேரம் சிந்தித்தான். அவன் இறுதியாக ஐம்பது பைசாவைத்தான் எடுத்தான். குமார் தன் நண்பரிடம் நீங்கள் ராமுவிடம் பேசிக் கொண்டிருங்கள். எனக்கு வேலை இருக்கிறது என்று உள்ளே சென்றுவிட்டார்.

பிறகு சக்தி, ராமுவிடம் நீ ஏன் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறாய்? அதிக விலை மதிப்புடைய வைர மோதிரத்தை விட்டுவிட்டு வெறும் ஐம்பது பைசாவை எடுத்துக் கொண்டாயே! இனியாவது சிந்தித்து, அறிவுள்ளவனாக நடந்து கொள் என்று அறிவுரைக் கூறினார்.

ராமுவோ ஐயா! நான் மிகக் குறைந்த மதிப்புடைய நாணயங்களையே எடுக்கிறேன். எல்லோரும் என்னை முட்டாள் என்று நினைத்து என்னிடம் நாணயங்கள் உள்ள கைகளை நீட்டுகின்றனர். இதிலேயே எனக்கு ஒரு நாளில் நான்கு அல்லது ஐந்து ரூபாய் கிடைக்கிறது. நீங்கள் சொல்வது போல ஒரே ஒரு நாள் விலை குறைவான நாணயத்தை எடுக்காமல், அதிக மதிப்புடைய நாணயத்தை நான் எடுத்துக் கொண்டால், அதன் பிறகு யாரும் என்னிடம் கையை நீட்டி விளையாட மாட்டார்கள் என்றான், ராமு. இதைக்கேட்ட சக்தி வியந்து போனார்.

நீதி :
ஒருவரின் வெளித்தோற்றத்தைப் பார்த்து அவர்களை எளிதில் நிர்ணயிக்கக்கூடாது. யாரையும் முட்டாள் என்று எண்ணுவது தவறு.

# நேர்மை உயர்வு தரும்

மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த




சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊரு மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கவுரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும, பூபாலன் தான் பணப்பை கண்டுபிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

## காலணி!



காலணியே காலணியே
காலமெல்லாம்
உழைப்பாயே
கோலமுடன் நீயும்தான்
கூடவேதான் வருவாயே!

வெயிலுக்கும்
மழைக்குந்தான்
வீறுகொண்டு
உழைப்பாயே
நயன்மையோடு
எப்போதும்
நாளெல்லாம்
உழைப்பாயே!

பாதுகாப்பாய்
எங்களையே
பார்த்திடவே நடப்பாயே
ஓதிடுவோம்
உம்மைத்தான்
உள்ளன்பால்
வாழ்த்திடுவோம்!

முனைவர்
இராம. வேதநாயகம்.

## வெல்ல கட்டி...

செல்ல சின்ன வெல்ல
கட்டி.....

எல்லோருக்கும் பட்டு
கன்னு குட்டி.....


தூளியில் ஆடும் வெண்(
ணை )
நிலவு....
நீ எல்லோருக்கும்
பிள்ளை உறவு.....
யசோதைக்கு கிடைத்த
வரம்.....

ஒரு நாளேனும்...
நாங்களும்...
உணர்ந்திடணும்....
நந்தன் போலே உன்னை
கொஞ்சி...
நாங்களும் கூட..
மகிழ்ந்திடணும்.....

மாலோலா.. உனை
தாலாட்டி.......


மரகத பச்சை
பட்டுடுத்தி.....

மணி முத்தாரம் மயில்
தோகை
வைத்து....
உன் மின்னும் கண்ணில்



கரு..
மையெழுதி....
சீராட்டி......
பாராட்டிடவே......
சந்தர்ப்பம் தருவாய்....
சாரங்கா....

உன் முன்னாடும் கிளி
போலே.......
என்னையும் பார்ப்பாய்....
ஸ்ரீனிவாசன் என்னும்
......
பிரியரங்கா.........



குட்டி மானே சுட்டி மானே
எங்கப் போறே?

புல்லிருக்கு, குளமிருக்கு
மேயப் போறேன்...

குட்டி ஆமை சுட்டி ஆமை
எங்கப் போறே?

மான் குட்டி அண்ணாவுக்குத்
துணைக்குப் போறேன்...

குட்டி முயலே சுட்டி முயலே
எங்கப் போறே..

மான் குட்டி மாமாவோட
மேயப் போறேன்...

குட்டிக் குரங்கே சுட்டிக்
குரங்கே
எங்க போறே?


புலிவந்தா மான் தம்பிக்குச்
சொல்லப் போறேன்...

காடு ரொம்ப அழகு
காடு ரொம்ப அழகு

கேடு இல்லாம கெட்டத
செய்யாம இருந்தா
எல்லாம்
அழகு...

ஹரணி
தஞ்சாவூர்-

## நீலக்கடலே..!



நீலக்கடலே நீலக்கடலே
உப்புநீர் நிறைந்த நீலக்கடலே
அலைகள் வீசும் நீலகடலே
ஆழம் நிறைந்த நீலக்கடலே.

சின்ன மீனாம் நெத்திலி முதல்
பெரிய மீனாம் திமிங்கலம் வரை
அத்தனை மீனும் வாழுமே
அதை
சுவைத்து மகிழ வாருங்களேன்.

கடலில் எதனைப் போட்டாலும்
விரைவில் கரை ஒதுங்குமே
அடுத்தவர் பொருளுக்கு
ஆசைப்படாமல்
கடலைப் போல வாழ்வோமே.

ருசியான மீன் குழம்போடு
பொரித்த மீனையும்
சுவைப்போமே
அத்தனை சத்தும் மீனில் உண்டு
அதன் விலையோ மிகவும்
குறைவுதான்.

ஆற்று மீன் குளத்து மீன்
கிணற்று மீன் ஏரி மீன்
ஆத்தனை மீனிலும் சுவையானது
நீலக்கடலே நீ தரும் மீன்.

# பொதுஅறிவுப் பூங்கா

1----ஒரே ஆண்டில் இரண்டு முறை இமய மலை சிகரத்தை சென்றடைந்து சாதனை படைத்தவர் 'சந்தோஷ் யாதவ்' என்ற இந்தியப் பெண்மணி ஆவார்.

2----இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்ப தற்கான சட்டம் 1947 ஜூலை மாதம் பிரித்தானிய பாராளு மன்றத்தில், நிறைவேற்றப் பட்டது.

3----மத்திய கண் காணிப்பு ஆணையம் 1964ஆம் ஆண்டு துவங்கப் பட்டது.

4----அரிய வகை மான்இனங்களைக் கொண்ட, மிதக்கும் தேசியப் பூங்கா மணிப்பூர் மாநிலத்தில்



உள்ளது.

5-----நலிந்தோருக்கான பாது காப்பை உறுதி செய்யும் அரசியல் அமைப்பு சட்டத்தில், 48வது பிரிவில் உள்ளது.

6----துப்பாகிக் குண்டுகள் துளைக்காத கவச உடை தயாரிப்பில் பாளி எத்தலின் மூலப் பொருள் பயன் படுத்தப் படுகிறது.

7----டோக்கி யோவின் பழைய பெயர் 'ஈ டோ 'என்பதாகும்.



குடந்தை
பரிபூரணன்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## சிறப்பு அலங்காரத்தில் நம் கெங்கையம்மன்



ஆந்திரா பிரதேசம்திருப்பதி (தாத்தய்ய குண்டா) பகுதியில் எழுந்தருளியுள்ள கெங்கையம்மன் திருக்கோயிலில் சித்திரை மாதம் கெங்கையம்மன் திருவிழாவை முன்னிட்டு கெங்கையம்மனை தங்க கவசத்தினால் அலங்கரித்து, வேப்பிலை மாலைகளால்,விரலி மஞ்சள் மாலைகளால் அலங்கரித்து, தோரணங்களால் அலங்காரங்கள், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஒவ்வொரு அலங்காரமும் நடைபெறும்.

திருப்பதியில் உள்ள ஸ்ரீவெங்கடேச பெருமாளுக்கு சகோதரியாககெங்கையம்மனை வழிபடுகிறார்கள்.

கெங்கையம்மன் மிக சிறப்பான அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழா 2026-21.04.2026 காலை-சுவாமி,அம்பாள் தங்கசப்பரத்தில் திருவீதியுலா நாவார நின்னை நவிலாது சைவ நல்லாரியர்சொல் தேவார பாரணஞ் செய்யாது வீணரைச் சேர்ந்தொழுகித் தீவாய் நரகுக்கு இரையாகு வேனைத் தியங்கவிடேல் காவாய் புனல் வையைத் தென்கூடல் வாழும் கயற்கண்ணியே -கயற்கண்ணி மாலை

சொக்கே நின் தாளே துணை

## உலக பூமி தினம் - 2026




ஒருதாய் தன் குழந்தைகளுக்கு மட்டுமே அன்னை. ஆனால் பூமியோ நம் அனைவருக்கும் அன்னை! பாகுபாடின்றி அனைத்து உயிரினங்களையும் சுமப்பது இந்த தாய்மண் தான். அந்த அன்னையின் மடியில் வாழும் நம் அனைவருக்கும் 2026 ஏப்ரல் 22 ஒரு சிறப்பு நாள் உலக பூமி தினம்!

1970ஆம் ஆண்டு முதல் பல நாடுகள் ஏப்ரல் 22ஆம் தேதியை உலகப் புவி தினமாக கொண்டாடத் துவங்கின. 1990ஆம் ஆண்டிற்குள் 140 நாடுகளுக்கு மேல் இந்த நாளைச் சிறப்பிக்கத் துவங்கின. இன்று 175க்கும் மேற்பட்ட நாடுகள் உலக பூமி நாளை ஏப்ரல் 22 அன்று சிறப்பிக்கின்றன.

ஏறக்குறைய 454 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான பூமி, எந்த மனிதனாலும் திட்டமிடப்பட்டு உருவாக்கப்படவில்லை. மனித குலம் பிறப்பதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயிரினங்களை தன் மடியில் தாங்கிக்கொள்ள எழில் நிறைந்து பிறந்ததுதான் இந்த பூமி.

இவ்வாண்டு பூமி தினத்திற்கான தலைப்பாக, “பூமிக்கு எதிராக பிளாஸ்டிக்” என்பதுதேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. உலகில் பிளாஸ்டிக் பயன்பாட்டை 2040ஆம் ஆண்டிற்குள் 60 விழுக்காடு குறைக்கவேண்டும் என்ற இலக்கோடு இந்த தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் மாசுபாடு கடல் வாழ் உயிரினங்களை மட்டுமல்ல, மனித உடல் நலத்தையும் பாதிக்கிறது.

உலகில் 900 கோடி மனிதருக்கும், கணக்கிட முடியாத உயிரினங்களுக்கும் உணவு, உறைவிடத்தை அளித்து பேணிக் காத்து வரும் பூமியைப் பற்றியும், அதை பாதுகாப்பது தொடர்பாகவும் சிந்திப்பதற்கு நமக்கு ஒரு நாள் அவசியம் தேவை. உலக பூமி தினம் அந்த ஒரு நாள்.

இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும் நமது பூமியின் இயற்கை வளங்களை நம்முடைய சந்ததியினருக்கு அளிக்க இந்த நாளில் உறுதி ஏற்போம்.



**தொகுப்பு: பா.சீனிவாசன், துணைத் தலைவர், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல், வந்தவாசி கிளை.**




## வடுவூர் கோதண்டராமசுவாமி கோயிலில் கருட சேவை



அட்சய திருதியை வடுவூர் கோதண்டராமசுவாமி கோயிலில் கருட சேவை

# ராசிபுரம் தொகுதி மக்கள் மனங்களை வென்ற மதிவேந்தன்!

**இராசிபுரம், ஏப்.22:**



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) தொகுதியில் தி.மு.க. சார்பில் மீண்டும் போட்டியிடும் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் மாவட்டத்தின் மூத்த தி.மு.க. தலைவர் டாக்டர் மாயவனின் மகனாக அரசியலில் அறிமுகமானவர். கடந்த 2021ஆம் ஆண்டு தனது முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்ற அவர், தற்போது மீண்டும் மக்களின் ஆதரவை நாடுகிறார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் சுற்றுலாத்துறை, வனத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளில் பணியாற்றிய அனுபவம் கொண்ட மதிவேந்தன், தனது தொகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

ராசிபுரம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த கூட்டுக்குடிநீர் திட்டம் ரூ.854 கோடியில் நிறைவேற்றப்பட்டு, 600க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு பயன் அளித்து வருகிறது. போதமலை பழங்குடியினருக்காக ரூ.140 கோடியில் சாலை வசதி அமைக்கப்பட்டு, 31 கி.மீ. தூரத்திற்கு புதிய சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், நாரைக்கிணறு பகுதியில் 50 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 800 விவசாயிகளின் பட்டா பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. ஆண்டகளூர் கேட் பகுதியில் ரூ.42 கோடியில் டைடல் பார்க், நெசவாளர்களுக்கான பட்டுக்கூடு ஏல மையம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

மின்சார வசதி மேம்படுத்தப்பட்டு 11 கிராமங்களில் 14 ஆயிரம் இணைப்புகளுக்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. ராசிபுரத்தில் ரூ.60 கோடியில் புதிய அரசு மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்பு நிறுத்தப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் சாலைப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டதால், பொதுமக்களின் நம்பிக்கையை டாக்டர் மா.மதிவேந்தன் பெற்றுள்ளார்.

தற்போது தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள அவர், “ராசிபுரம் நகரை விரிவுபடுத்தும் நோக்கில் அணைப்பாளையத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பழைய பேருந்து நிலையமும் வழக்கம்போல் செயல்படும். மேலும், மீண்டும் வாய்ப்பு கிடைத்தால் ராசிபுரத்தை முன்னோடி தொகுதியாக மாற்றுவேன்,” என தெரிவித்தார்.

## தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் திருவண்ணாமலை மாவட்டம் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்

**திருவண்ணாமலை, ஏப்.22:**



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம். திருவண்ணாமலை மாவட்டம் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் 21.04.2026 அன்று காலை 11 மணி அளவில் திருவண்ணாமலை கிராம நிருவாக அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்ட தலைவர் ப கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட துணை தலைவர் அ. ரகுபதி வரவேற்புரையாற்றனார். மாநில துணை தலைவர் குரு. சந்திரசேகரன் அவர்கள் மறைவிற்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் மாநில செயலாளர் சி. சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

மாவட்ட செயலாளர் எஸ் பச்சையப்பன் கடந்தகால நடவடிக்கைகள் குறித்து பேசினார். மாநில செயற்குழு முடிவுகளை மாவட்ட தலைவர் ப. கிருஷ்ணமூர்த்தி விளக்கி பேசினார். அகில இந்திய மாநில அரசு ஓய்வூதியர் சம்மேளத்தின் முடிவுபடி கோரிக்கை மனுவை பாரத பிரதமருக்கு இமெயில் மூலமும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டது.

வட்ட பேரவையை ஜூன் மாதத்திற்குள் நடத்தி முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது

மாவட்ட பொருளாளர் அ. ஆனந்தன் நன்றி கூறினார். மாவட்ட துணை தலைவர் எம். தங்கராஜ், மாவட்ட இணை செயலாளர்கள் ஆர் ராஜகோபால், எம். மாணிக்கம், வி. சரவணன் மற்றும் திருவண்ணாமலை வட்டகிளை நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் உட்பட 20 தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தோழமையுடன் எஸ். பச்சையப்பன் மாவட்ட செயலாளர்.



வானமாமலை ஸ்ரீ தெய்வநாயகப் பெருமாள் சித்திரை ப்ரஹ்மோத்சவம் முதல் திருநாள் கருட சேவை புறப்பாடு.



புஷ்ப பல்லாக்கு மந்தைவெளி மாரிசெட்டித்தெரு





ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 9ம் திருநாள் காலை புறப்பாடு திவ்ய சேவை.

## தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மதுரை மாவட்டம் சார்பில் அகில இந்திய கோரிக்கை நாள்



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மதுரை மாவட்டம் சார்பில் அகில இந்திய கோரிக்கை நாள் 21.4.26 இன்று கடைப்பிடிக்கப்பட்டது.கோரிக்கை மனு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இன்று அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநில தலைவர் என் ஜெயச்சந்திரன் மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் மாவட்ட துணைத் தலைவர் ஆதாரமிளகி மாவட்ட பொருளாளர் கி.நாராயணன் மாவட்ட செயலாளர் அ.பால்முருகன் மாவட்ட இணைச் செயலாளர்கள் சி.இராஜேந்திரன் இ.பானு உள்ளிட்ட மாவட்ட வட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டனர். அகில இந்திய கோரிக்கைகள் குறித்து மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் விளக்கவுரையாற்றினார். மாநில தலைவர் என் ஜெயச்சந்திரன் சிறப்புரையாற்றினார்.

## பத்து நாட்கள் நம்பெருமாள் பூச்சாற்று உற்சவம்!


கோடை வெப்பத்திற்காக நம்பெருமாளுக்கான உபச்சாரம், இந்த பத்து நாள் பூச்சாற்று உற்சவம் (கோடை உற்சவம்)!

இந்த பூச்சாற்று உற்சவத்தில் மட்டுமே பக்தர்கள் சமர்ப்பிக்கும் பூச்சரத்தையும், சாத்தாதவர்கள் மல்லிகை பூவினால் நெய்த "புஷ்ப துப்பட்டியும்" மாலை வேளையில் சாற்றிக்கொண்டு ஸேவை சாதிப்பார்! இதில் முதல் ஐந்து நாட்கள் வெளிக்கோடை என்றும், அடுத்த ஐந்து நாட்கள் உள்கோடை என்ற பெயருடன் நம்பெருமாள் கண்டருள்கிறார்! உள்கோடை நாட்களில், தினமும் இரவு வீணை ஏகாந்தத்துடன் நம்பெருமாள் மூலஸ்தானம் ஏள்ளுவார்! "கருவுடை மேகங்கள் கண்டால் உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்* உருவுடையாய்! உலகேழும் உண்டாக வந்து பிறந்தாய்!* திருவுடையாள் மணவாளா திருவரங்கத்தே கிடந்தாய்!* மருவிமணம் கமழ்கின்ற மல்லிகைப் பூச்சூட்டவாராய்!" -பெரியாழ்வார் திருமொழி

## சித்திரை பிரம்மோற்சவம் சிறப்பு வழிபாடு




**திருவண்ணாமலை, ஏப்.22:**


திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு மாலை 5.00 முதல் 6.30 மணிக்கு D.நிஷா (அலுமினி ஆப் கலாசேத்திரா பௌண்டஷன், சென்னை) மற்றும் கீதா ஸ்ரீதர் குழுவினரின் வீணை இசைக்கச்சேரி பின்னர் விநாயகர், சுவாமி, அம்மன் மாடவீதி உலாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வேத துர்க்கை ராகு கால பூஜை சிறப்பு வழிபாடு



கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் செவ்வாய்க்கிழமை ராகுகால பூஜையை முன்னிட்டு அருள்மிகு வேத துர்க்கை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ராகுகால பூஜையில் கலந்து கொண்டு வேத துர்கையை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வண்ண மலர் மாலைகளால் நம் வாசவி அம்மன்



**பொள்ளாச்சி ஏப்.22:**

ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி மங்கள வாரம் நன்னாளில் நம் வாசவி அம்மன் வண்ண மலர் மாலைகளால் தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காட்பாடி செங்குட்டை பகுதியில் அதிமுக வேட்பாளர் ராமு வாக்கு சேகரிப்பு!

**வேலூர், ஏப். 22:**



காட்பாடி நகர் வடக்கு மண்டல் வார்டு எண்.4 செங்குட்டை சக்தி கேந்திரம் பூத் எண்.219,220,221 ஆகிய பூத்துகளில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிடும் அஇஅதிமுக வேட்பாளர் வி. ராமு இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் அஇஅதிமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் பா.ஜ.க மண்டல் பி.யுவராஜ் தலைமையில், சக்தி கேந்திர பொறுப்பாளர் பா.கமலவிநாயகம், மாவட்ட செயலாளர் ஊடகபிரிவு எம். தட்சிணாமூர்த்தி, கிளைத் தலைவர்கள் ஜி.பாலகனேசன், ஏ. ஜி. பிரகாஷ் குமார், BLA_2 ஆர்.லட்சுமணன், பி.ஜெயகுமார் மற்றும் மண்டல், மாவட்ட அணி, பிரிவு நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சி. எம். ஜான் தெரு, பஜனை கோயில் தெரு பகுதியில் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றது குறிப்பிடத் தக்கது.

## வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான படிவங்கள் அனுப்புவதற்கான முன்னேற்பாடு பணிகள்




**திருவண்ணாமலை, ஏப். 22:**

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான படிவங்கள் மற்றும் பொருட்கள் அனுப்புவதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: சித்தர்கள் உலவும் சஞ்சீவி மலை - பர்வதமலை!



திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள போளூர் அருகே அமைந்துள்ள பர்வதமலை ஆன்மீகம் மற்றும் மர்மங்கள் நிறைந்த ஒரு இடமாக கருதப்படுகிறது. இந்த மலையைப் பற்றிய சில சுவாரசியமான தகவல்கள் மற்றும் நம்பிக்கைகள் இதோ:

மல்லிகார்ஜுனர் கோவில்: இந்த மலையின் உச்சியில் கி.பி. 3-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் மல்லிகார்ஜுனர் (சிவன்) கோவில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,560 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவனை மக்கள் 'மௌன குரு' என்றும் அழைக்கிறார்கள்.

மலை ஏறுவதில் உள்ள சவால்: பர்வத மலையில் உள்ள 'கடப்பாரை படி' என்று அழைக்கப்படும் செங்குத்தான பாதை மிகவும் பிரபலம். 90 டிகிரி கோணத்தில் இருக்கும் இந்தப் பாதையில் ஏறுவது ஒரு சிலிர்ப்பான அனுபவமாகும்.

சித்தர்களின் பூமி: இன்றும் பல சித்தர்கள் சூட்சும வடிவில் (அரூபமாக) இந்த மலையில் வாழ்ந்து வருவதாக நம்பப்படுகிறது. மலையில் தங்கி தியானம் செய்பவர் களுக்குப் பலவிதமான நறுமணங்கள் வீசுவதாகவும், சில விசித்திரமான ஒலிகள் கேட்பதாகவும் அனுபவ ரீதியான கதைகள் கூறப்படுகின்றன.

புராணப் பின்னணி: இராமாயண காலத்தில், அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிச் சென்றபோது, அதிலிருந்து ஒரு சிறிய பகுதி கீழே விழுந்த இடமே பர்வத மலை என்று ஒரு ஐதீகம் உண்டு. இதனால்தான் இந்த மலையில் அரிய வகை மூலிகைகள் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

பௌர்ணமி கிரிவலம்: பௌர்ணமி நாட்களில் இங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்த மலையில் வீசும் காற்று உடலுக்கும் மனதுக்கும் மிகுந்த புத்துணர்வைத் தரக்கூடியது.

வீர்ணா மலை: பர்வத மலை ஏறும் பாதையில் அமைந்துள்ள ஒரு முக்கியமான பகுதி வீர்ணா மலை. இது பர்வத மலையின் ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. 'வீரம்' மிகுந்தவர்கள் ஏறும் மலை என்பதால் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்தப் பகுதியில் தான் இயற்கையான மூலிகைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இங்கு வீசும் காற்றில் மருத்துவக் குணங்கள் அதிகம் இருப்பதால், இதில் சுவாசிப்பது நுரையீரலுக்கு நல்லது என்று நம்பப்படுகிறது. சிவபெருமான் கைலாயத்திலிருந்து பூமிக்கு வந்தபோது, தனது முதல் அடியை இந்த மலையில்தான் வைத்தார் என்பது ஐதீகம். அதன் அடையாளமாக இங்கு ஒரு பாறைப்பகுதியில் 'அண்ணாமலையார் பாதம்' செதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரமங்கள்: மௌன குரு விதோபாநாத ஆசிரமம் கடலாடி பகுதியில் அமைந்துள்ளது. மலையேறும் பக்தர்கள் தங்குவதற்கும், தியானம் செய்வதற்கும் ஏற்ற இடமாகும்.

மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள பச்சையம்மன் கோவில் மற்றும் ஆசிரமம் மிகவும் பிரபலம். மலையேற்றத்தைத் தொடங்கும் முன் பக்தர்கள் இங்கு வந்து வழிபடுவது வழக்கம். இங்கு சப்த முனிகளின் பிரம்மாண்ட சிலைகள் உள்ளன.

பர்வத மலைப் பயணம் என்பது ஒரு மனிதனின் மன வலிமையையும், இறை நம்பிக்கையையும் சோதிக்கும் உன்னதப் பயணம். செங்குத்தான 'கடப்பாரை படிகளில்' ஏறி உச்சியில் உள்ள மௌன குருவை தரிசிக்கும்போது, ஏறிய களைப்பு நீங்கி ஒரு பேரானந்தம் கிடைக்கிறது. வீர்ணா மலையின் மூலிக்கைக் காற்றும், அங்குள்ள ஆசிரமங்களின் அமைதியான சூழலும் நம் மன அழுத்தத்தைப் போக்கிப் புத்துணர்வை அளிக்கின்றன. இயற்கையைப் போற்றி, அதன் மர்மங்களை மதிக்கும் எவருக்கும் பர்வத மலை ஒரு வாழ்நாள் அனுபவமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## வேலைவாய்ப்பு கார்னர்

### எல்.ஐ.சி., நிறுவனத்தில் ஜூனியர் அசிஸ்டென்ட் வாய்ப்பு

எல். ஐ.சி., ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'ஜூனியர் அசிஸ்டென்ட்' பிரிவில் கர்நாடகா 29, மஹாராஷ்டிரா 25, தெலுங்கானா 24, தமிழகம் 21, ம.பி., 18 உட்பட மொத்தம் 180 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 21-30 (1.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு


தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், தஞ்சாவூர்

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 800. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 30.4.2026 விவரங்களுக்கு: lichousing.com

### அழைக்கிறது மின்சார நிறுவனம்



பொதுத்துறையைசேர்ந்த 'பவர்கிட்' மின்சார நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எலக்ட்ரிக்கல், சிவில், சர்வே, எச்.ஆர்., நிதி உள்ளிட்ட பிரிவுகளில் மொத்தம் 660 இடங்கள் உள்ளன. இதில் தமிழகம் அடங்கிய தென் மண்டலத்தில் 81 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.பி.ஏ., / சி.ஏ.,

வயது: 18-27 (11.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு

தேர்வு மையம்: சென்னை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 11.5.2026 விவரங்களுக்கு: powergrid.in

## மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஏப்.26 வரை மழைக்கு வாய்ப்பு!



**சென்னை, ஏப். 22:**

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் ஏப்.26 வரை பலத்த காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மையம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தெலங்கானா முதல் குமரிக்கடல் வரை ராயலசீமா மற்றும் உள் தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்தத் தாழ்வுப்பாதை நிலவுவதால், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஏப்.26 வரை இடி, மின்னல் மற்றும் 40 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

13 இடங்களில் வெயில் சதம்: உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்பநிலை வெள்ளிக்கிழமை (ஏப்.24) வரை ஒருசில இடங்களில் சற்று அதிகமாக இருக்கக்கூடும். திங்கள்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 104.72 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது.

## தேர்தல் விடுமுறை: ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பலமடங்கு உயர்வு!

**சென்னை, ஏப்.22:**



தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23-ஆம் தேதி (வியாழக்கிழமை) நடைபெறவுள்ளது. சென்னை போன்ற பெருநகரங்களில் தங்கியிருக்கும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்க தங்கள் சொந்த ஊருக்குச் செல்வார்கள். அவர்களின் வசதிக்காக செவ்வாய்க்கிழமை (ஏப். 21) முதல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் 5,574 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்ய முடியாதவர்கள் அடுத்தபடியாக தனியார் ஆம்னி பேருந்துகளை தேர்வு செய்வார்கள். இதைப் பயன்படுத்தி பல ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி, நாகர்கோவில் உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்குச் செல்லும் ஆம்னி பேருந்துகள் கட்டணத்தை பலமடங்கு உயர்த்தியுள்ளன.

செவ்வாய், புதன் (ஏப். 21, 22) இரண்டு நாள்களும் சென்னையில் இருந்து திருநெல்வேலிக்கு செல்ல படுக்கை வசதி கொண்ட சாதாரண பேருந்தில் வழக்கமான நாள்களில் ரூ.1,400 என இருந்த கட்டணம், ரூ.3,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அதுபோல, தூத்துக்குடிக்கு செல்ல ரூ.1,700 வரை இருந்த கட்டணம் தற்போது ரூ.3,200 வரையும், மதுரைக்குச் செல்ல ரூ.1,100-ஆக இருந்த கட்டணம் தற்போது ரூ.2,200 முதல் ரூ.3,500 வரையும், திருச்சிக்கு ரூ.1500-ஆக இருந்த கட்டணம் தற்போது, ரூ.2,000 முதல் ரூ.2,600 வரையும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுபோல, சென்னையில் இருந்து அனைத்து இடங்களுக்கும் ரூ.500 முதல் ரூ.2,000 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. தீபாவளி, பொங்கல் பண்டிகை நாள்களை போன்று தேர்தல் விடுமுறையிலும் கட்டணம் பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர்.

## மருந்து பயன்பாட்டுக்கான மெத்தனால்: இனி இணையவழியில் உரிமம் பெறலாம்!

**சென்னை, ஏப்.22:**




மருந்து பயன்பாட்டுக்கான மெத்தனால் உரிமம் பெறும் நடைமுறையை தமிழக அரசு எளிமைப்படுத்தியுள்ளது. அதன்படி, இனி இணையவழியில் அதற்கான அனுமதியைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு தமிழ்நாடு மருந்து உற்பத்தியாளா் சங்கத்தினா் வரவேற்பு தெரிவித்துள்ளனா்.

மருந்து உற்பத்தித் துறையில் மெத்தனால் ஒரு முக்கிய கரைப்பான் சோ்மமாகவும், மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, ஸ்டேடின் போன்ற கொழுப்புச் சத்தைக் குறைக்கும் மருந்துகள், ஸ்ட்ரெப்டோமைசின் போன்ற ஆன்ட்டிபயாடிக் மருந்துகள் தயாரிக்க மெத்தனால் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், தரப் பரிசோதனையிலும் கரைப்பானாக அது பயன்படுத்தப்படுகிறது. மருந்தியல் கல்லூரிகளில் உள்ள ஆய்வகங்களுக்கும் மெத்தனால் இன்றியமையாதது.

மெத்தனால் வாங்குவதற்கான உரிமம் பெற தமிழகத்தில் கடுமையான நடைமுறைகளும், விதிகளும் பின்பற்றப்படுவதாக மருந்து உற்பத்தியாளா்கள் நீண்டகாலமாகக் கூறி வந்தனா். பெரிய தொழிலகங்கள் மட்டுமன்றி, சிறு மருந்து உற்பத்தி நிறுவனங்களும், ஆய்வகங்களும் குறைந்த அளவிலான மெத்தனால் பெறுவதற்குக்கூட சிக்கல் நிலவுவதாகக் கூறின.

இந்நிலையில், தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட 'இ-கலால்' என்ற இணையதளம் மூலம் மெத்தனால் உரிமம் பெறும் நடைமுறைக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆண்டுக்கு 500 லிட்டருக்கும் குறைவாகத் தேவைப்படும் விண்ணப்பதாரா்களுக்கும் இந்த எளிமைப்படுத்தப்பட்ட முறை பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்தப் புதிய நடைமுறைக்கு மாநில மருந்து உற்பத்தியாளா் சங்கம் வரவேற்பும், நன்றியும் தெரிவித்துள்ளது.

## தனியார் பள்ளிகள் தரம் உயர்வு, அங்கீகாரம்: டிஇஓ-க்களுக்கு கல்வித் துறை அறிவுறுத்தல்

**சென்னை, ஏப்.22:**

தனியார் மழலையர், தொடக்கப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் மற்றும் மூன்றாண்டுகள் தொடர் அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு முக்கிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து தனியார் பள்ளிகள் இயக்குநரகம் சார்பில் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தனியார் பள்ளிகள்) அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகள் 2023-இல் மேற்கொள்ளப்பட்டுள்ள விதி திருத்தங்களைப் பின்பற்றி 13.1.2023-க்கு முன் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பட்ட பள்ளிகள் (6 முதல் 8 வகுப்புகள்) தரம் உயர்த்துதல் தொடர்பான கருத்துருவை பரிசீலனை செய்து, பரிந்துரையுடன் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று விதி திருத்தங்களைப் பின்பற்றி மூன்றாண்டுகளுக்கு மேல் அங்கீகாரச் சான்று கோரும் பள்ளிகள் தொடர்பான கருத்துருவை பரிசீலனையுடன் அனுப்புமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: பலியானோர் குடும்பத்துக்கு நிவாரணம்!

**விருதுநகர், ஏப்.22:**

விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என ஆட்சியர் சுகபுத்ரா இன்று (ஏப். 20) அறிவித்துள்ளார்.

விருதுநகர் அருகே உள்ள கோவிந்தநல்லூரைச் சேர்ந்தவர் முத்துமாணிக்கம் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (ஏப். 19) பிற்பகல் வெடி விபத்து ஏற்பட்டது.

பட்டாசு மூலப்பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறையில் மருந்து உராய்வு காரணமாக வெடி விபத்து நேர்ந்துள்ளது. இந்த விபத்தில் அருகருகே இருந்த 4 அறைகளும் இடிந்து தரைமட்டமாகின.

அறைக்குள் குறுகிய இடத்தில் அமர்ந்து தொழிலாளர்கள் பணிசெய்துகொண்டிருந்தபோது நேர்ந்த விபத்தில், 25 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மீண்டும் பட்டாசுகள் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது. இதில், மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த காவலர்கள், தீயணைப்பு வீரர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில், பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ. 5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என ஆட்சியர் சுகபுத்ரா அறிவித்துள்ளார். தேர்தல் ஆணையத்தின் அனுமதிபெற்று அரசு சார்பிலும் உரிய நிவாரணம் வழங்கப்படும் என, சம்பவ இடத்தை ஆய்வு செய்த பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# சித்திரை திருவிழா: மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாண ஆன்லைன் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பு

**மதுரை, ஏப்.22:**

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலின் சித்திரை பெரு விழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் வருகிற 28-ந் தேதி நடக்கிறது. திருக்கல்யாணத்தை நேரில் கண்டு தரிசிக்க விரும்பும் பக்தர்களின் வசதிக்காக ரூ.200 மற்றும் ரூ.500-க்கான கட்டண சீட்டுகளை பெறுவதற்கு முன்பதிவு செய்வதற்கான ஆன்லைன் மற்றும் நேரடி முன்பதிவு நேற்று முன்தினம் தொடங்கியது.




ஆன்லைன்மூலமாகமுன்பதிவு செய்யும் பக்தர்கள் HTTPS://HRCE.TN.GOV.IN மற்றும் கோவில் இணையதளமான HTTPS://MADURAIMEENAKSHI.HRCE.TN.GOV.IN-னம் தொடங்கி 22-ம் தேதி இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது. பின்னர் திருக்கல்யாண டிக்கெட் குலுக்கல் முறையில் தேர்வு செய்தவர்களுக்கு அலைபேசி, இமெயிலில் 23-ந் தேதி குறுந்தகவல் தெரிவிக்கப்படும்.

டிக்கெட் கிடைத்ததற்கான குறுந்தகவல் பெற்றவர்கள் 24-ந் தேதி முதல் 27-ந் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரிநிவாஸ் தங்கும் விடுதியில் தங்களுக்கு வந்த தகவல்களை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டண சீட்டை பெறலாம். ரூ.500 பதிவில் ஒருவர் 2 கட்டண சீட்டுகளும், ரூ.200 பதிவில் ஒருவர் 3 கட்டண சீட்டுகள் மட்டுமே பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

ஒரே நபர் ரூ.500, ரூ.200 இரண்டையும் பதிவு செய்ய இயலாது. ஒரு பதிவிற்கு ஒரு கைபேசி எண் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நேரடியாக விண்ணப்பிக்கும் பக்தர்களின் வசதிக்காக கோவிலுக்கு சொந்தமான எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரிநிவாஸ் தங்கும் விடுதியில் டிக்கெட் முன்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அங்கு கோவில் பணியாளர்கள் 2 கணினிகள் மூலம் முன்பதிவு செய்து கொடுக்கிறார்கள்.

கட்டண சீட்டு முன்பதிவு செய்ய விரும்பும் பக்தர்கள் ஆதார் அட்டை, போட்டோ, கைபேசி எண், மின் அஞ்சல் முகவரியை வழங்கி முன்பதிவு செய்து வருகின்றனர். கடந்த 2 நாட்களாக நேரடி முன்பதிவு செய்யும் இடத்தில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. அவர்களை கோவில் பணியாளர்கள் வரிசையாக நிற்க வைத்து பதிவு செய்து வருகின்றனர். அதன்படி ரூ.500 மற்றும் ரூ.200 டிக்கெட்டுகளை சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆன்லைன் மற்றும் நேரில் சென்று பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## விளையாட்டு செய்திகள்

### ஸ்குவாஷில் சுராஜ் குமார் சாம்பியன்

**சென்னை, ஏப்.22:**

ஹெச்சிஎல் ஸ்குவாஷ் பிஎஸ்ஏ சாலஞ்சர் டூர் போட்டி சென்னையில் உள்ள இந்தியா ஸ்குவாஷ் அகாடமியில் நடைபெற்று வந்தது. இதில் நேற்று இறுதி சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுராஜ் குமார் சந்த், தென் கொரியாவின் ஜியோங்மின் ரியூவை எதிர்த்து விளையாடினார்.

இதில் சுராஜ் குமார் சந்த் 11-5, 11-9, 11-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி சுற்றில் போட்டித் தரவரிசையில் 8-வது இடத்தில் உள்ள எகிப்தின் ரவுகையா 12-10, 11-7, 9-11, 11-7 என்ற செட் கணக்கில் மலேசியாவின் ஹர்லுன் டானை வீழ்த்தி பட்டம் வென்றார்.

### இன்டர் காசியை வீழ்த்தியது பஞ்சாப் எஃப்சி!

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் பஞ்சாப் எஃப்சி 3-0 கோல் கணக்கில் இன்டர் காசியை திங்கள்கிழமை வீழ்த்தியது.

அந்த அணிக்காக சமிர் ஜெலிகோவிக் (37’), எஃபியாங் சுங்குசி (51’), பெடெ அமராச்சி (72’) ஆகியோர் கோல் அடித்தனர். இந்த வெற்றியை அடுத்து பஞ்சாப் 8 ஆட்டங்களில் 4-ஆவது வெற்றியுடன் 14 புள்ளிகளோடு 7-ஆவது இடத்தில் இருக்கிறது. இன்டர் காசி 9 ஆட்டங்களில் 4-ஆவது தோல்வியுடன் 11 புள்ளிகளோடு 8-ஆவது இடத்தில் இருக்கிறது.

### ஹெச்சிஎல் பிஎஸ்ஏ ஸ்குவாஷ் போட்டி: சூரஜ் குமார், ரௌகையா சாம்பியன்!

ஹெச்சிஎல் ஸ்குவாஷ் பிஎஸ்ஏ இந்தியன் டூர், சென்னை சுற்றில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் சூரஜ் சந்த், மகளிர் பிரிவில் எகிப்தின் ரௌகையா ஒத்மான் பட்டம் வென்றனர்.

ஏழு நாடுகளைச் சேர்ந்த 48 வீரர்கள் பங்குபெற்ற இப்போட்டி இந்திய ஸ்குவாஷ் அகாதெமியில் கடந்த 16-ஆம் தேதி தொடங்கியது. இந்திய ஸ்குவாஷ் ராக்கெட்ஸ் கூட்டமைப்பு, இந்திய விளையாட்டு ஆணையம் நடத்திய இப்போட்டியில் சாம்பியன் பட்டம் வெல்வோருக்கு தலா ரூ.5.56 லட்சம் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

பிஎஸ்ஏ தரவரிசைப் புள்ளிகளைப் பெறுவதற்காக விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் மோதினர். இதில் ஆடவர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சூரஜ் குமார் சந்த் சிறப்பாக ஆடி தென்கொரியாவின் ஜியோங்மின் ரியூவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.

பெண்கள் பிரிவில், எகிப்தின் ரௌகையா ஒத்மான் சிறப்பாக ஆடிமலேசியாவின் ஹார்லீன் டானை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.

பரிசளிப்பு நிகழ்வில் இந்திய ஸ்குவாஷ் கூட்டமைப்பு செயலாளர் சைரஸ் போன்சா, மாவட்ட விளையாட்டு அலுவலர் அந்தோனி ஜோயல் பிரபு, எச்சிஎல் குழுமம் அமித் பலாதி பங்கேற்றனர்.

# வாக்களிக்க சொந்த ஊர் செல்வோர் கவனிக்க... சிறப்பு ரயில் இயக்கம்!

**சென்னை, ஏப்.22:**

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள பேரவைத் தேர்தலையொட்டி வாக்களிக்க சென்னையிலிருந்து தென்மாவட்டங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத்தேர்தலுக்கு இன்னும்இரண்டு நாள்களே இருக்கும் நிலையில், தேர்லுக்கான இறுதிக்கட்ட பிரசாரம் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஏப்.23 ஆம் தேதி பேரவை தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவுள்ள நிலையில், நேற்று மாலை பிரசாரம் நிறைவடைகிறது.



இந்த நிலையில், தேர்தல் வாக்குப்பதிவுக்காக சொந்த ஊர் செல்வோருக்கு இடையூறு இன்றி பயணிக்க சென்னை எழும்பூரிலிருந்து நாகர்கோவிலுக்கு சிறப்பு விரைவு ரயில் சேவையை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இந்த சிறப்பு ரயில் (வண்டி எண்: 06072) நாளை (ஏப்.22) பிற்பகல் 1.25 மணிக்கு சென்னை எழும்பூரிலிருந்து புறப்பட்டு, ஏப். 23 ஆம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு நாகர்கோவிலைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளுக்கு வசதியான பயணத்தை வழங்கும் நோக்கில் இந்த சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு ரயில் இயக்கம் - முன்பதிவு (ஏப்.21) பிற்பகல் 2.15 மணிக்கு தொடங்குகிறது.

இந்த ரயில் தாம்பரம், விழுப்புரம், திருச்சி, மதுரை மற்றும் விருதுநகர் உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்கள் வழியாகச் சென்று நாகர்கோயிலைச் சென்றடைகிறது. தேர்தல் நேரங்களில் கடும் போக்குவரத்து நெரிசல் மற்றும் இடையூறு களைக் குறைக்க ஐஆர்சி டிசி இணையதளம்மூலமாகவோ அல்லது ரயில்வே கவுன்டர்களிலோ முன்கூட்டியே பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யுமாறும் தெற்கு ரயில்வே அறிவுறுத்தியுள்ளது.

# மேற்கு வங்கத்தில் ஓட்டுப் போடாதவரின் பெயர் நீக்கப்படும் என்ற அச்சம்: ஊர் திரும்ப ரயில் நிலையங்களில் குவியும் தொழிலாளர்கள்

**புதுடெல்லி, ஏப்.22:**

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின்போது (எஸ்ஐஆர்) சுமார் 90 லட்சம் பெயர்களைத் தேர்தல் ஆணையம் நீக்கியது.



இவற்றில், கடந்த பிப்ரவரி 28 அன்று வெளியான இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து நிரந்தரமாக சுமார் 63 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 27 லட்சம் பெயர்கள், சரிபார்ப்பு நடைமுறைகள் நிறைவடைந்த பிறகு நீக்கப்பட்டன.

இந்நிலையில், மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் வாக்களிக்காதவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது.

இதனால், அம்மாநிலத்தின் புலம்பெயர் தொழிலாளர்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்புவது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, நாட்டின் பல ரயில் நிலையங்களில் மேற்கு வங்க மாநிலங்களுக்கு செல்லும் ரயில்களில் கூட்டம் அலைமோதுகிறது.

இவர்கள் தம் சொந்த ஊரின் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்.23-க்கு முன்னதாக வீடு திரும்ப முடிவு செய்துள்ளனர். இது, ஒரு மிகப்பெரிய அளவிலான புலம்பெயர்வு அலையாக தற்போது நிகழ்ந்து வருகிறது.

இந்த புலம் பெயர்வின் முக்கிய மையப் புள்ளியாக மால்டா மற்றும் முர்ஷிதாபாத் மாவட்டம் உருவெடுத்துள்ளது. இவர்களால், வழக்கத்திற்கு மாறாகப் பெருமளவு கூட்டம், சென்னை, மும்பை, கேரளாவின் பல்வேறு பகுதிகளில் நிலவுகிறது. இவர்கள் தம் தொலைதூர குடியிருப்புகளுக்காக 36 முதல் 72 மணி நேரம் வரை பயணம் செய்கின்றனர்.

இந்த ரயில்களில் செல்லும் பயணிகளின் கூற்றுப்படி, அவர்களது அவசரப் பயணத்திற்குப் பின்னால் ஒரு பொதுவான கவலையே காரணமாக அமைந்துள்ளது.

அதில், வாக்குப்பதிவு செய்யத் தவறிவிட்டால் அம்மாநில வாக்காளர் பட்டியலில் இருந்து தங்கள் பெயர்கள் நீக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் அவர்களிடம் எழுந்துள்ளது.

# சட்டப்பேரவை தேர்தல்: சென்னையில் விஜய் சாலைவலம்!

**சென்னை, ஏப்.22:**

சென்னையில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் செவ்வாய்க்கிழமை சாலைவலம் மேற்கொண்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று மாலை 6 மணியுடன்நிறைவடையவுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறுதிக் கட்டப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.




வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்டச் சாலை, பொன்னேரி, கொளத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளில் திங்கள்கிழமை சாலை வலம் மேற்கொண்டு விஜய் வாக்குச் சேகரித்தார்.

இந்த நிலையில், இன்று மாலை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நேற்று மாலை 3 மணியளவில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் விஜய் பேசவுள்ளார்.

இதற்காகமத்தியகைலாஷ் பகுதியில் இருந்து நந்தனம் வரை பிரசார வாகனத்தில் நின்றபடி சாலைவலமாக விஜய் சென்றுகொண்டுள்ளார்.

முன்னதாக நேற்று காலை மக்களுக்காக விஜய் வெளியிட்ட கடிதத்தில், லஞ்சக் கொள்ளைப் பணமழை பொழிந்தாலும் விசில் புரட்சிக்குத் தயாராகுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

## க்ரைம் கார்னர்

### மராட்டியம்: பருப்பு பெயரில் ரூ.139 கோடி மதிப்பிலான பொருட்கள் கடத்தல்

**புனே, ஏப்.22:**

மராட்டியத்தின் மும்பை நகரில் உள்ள நவ சேவா துறைமுகத்திற்கு பல்வேறு நாடுகளில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படும். இதில், சட்டவிரோத வகையில், பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன என ரகசிய தகவல் வெளியானது.

இதனை தொடர்ந்து, துறைமுகத்திற்கு வந்த 132 கன்டெய்னர்களை வருவாய் நுண்ணறிவு துறை இயக்குநரகத்தின் அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, தான்சானியா, சூடான் மற்றும் கனடா நாடுகளில் இருந்து துவரம் பருப்பு என்ற பெயரில் தண்ணீர் பழம் விதைகள் மற்றும் பிற பொருட்கள் கடத்தி வரப்பட்டு உள்ளன என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அவற்றில் ரூ.139 கோடி மதிப்பிலான மொத்தம் 3,029 டன் பொருட்கள் இருந்துள்ளன. அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். இந்த பொருட்களால் உள்ளூர் விவசாயிகளின் வருவாய் பாதிக்கப்படும். அவர்களை பாதுகாக்கின்ற நோக்கில் மத்திய அரசு இவற்றை இறக்குமதி செய்ய கட்டுப்பாடுகளை விதித்து உள்ளது. இந்த சூழலில், இவற்றை கடத்திய நபரை அதிகாரிகள் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### மத்திய பிரதேச சிறையில் விசாரணைக் கைதி திடீர் தற்கொலை

**ஜபல்பூர், ஏப்.22:**

மத்தியபிரதேசமாநிலத்தின் ஜபல்பூர் நகரைச்சேர்ந்தவர் குட்டு என்கிற ராஜா விஸ்வகர்மா வயது (60). கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட இவர், 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார். விசாரணைக்குப் பிறகு, ஜபல்பூரில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

விஸ்வகர்மா கடந்த இரண்டு ஆண்டுகளாக நீரிழிவு மற்றும் கல்லீரல் நோயால் அவதிப்பட்டு வந்துள்ளார். இதற்காக சிறை கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் உள்ள மருத்துவ வார்டில் சிகிச்சை பெற்று வந்தார்,

இந்த நிலையில் இன்று காலை 8 மணிக்கு இரண்டாவது தளத்தில் இருந்து தரைத் தளத்திற்கு சென்று காலை உணவை சாப்பிட்டார். அங்கு இருந்து கிளம்பி மருத்துவ வார்டுக்கு திரும்பிய அவர், கழிவறைக்கு சென்றுள்ளார். அங்கு தனது துண்டால் தூக்கு போட்டுக் கொண்டார்.

இதுபற்றி தகவல் கிடைத்த உடன் சிறை மருத்துவர்கள் அங்கு விரைந்தனர். ஆனால் அதற்குள் விஸ்வகர்மா இறந்துவிட்டார். அவரது மரணம் குறித்து குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப பிரச்சினை காரணமாக அவர் தற்கொலை செய்திருக்கலாம் எனவும், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு உறவினர்களிடம் தொலைபேசியில் பேசியதாகவும் சிறை சூப்பிரெண்டு அகிலேஷ் தோமர் தெரிவித்தார். இந்த தற்கொலை சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

### டிரோன் இறக்குமதி- லஞ்ச வழக்கு: கார்ப்பரேட் குழுவின் மூத்த நிர்வாகி கைது

**புதுடெல்லி, ஏப்.22:**

புதுடெல்லியில் டிரோன் இறக்குமதி தொடர்பான லஞ்ச வழக்கில், ஒரு பெரிய கார்ப்பரேட் குழுவின் மூத்த நிர்வாகியை மத்திய புலனாய்வு அமைப்பு கைது செய்துள்ளது. இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது:

பாரத் மாதூர் என்ற நபர், ஒரு நிறுவனத்தில் மூத்த துணை தலைவர் பதவியில் பணியாற்றி வந்தார். இவர் மீது டிரோன்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி பெற, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்ததாக குற்றச்சாட்டு உள்ளது. இந்த லஞ்சம், ஒரு ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்காக டிரோன் இறக்குமதியை எளிதாக்கும் நோக்கில் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## வணிகச் செய்திகள்

### அட்சய திருதியை தங்கம் விற்பனை 30% சரிவு: நகை வியாபாரிகள் தகவல்

இந்த ஆண்டு அட்சய திருதியை தங்கம் விற்பனை 30 சதவீதம் வரை சரிந்துள்ளதாக நகை வியாபாரிகள் தெரிவித்தனர்.

அட்சய திருதியை நாளில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் வாங்குவது பொதுமக்களின் வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டு அட்சய திருதியை இரண்டு நாட்கள் கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் 35 ஆயிரம் நகைக்கடைகள் காலை 8 மணிக்கே திறக்கப்பட்டன. சென்னையில் தியாகராய நகர், புரசைவாக்கம், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள நகைக் கடைகளில் தங்கம் வாங்க பொதுமக்கள் குவிந்தனர்.

அட்சய திருதியை விற்பனை நேற்றுடன் முடிவடைந்த நிலையில், தங்கம் விற்பனை கடந்த ஆண்டை விட 30 சதவீதம் சரிந்துள்ளதாக நகை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, நகை வியாபாரிகள் சங்க நிர்வாகி ஒருவர் கூறும்போது, “இந்தியாவில் அட்சய திருதியை விற்பனை கடந்த ஆண்டு ரூ.20 ஆயிரம் கோடியாக இருந்தது.

தமிழகத்தில் ரூ.14 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் கோடியாக இருந்தது. இந்த ஆண்டு தங்கம் விற்பனை 30 சதவீதம் சரிவை சந்தித்துள்ளது. தமிழகத்தில் சுமார் ரூ.10 ஆயிரம் கோடி விற்பனை நடைபெற்றுள்ளது. இதற்கு முக்கியக் காரணம், தங்கத்தின் விலை சுமார் 60 சதவீதம் உயர்ந்ததுதான். ஆனாலும், மொத்த விற்பனை மதிப்பு 20 முதல் 25 சதவீதம் வரை அதிகரித்துள்ளது” என்றார்.

# தென்கொரிய அதிபர் மியுங் - பிரதமர் மோடி சந்திப்பு



புதுடெல்லி, ஏப்.22:

இந்தியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-க்குள் 5,000 கோடி டாலராக (சுமார் ரூ. 4.6 லட்சம் கோடி) இரட்டிப்பாக்க இரு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. தென்கொரிய அதிபர் லீ ஜே மியுங், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தென் கொரிய அதிபர் ஒருவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். பிரதமர் மோடியுடன் அவர் நேற்று நடத்திய ஆலோசனைகளுக்குப் பிறகு, பொருளாதார உறவுகளில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக இரு நாட்டு தலைவர்களும் அறிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அதிபர் லீ ஜே மியுங் கூறும்போது, "இரு நாடுகளின் பொதுவான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார ஒத்துழைப்புக்கான புதிய கட்டமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளோம். இதற்காக முதன் முறையாக அமைச்சர் அளவிலான பொருளாதார ஒத்துழைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அணுமின் நிலையங்கள் மற்றும் பசுமை எரிசக்தி துறைகளில் முதலீடுகள் பலப்படுத்தப்படும்" என்றார். பிரதமர் மோடி பேசுகையில், "அதிபர் லீ-யின் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தற்போது 2,700 கோடி டாலராக உள்ள இருதரப்பு வர்த்தகத்தை அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.4.6 லட்சம் கோடியாக உயர்த்த முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய கலாச்சாரத் தொடர்புகளைக் கொண்ட நாம், அடுத்த பத்தாண்டு கால வெற்றிக்கான அடித்தளத்தை இன்று அமைத்துள்ளோம்" என்றார்.

## இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்கள் விடுதலை



புதுடெல்லி, ஏப்.22:

இந்தியா-இலங்கை இடையிலான உறவில் மீனவர்கள் விவகாரம் பெரும் சிக்கலான ஒன்றாக தொடர்ந்து நீடித்து வருகிறது. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்யும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

இலங்கைக் கடற்படை வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்த ஆண்டில் இதுவரை இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக மீன்பிடித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் 128 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே சமயம், இந்திய கடற்படையும் இலங்கை மீனவர்களை தொடர்ந்து கைது செய்து வருவதாக அந்நாட்டின் கடற்படை குற்றம் சாட்டி வருகிறது. இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தகவல் தெரிவித்துள்ளது. அவர்கள் இன்றே தங்கள் தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடியின் காரப்பொரி வீடியோ 100 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை

ஜர்கிராம், ஏப்.22:

மேற்கு வங்காள அரசின் பதவிக்காலம் மே 7-ந்தேதியுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, மேற்கு வங்காள சட்டசபை தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனையடுத்து, மேற்கு வங்காளத்தின் ஜர்கிராம் நகரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது, திடீரென வாகனத்தில் இருந்து இறங்கிய பிரதமர் மோடி, சாலையோரம் இருந்த கடைக்கு சென்று, ஆர்வத்துடன் காரப்பொரி கேட்டு வாங்கி சாப்பிட்டார். அந்த கடையில் மிக்சர், பொரி, உள்ளிட்ட பல்வேறு பண்டங்களும் தூய்மையான முறையில், வரிசையாக பாட்டிலில், அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அவரை பார்த்த ஆச்சரியத்தில் குழந்தைகளும், பெண்களும் கடையின் முன் குவிந்தனர்.

இதுபற்றிய வீடியோ ஒன்று இன்ஸ்டாகிராமில் வைரலானது. அந்த வீடியோ 100 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது. பேஸ்புக்கில் 90 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது. அதனுடன் நில்லாமல், காரப்பொரியை பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வமும் மக்களிடையே அதிகரித்து உள்ளது.

## மோசமான வானிலை: விமானம் வானில் வட்டமடித்ததால் பயணிகள் பீதி

ஹூப்பள்ளி, ஏப்.22:

பிளை 91 ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ஏடிஆர் ரக விமானம் ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு புறப்பட்டது. மாலை 4.30 மணிக்கு கர்நாடகாவின் ஹூப்பள்ளியை நெருங்கியதும் மோசமான வானிலை காரணமாக தரையிறங்க முடியவில்லை.

வானிலை சீரடைவதற்காக அந்த விமானம் கர்நாடகாவின் முங்காட், தேவனகிரி மற்றும் சிவமோகா ஆகிய பகுதிகளில் வட்டமடித்துக் கொண்டிருந்தது. விமானம் தரையிறங்காமல் வெகு நேரம் சுற்றியதால் பயணிகள் பீதியடைந்தனர். அப்போது பைலட் "மோசமான வானிலையால் வானில் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கிறோம். வானிலை சீரடைந்ததும் தரையிறங்கலாம். இதுகுறித்த தகவலை அவ்வப்போது தெரிவிப்போம். பொறுமையாக இருந்து, விமான ஊழியர்கள் சொல்வதை பின்பற்றவும்" என தெரிவித்தார்.

அதற்குள் பதற்றமடைந்த பயணிகள், "பெங்களூருக்கு செல்லும் படி பைலட்டிடம் கூறுங்கள், அல்லது பெல்ஹாம் போகலாம்" என ஒரு பயணி கூறியுள்ளார். "ஆமாம். பெல்ஹாம் அருகில்தான் உள்ளது" என மற்றொரு பயணி கூறினார். ஒன்றரை மணி நேரத்தில் தரையிறங்க வேண்டிய விமானம், தொடர்ந்து 4 மணி நேரத்துக்கு மேல் பறந்ததால் பயணிகள் இடையே அச்சம் அதிகரித்தது. ஒரு பெண் பயணி கைகளை கூப்பி பிரார்த்தனை செய்தபடி அழ ஆரம்பித்தார். அவரது உடல் நடுங்கத் தொடங்கியது.

ஓ.. மை காட் என பல பயணிகள் கூறும் சத்தம் விமானத்துக்குள் எடுக்கப்பட்ட வீடியோவில் பதிவானது. அழ வேண்டாம், ஒன்றும் ஆகாது, பொறுத்திருங்கள் என மற்றொருவர் கூறும் சத்தமும் கேட்டது. ஹூப்பள்ளியில் தரையிறங்க விமானம் பல முறை முயன்றும், இறங்க முடியவில்லை. அதனால் அந்த விமானம் கடைசியாக பெங்களூரு திருப்பிவிடப்பட்டு, கெம்பேகவுடா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் 7.30 மணிக்கு தரையிறங்கியது. அதன்பின்பே பயணிகள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

## ஈரான் போரால் எரிசக்தி விநியோகம் பாதிப்பு: பயோ காஸ், சூரிய மின்சக்தி திட்டங்களில் இந்திய ராணுவம் தீவிரம்



புதுடெல்லி, ஏப்.22:

மேற்கு ஆசிய போரால் எரிசக்தி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பயோ காஸ் மற்றும் சூரிய மின்சக்தி திட்டங்களில் இந்திய ராணுவம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுகுறித்து மூத்த ராணுவ அதிகாரிகள் கூறியதாவது: சமையலுக்கு தேவையான மாற்று எரிசக்தி ஆதாரங்களை நோக்கி ராணுவம் விரைவாக நகர்ந்து வருகிறது. பயோ காஸ் அடுப்புகளை கொள்முதல் செய்வதற்கான உத்தரவுகள் ஏற்கெனவே தயார் நிலையில் உள்ளன. ராணுவம் முழுவதிலும் தினமும் சுமார் 1,56,000 கிலோ சமையல் எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. இதில் சுமார் 20%, அதாவது நாளொன்றுக்கு சுமார் 30,000 கிலோ சமையல் எரிவாயுவை பயோ காஸ் மூலம் மட்டுமே சேமிக்க முடியும்.

தற்போது ஒவ்வொரு வீரருக்கும் சமையலுக்காக நாள் ஒன்றுக்கு 125- 135 கிராம் எரிவாயு ஒதுக்கப்படுகிறது. இது தவிர, நிர்வாக, செயல்பாடு மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காக 2 லட்சத்துக்கும் அதிகமான பல்வேறு வகை வாகனங்களை ராணுவம் இயக்குகிறது. இதனால் தினமும் பெருமளவு எரிபொருள் நுகர்வு ஏற்படுகிறது. இந்த சுமையைக் குறைக்க, நிர்வாக ரீதியான ராணுவப் படைகளின் பயணத்தை 400 கி.மீ தூரமாக கட்டுப்படுத்தலாமா என்றும், அதற்கு மேற்பட்ட தூரத்துக்கு ரயில் போக்குவரத்தை அதிகபட்சமாக பயன்படுத்தலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வாகனங்களைப் பகிர்ந்துகொள்வது, உணவுப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் படை வீரர்களை ஏற்றிச் செல்லுதல் போன்ற பணிகளை ஒருங்கிணைப்பதும் பரிசீலனையில் உள்ளது. சாத்தியமான இடங்களில் சிஎன்ஜி அல்லது வாடகை மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும். இவ்வாறு ராணுவ அதிகாரிகள் கூறினர்.

சூரிய மற்றும் பயோ காஸ் ஆலைகளுக்காக சுமார் 46,000 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலத்தைப் பயன்படுத்த ஆயுதப் படைகள் திட்டமிட்டுள்ளதாக கடந்த ஆண்டு டிசம்பரில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடகத்தில் மதுபானங்களின் விலை மீண்டும் உயர்வு?

பெங்களூர், ஏப்.22:

கர்நாடகத்தில் காங்கிரஸ் அரசு அமைந்த பின்பு மதுபானங்களின் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது. 5 உத்தரவாத திட்டங்களுக்கு நிதி தேவைப்படுவதால் மதுபானங்களின் விலையை அரசு உயர்த்தியது. இதற்கு மதுப்பிரியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், 2026-27-ம் ஆண்டு பட்ஜெட்டை தாக்கல் செய்த முதல்-மந்திரி சித்தராமையா, நாட்டிலேயே முதல் முறையாக கர்நாடகத்தில் ஆல்கஹாலின் அளவை பொறுத்து (ஆல்கஹால் இன் பேவரேஜ்) மதுபானங்கள் மீது வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். பட்ஜெட்டில் அறிவித்தபடி ஆல்கஹாலின் அளவுக்கு ஏற்றார் போன்று வரி விதிக்கும் முறையை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணையும் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இதனால் மதுபானங்களின் விலை 20 சதவீதம் வரை அதிகரிக்ககூடும் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. குறிப்பாக குறைவான விலை கொண்ட மதுபானங்களின் விலை உயர்த்தப்பட இருப்பதாக தெரிகிறது. 180 மில்லி அளவுள்ள மதுபானங்களின் விலை ரூ.80-ல் இருந்து ரூ.95-க்கு விற்கப்பட உள்ளது. இதுதவிர ரூ.5 முதல் ரூ.10 வரை பிற மதுபானங்களின் விலை உயரலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. நாட்டிலேயே மதுபானங்களில் உள்ள 'ஆல்கஹால்' அளவை பொறுத்து வரி விதிக்கப்படுவது கர்நாடகத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது..

## பிரதமர் மோடி துவக்கி வைக்க உள்ள சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கிளம்பிய புகை

ஜெய்ப்பூர், ஏப்.22:

ராஜஸ்தானின் பலூத்ரா நகரில் பச்பத்ரா பகுதியில் இந்தியாவின் முதல் பசுமைவெளி ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு ஆலை ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. ராஜஸ்தான் அரசுடன் இணைந்து, இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் இதனை செயல்படுத்த உள்ளது.

பிரதமர் மோடி இதனை இன்று துவக்கி வைக்க இருந்த நிலையில், திடீரென இதில் இருந்து புகை கிளம்பியது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அந்த கரும்புகை வான் வரை பரவியது. எனினும், அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு, அதனை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இறக்குமதியை சார்ந்திராமல் உள்நாட்டு உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஆலை அமைக்கப்பட்டு உள்ளது. இது, இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழலில், இந்த சுத்திகரிப்பு ஆலையை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிப்பதற்கான திட்டம் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.

## மோசமான வானிலையிலும் கண்காணிக்க புதிய இலகுரக விமானம் வாங்க மத்திய அரசு திட்டம்


புது டெல்லி, ஏப்.22:

கடுமையான சுற்றுச்சூழல் நிலைமைகளிலும், கடல் மட்டத்திலிருந்து 16,400 அடி உயரம் வரையிலும் செயல்படக்கூடிய, இந்திய விமானப்படையின் உயரடுக்கு சிறப்புப் படைப்பிரிவிற்கான சிறிய ஆளில்லா இலகுரக விமானம் ஒன்றை கொள்முதல் செய்யும் செயல்முறையை பாதுகாப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது.

கருட் சிறப்புப்படைகளுக்காக 'மைக்ரோ யுஏவி' அமைப்பைக் கொள்முதல் செய்வது குறித்து அமைச்சகம் சமீபத்தில் தகவல் கோரிக்கை ஒன்றை வெளியிட்டது. தற்போதுள்ள மைக்ரோ அமைப்பைக் காட்டிலும், அதிக உயரப்பகுதிகளில் அதிக நிலைத்தன்மையுடன், மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் இலக்கு கண்டறியும் அம்சத்துடன், சிறப்புப் படைகளுக்கு உகந்த, சிறிய, ராணுவத் தரத்திலான, இலகுரக, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய அமைப்பு தேவைப்படுகிறது.

இந்த விமானம், மோசமான சுற்றுச்சூழலிலும், கடல் மட்டத்தில் இருந்து 16,400 அடி உயரம் வரையிலும் இயங்கக்கூடியது. அதிக உயரத்திலும், மோசமான வானிலையிலும் கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் நோக்கத்தில் இந்த விமானங்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது, குறைந்தபட்சம் 15 கி.மீ. தூரத்தில், 60 நிமிடங்களுக்கு குறையாமல் பறந்து கண்காணிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சத்தீஸ்கரில் விமான விபத்தில் 2 பைலட் உயிரிழப்பு



ஜாஷ்பூர், ஏப்.22:

சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் தனியார் விமானம் ஒன்று மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இரு பைலட்டுகளும் உயிரிழந்தனர். தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஒற்றை இன்ஜின் சிறிய ரக விமானம் ஒன்று சத்தீஸ்கரின் ஜாஸ்பூர் மாவட்டத்தில் நேற்று பறந்து சென்றது. சுமார் 30 அடி உயரத்தில் தாழ்வாக பறந்து சென்ற விமானம், மரத்தில் மோதி கீழே விழுந்ததாக விமான விபத்தை பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் 2 பைலட்டுகளும் உயிரிழந்தனர். விமான விபத்து நடைபெற்ற இடத்துக்கு மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

# இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு நிலைநிறுத்தப்படும் 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 போர் விமானங்கள்: புதிய ஒப்பந்தம் அமலுக்கு வந்தது



புதுடெல்லி, ஏப்.22:

இந்தியாவில் 3,000 ரஷிய ராணுவ வீரர்கள், 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 போர் விமானங்கள் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படுவது தொடர்பான ஒப்பந்தம் அமலுக்கு வந்துள்ளது.

இந்தியா- ரஷியா இடையே பரஸ்பர தளவாட பரிமாற்ற ஒப்பந்தம் (ரெலோஸ்) ரஷிய தலைநகர் மாஸ்கோவில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் தற்போது அமலுக்கு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவில் 5 ஆண்டு காலம் வரை 3,000 ரஷிய ராணுவ வீரர்கள் தங்கியிருப்பர். 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 ரஷிய போர் விமானங்கள் நிலைநிறுத்தப்படும். இது அமைதி காலம், யுத்த காலத்துக்கும் பொருந்தும்.

இதேபோல், ரஷியாவிலும் இந்திய ராணுவ வீரர்கள் 3,000 பேர் தங்கியிருப்பர். 5 இந்திய போர்க்கப்பல்களும், 10 இந்திய போர் விமானங்களும் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படும். 2 நாடுகளும் தத்தமது ராணுவத் தளங்கள், கடற்படைத் தளங்கள், விமான தளங்களை பிற நாடுகள் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவும், ரஷியாவும் விரும்பினால், இந்த 5 ஆண்டு காலத்தை மேலும் 5 ஆண்டு காலம் நீட்டித்துக் கொள்ளவும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இந்தியா-ரஷியா இடையே ராணுவ ரீதியான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதும், தளவாட பரிமாற்றத்தை அதிகரிப்பதுமே ஆகும். இந்த ஒப்பந்தம், உலகளாவிய அளவில் தற்போது அதிக கவனம் ஈர்த்துவரும் பிரதேசமான ஆர்டிக் பிரதேசத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்த உதவும். அதேபோல் ரஷியாவுக்கு அதன் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், உதிரிபாகங்கள் பெறுதல், பழுதை சரிசெய்தல் போன்ற பணிகளுக்கு உதவும். மேலும், இந்திய பெருங்கடல் பிரதேசத்தில் வரும் அதன் போர்க் கப்பல்கள், வர்த்தக கப்பல்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறவும் உதவும்.

ஏற்கெனவே இதேபோன்ற ஒப்பந்தத்தை (லெமோவா) அமெரிக்காவுடனும் இந்தியா செய்துள்ளது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவில் அமெரிக்க வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகைசெய்யப்படவில்லை. அதேபோல் அமெரிக்காவிலும் இந்திய வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகைசெய்யப்படவில்லை.

இந்தியாவின் நீண்டகால நெருங்கிய நட்பு நாடாகவும், சர்வதேச அளவில் நம்பகமான கூட்டாளி நாடாகவும் ரஷியா திகழ்வதால் அந்நாட்டுக்கு மட்டும் வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்களை நிறுத்த அனுமதி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகள் ஆபாசப்படங்கள் விவகாரம்: எலான் மஸ்க் ஆஜராக பிரான்ஸ் கோர்ட்டு சம்மன்

**பாரீஸ், ஏப்.22:**

எக்ஸ் வலைத்தளம் மற்றும் அதன் செயற்கை நுண்ணறிவு கருவியான குரோக் மூலம் குழந்தைகள் ஆபாசப் படங்கள் விநியோகிக்கப்பட்டது, பெண்களின் ஆபாச டீப்பேக் படங்கள் உருவாக்கப்பட்டது மற்றும் தவறான தகவல்கள் பரப்பப்பட்டது குறித்து பிரான்சில் உள்ள பாரீஸ் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை நடைபெற்று வருகிறது.

சிறுவர் ஆபாசப் படங்களை வைத்திருப்பது மற்றும் பரப்புவதில் எக்ஸ் தளம் உடந்தையாக இருந்தது என ஆதாரத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை தொடர்ந்து எக்ஸ் தளத்தின் தலைவர் எலான் மஸ்க் மற்றும் முன்னாள் தலைவர் லிண்டா யாக்காரினோ ஆகியோருக்கு பிரான்ஸ் கோர்ட்டு நேரில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பியுள்ளது.

இந்த விசாரணை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், இது கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது என்றும் எலான் மஸ்க் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரானிடமிருந்து யுரேனியத்தை மீட்பது கடினமானது: டொனால்ட் டிரம்ப்



**வாஷிங்டன், ஏப்.22:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது ட்ருத்சோசியல் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "ஆபரேஷன் மிட்நைட் ஹேமர் என்பது ஈரானில் உள்ள அணுத்துகள் தளங்களை முற்றிலுமாக அழித்தொழிக்க மேற்கொண்ட ஒரு நடவடிக்கை. அதை அங்கிருந்து தோண்டி எடுப்பது ஒரு நீண்ட மற்றும் கடினமான வேலையாக இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

யுரேனியம் செறிவூட்டல் என்பது அணு ஆயுதங்கள் மற்றும் அணுமின் நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை உருவாக்கும் முறை. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானிலுள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை 'அணுத்துகள்' என்றே குறிப்பிடுகிறார். அணுகுண்டு தயாரிப்பதற்காக ஈரான் இந்த யுரேனியத்தைப் பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. செறிவூட்டப்பட்ட யுரேனியம் பதுக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கா வைத்த குற்றச்சாட்டுகளை ஈரான் வெளியுறவு அமைச்சகம் மறுத்தபோதிலும், அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரானிடம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவுக்கு மாற்றுவோம் என்று தெரிவித்து வருகிறார். ஈரானின் அணுசக்தித் திட்டங்களைக் காரணம் காட்டியே அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது பிப்ரவரி 28 முதல் போர் தாக்குதல்களைத் தொடங்கினர்.

இஸ்ரேலால் கடந்தாண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்ட போர் 12 நாள்களில் முடிவடைந்த நிலையில், ஈரான் அணு ஆயுதத்தைப் பெறும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியது. மேலும், தற்போது நடைபெற்ற போரில் யுரேனியம் செறிவூட்டல் ஆலை உள்பட ஈரானின் மூன்று அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

## ஆப்பிள் சிஇஓ பதவியில் இருந்து விலகும் டிம் குக்

**வாஷிங்டன், ஏப்.22:**

உலகின் முன்னணி மின்னணு சாதனங்கள், மென்பொருள் தயாரிப்பு நிறுவனம் ஆப்பிள். ஆப்பிள் நிறுவனத்தின் செல்போன்கள், டிவி, ஸ்மார்ட் வாட்ஸ் போன்ற சாதனங்களுக்கு உலக அளவில் பெரும் பயனாளர்கள் உள்ளனர்.

இதனிடையே, ஆப்பிள் நிறுவனத்தின் சிஇஓ-வாக (தலைமை செயல் அதிகாரி) டிம் குக் செயல்பட்டு வருகிறார். அவர் 2011ம் ஆண்டு முதல் ஆப்பிள் நிறுவனத்தின் சிஇஓ-வாக செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், ஆப்பிள் சிஇஓ பதவியில் இருந்து டிம் குக் விலக உள்ளார். அவர் ஆகஸ்ட் மாதத்திற்குள் சிஇஓ பதவியை ராஜினாமா செய்ய உள்ளார். இதையடுத்து செப்டம்பர் 1ம் தேதி முதல் ஆப்பிள் நிறுவனத்தின் புதிய சிஇஓ-வாக ஜான் டென்னஸ் பதவியேக உள்ளார்.

# ஈரானுடன் அமெரிக்கா 2-ம் கட்ட பேச்சு: ஜே.டி.வான்ஸ் பாகிஸ்தான் பயணிப்பதாக தகவல்

**வாஷிங்டன், ஏப்.22:**



ஈரான் உடன் இரண்டாம் கட்ட அமைதிப்பேச்சுவார்த்தை மேற்கொள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் பாகிஸ்தான் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தின. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே 14 நாட்கள் இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இந்த இடைக்கால போர் நிறுத்தம் நாளை (ஏப்.22) நிறைவடைய உள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான முதல் கட்ட பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில் ஈரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள ஜே.டி.வான்ஸ், பாகிஸ்தான் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இருப்பினும் இது குறித்த அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை.

ஈரான் உடனான பேச்சுவார்த்தை விரைவில் பாகிஸ்தானில் நடைபெறும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப், (ஏப்.20) தெரிவித்திருந்தார்.

அதற்காக போரை விரைந்து முடிவுக்கு கொண்டு வரும் நகர்வுகளை தங்கள் தரப்பு முன்னெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இரு தரப்புக்கும் இடையில் உடன்பாடு ஏற்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என ஈரான் தரப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் 7.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: 80 செ.மீ. உயரத்துக்கு சுனாமி தாக்கியது

**டோக்கியோ, ஏப்.22:**





வட ஜப்பானில் நேற்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அங்குள்ள ஒரு துறைமுகத்தில் 80 சென்டிமீட்டர் உயரத்துக்கு சுனாமி அலை தாக்கியது.

உலகின் நில அதிர்வு அதிகம் ஏற்படும் நாடுகளில் ஒன்று ஜப்பான். சுமார் 12.5 கோடி மக்கள் வாழும் இந்தத் தீவுக் கூட்டத்தில், ஆண்டுதோறும் சுமார் 1,500 நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், ஜப்பானின் வடக்கு பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 7.4 அலகுகளாக பதிவானது. இதையடுத்து, கடற்கரையோரப் பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதுகுறித்து ஜப்பான் வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், "நிலநடுக்கம் காரணமாக சுனாமி அலைகள் தாக்கி, சேதம் ஏற்படக்கூடும். எனவே, பொது மக்கள் கடலோரப் பகுதிகள் மற்றும் ஆற்றங்கரைப் பகுதிகளில் இருந்து உடனடியாக வெளியேறி, உயரமான இடங்கள் அல்லது பாதுகாப்பான கட்டிடங்களுக்குச் செல்ல வேண்டும். சுனாமி அலைகள் மீண்டும் மீண்டும் வரக்கூடும் என்பதால், எச்சரிக்கை திரும்பப் பெறப்படும் வரை பாதுகாப்பான இடங்களை விட்டு வெளியேற வேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், இவாட் மாகாணத்தில் உள்ள குஜி துறைமுகத்தில் நேற்று மாலை 5:34 மணிக்கு 80 சென்டிமீட்டர் (31 அங்குலம்) உயரத்துக்கு சுனாமி அலை தாக்கியதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக மாலை 5:32 மணிக்கு 70 சென்டிமீட்டர் உயரமுள்ள அலை தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. துறைமுகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் உடனடி சேதங்கள் எதுவும் தென்படவில்லை.

## 10 ஆண்டுகளுக்குப் பிறகு திறக்கப்பட்ட ஈராக் - சிரியா எல்லை: ஹார்முஸ் முடக்கத்திற்கு மாற்றுப் பாதை..?

**பாக்தாத், ஏப்.22:**



அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி மாதம் 28-ந்தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தியது. ஒரு மாதத்திற்கு மேலாக இந்த போர் நீடித்தது. கடந்த 7-ந்தேதி இரண்டு வார இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனிடையே, ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதன் விளைவாக, உலகம் முழுவதும், குறிப்பாக ஆசியாவில், கடுமையான எரிசக்தி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் போர் காரணமாக 10 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த ஈராக் மற்றும் சிரியா இடையேயான எல்லை கடக்கும் பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதன்படி சிரிய உள்நாட்டுப் போரினால் 2011-ல் மூடப்பட்ட ராபியா (ஈராக்) மற்றும் யருபியா (சிரியா) எல்லைப் பகுதிகள், இரு நாட்டு அதிகாரிகளின் முன்னிலையில் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.

இது ஈராக் மற்றும் சிரியா நாடுகளுக்கு இடையே கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த முக்கிய எல்லை கடப்புப் பகுதியாகும். போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முடங்கியுள்ள நிலையில், அதற்கு மாற்றாக சிரியா வழியாக எண்ணெய் ஏற்றுமதி செய்ய, வர்த்தகம் மற்றும் எண்ணெய் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தனது தேசிய வரவுசெலவு திட்டத்தில் ஏறக்குறைய 90 சதவீதம் எண்ணெய் வருவாயை சார்ந்துள்ள ஈராக்கிற்கு, இந்த முன்னேற்றம் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது.

மீண்டும் இந்த எல்லை திறக்கப்பட்டதைக் குறிக்கும் விழாவின் போது, சுமூகமான போக்குவரத்து மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காக, ஒருங்கிணைப்பில் சாத்தியமான மேம்பாடுகள் குறித்து ஈராக் மற்றும் சிரிய அதிகாரிகள் விவாதித்தனர். இந்த எல்லை திறப்பு, அண்டை நாடுகளுக்கு இடையே பொருளாதார வளர்ச்சியையும்ஒத்துழைப்பையும் வளர்க்கக்கூடிய ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகப் பாராட்டப்படுகிறது.

## அமெரிக்காவில் குடும்பத் தகராறில் 8 குழந்தைகளை சுட்டுக்கொன்ற தந்தை

**வாஷிங்டன், ஏப்.22:**

அமெரிக்காவின் லூசியாணா மாகாணத்தில் குடும்பத் தகராறு காரணமாக தனது சொந்த குழந்தைகள் உள்பட 8 பேரை தந்தையே சுட்டுக்கொன்ற சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்குப் பிறகு காரைக் கடத்தித் தப்ப முயன்ற தந்தை ஷமார் எல்கின்ஸை, போலீஸார் விரட்டிச் சென்றபோது ஏற்பட்ட மோதலில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த 2 பெண்கள் தற்போது மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் நடத்திய ஷமார் எல்கின்ஸ் மற்றும் காயமடைந்த ஒரு பெண் ஆகியோரே கொல்லப்பட்ட 7 குழந்தைகளின் பெற்றோர் என்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.


## தெற்கு லெபனானில் சிலுவை அவமதிப்பு: இஸ்ரேல் வீரருக்கு வலுக்கும் கண்டனம்

தெற்கு லெபனானில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வாழும் டெபெல் கிராமத்தில், இஸ்ரேல் ராணுவ வீரர் ஒருவர் இயேசுவின் சிலுவையைச் சேதப்படுத்திய புகைப்படம் வெளியாகி, கண்டனம் வலுத்துள்ளது.

இச்சம்பவத்தை அமெரிக்கா, கிறிஸ்தவமத அமைப்புகள் கடுமையாகக் கண்டித்துள்ளன. 'இச்செயல் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான அவமதிப்பு மட்டுமல்லாமல், அடிப்படை மனித விழுமியங்கள் மீதான மரியாதையின் வீழ்ச்சியைக் காட்டுகிறது' என கத்தோலிக்க திருச்சபை சாடியுள்ளது. இதையடுத்து, இச்சம்பவத்துக்கு வருத்தம் கூறிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'இது யூதர்களின் பண்புக்கு எதிரானது; அந்த வீரர் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்' என உறுதியளித்தார்.

இதுகுறித்து விசாரிக்கப்படுவதாகவும், சேதப்படுத்தப்பட்ட சிலுவையை மீண்டும் சீரமைக்க உதவுவோம் எனவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது.

## பல்கேரியா நாடாளுமன்றத் தேர்தல்: ரஷிய ஆதரவு முன்னாள் அதிபர் வெற்றி



தென்கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், அந்நாட்டு முன்னாள் அதிபரும், ரஷிய ஆதரவாளருமான ரூமென் ராதேவ் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் மற்றும் 'நேட்டோ' கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடான பல்கேரியாவில், ஆட்சியில் இருந்த மத்திய-வலதுசாரி அரசுக்கு எதிராக, கடந்த ஆண்டு டிசம்பரில் மிகப்பெரிய ஊழல் எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன.

இப்போராட்டங்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்து வந்த அதிபர் ரூமென் ராதேவ், கடந்த ஜனவரியில் தனது பதவியில் இருந்து விலகினார். பின்னர், 'புரோக்ரசிவ் பல்கேரியா' எனும் புதிய அரசியல் கட்சி ஒன்றை தொடங்கி, இத்தேர்தலில் களம் கண்டார்; சுமார் 44.6 சதவீத வாக்குகளைப் பெற்று, தற்போது ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

2021 முதல் கடந்த 5 ஆண்டுகளில் 8-ஆவது முறையாக இந்நாட்டில் தேர்தல் நடைபெற்றுள்ளது. பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வந்த முன்னாள் பிரதமர் போய்கோ போரிசோவின் ஜிஇஆர்பி கட்சி 13.4 சதவீத வாக்குகளையும், ஐரோப்பிய ஆதரவு நிலைப்பாடு கொண்ட பிபி-டிபி கூட்டணி 12.6 சதவீத வாக்குகளையும் பெற்று தோல்வி அடைந்துள்ளன.

பல்கேரியாவின் முன்னாள் விமானப் படை அதிகாரியான ரூமென் ராதேவ், உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்குவதைக் கடுமையாக எதிர்த்து வருபவர். ரஷியாவிடம் இருந்து தடையின்றி எண்ணெய் மற்றும் எரிவாயு பெறுவதற்கும், அந்நாட்டுடனான உறவை மேம்படுத்துவதற்கும் இவர் முக்கியத்துவம் அளித்து வருகிறார். அதேநேரம், இவரின் வெற்றிக்கு ஐரோப்பிய யூனியன், ரஷியா ஆகிய இரு தரப்பிலும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைகள் உணவில் எலி விஷம்! விற்ற பொருள்களைத் திரும்பப் பெறும் தனியார் நிறுவனம்!

**வாஷிங்டன், ஏப்.22:**




குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் 'ஹிப்' என்கிற தனியார் நிறுவனத்தின் உணவு ஜாடிகள் சிலவற்றில் எலி விஷம் கலந்தது உறுதிப்படுத்தப்பட்டதால் அதனைத் திரும்பப் பெறுவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரியாவில் உள்ள ஸ்பார் எனப்படும் பல்பொருள் அங்காடியில் விற்கப்பட்ட 5 மாதக் குழந்தைகளுக்கான கேரட் மற்றும் உருளைக்கிழங்கு கலந்து தயாரிக்கப்படும்190 கிராம் கொண்ட ஹிப் நிறுவன உணவு ஜாடிகளில் எலி விஷம் கலந்திருப்பதாக சனிக்கிழமை (ஏப்ரல் 18) செய்த சோதனையில் தெரிய வந்தது.

இதுபற்றி ஹிப் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "தயாரிப்பு மற்றும் தரக் குறைபாடு காரணமாக நாங்கள் உணவுப் பொருள்களைத் திரும்பப் பெறவில்லை. எங்கள் தரப்பிலிருந்து பொருள்களை அனுப்புகையில் அவை நல்ல நிலையில் அனுப்பப்பட்டன. குற்றச் சம்பவம் காரணமாக விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில் அவை திரும்பப் பெறப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டனர்.

இதனை, வாடிக்கையாளர்கள் எவரேனும் வாங்கியிருந்தால் அவற்றைப் பயன்படுத்தும் முன்பு கவனிக்கவேண்டிய விஷயங்கள் பற்றி ஆஸ்திரியாவின் பர்கன்லாந்து காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. அதில், குறிப்பிட்ட ஜாடிகளின் அடிப்பகுதியில் சிவப்பு வட்டத்துடன் கூடிய வெள்ளை ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும் என்றும், அதனைத் திறக்கையில் வழக்கத்திற்கு மாறான கெட்டுப்போன வாசனை வீசும் என்றும், ஜாடியை முதன்முதலில் திறக்கும்போது வரவேண்டிய 'டப்' என்ற சத்தம் வராமல் போனாலும் அதனைக் கடைகளில் திரும்ப வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஸ்பார் பல்பொருள் அங்காடிகளின் பல்வேறு கிளைகளான ஸ்பார், யூரோஸ்பார், இண்டர்ஸ்பார் மற்றும் மேக்ஸிமார்க் போன்ற கடைகளில் விற்கப்பட்ட ஹிப் உணவுப் பொருள்களைத் திரும்பப் பெறுவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், ரசீது இல்லாமல் வாடிக்கையாளர்கள் முழுப் பணத்தையும் திரும்பப் பெறலாம் என்று ஹிப் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, அனைத்து குழந்தைகள் உணவுப் பொருள்களின் விற்பனையையும் ஸ்லோவாக்கியா மற்றும் செக் குடியரசில் உள்ள விற்பனையாளர்கள் நிறுத்தியுள்ளனர்.

ஆஸ்திரிய சுகாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ள தகவலின்படி, எலி விஷத்தை உட்கொண்டால் ஈறுகள் மற்றும் மூக்கில் இரத்தக் கசிவு, மலத்தில் இரத்தம் போன்ற பிரச்னைகள் ஏற்படக்கூடும் எனத் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும் அதனை உட்கொண்டு 2 முதல் 5 நாள்களில் இந்த அறிகுறிகள் உடலில் ஏற்படும். ஆனால், குழந்தைகள் இதனை உட்கொண்டால் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளதால் இது அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் நிறைவுபெற்றது!

# ‘48 மணி நேர அமைதி கால’ கட்டுப்பாடுகள் அமல்!



## வாக்காளர்களை தொந்தரவு செய்தால் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருக்க நேரிடும்

## தேர்தல் விடுமுறை: ஆம்னி பேருந்துகளில் கட்டணம் பலமடங்கு உயர்வு!

## ஈரானுடன் அமெரிக்கா 2-ம் கட்ட பேச்சு: ஜே.டி.வான்ஸ் பாகிஸ்தான் பயணிப்பதாக தகவல்

## எலான் மஸ்க்கு பிரான்ஸ் கோர்ட்டு சம்மன்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

22.04.2026 புதன்கிழமை

இலவச இ-பேப்பர்